REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 மார்ச் 14 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 62 | Tuesday 14, March, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## தேர்தலுக்கு முன்னர்

# நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும்



வரவு செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதா? என்பதை தேர்தல் ஆணைக்குழு பரிசீலிக்க வேண்டும். தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்னர் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதும் அவசியம் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா, உடுகம்பல பிரதேசத்தில் நடைபெற்ற அரசியல் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை (13) தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு 06

# A/L விடைத்தாள் திருத்தப் பணிகளுக்கு மேலும் 6,000 ஆசிரியர்கள் பற்றாக்குறை

## கொடுப்பனவுகளை அதிகரித்தும் போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை



(லோரன்ஸ் செல்வநாயகம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகளுக்காக மேலும் 6,000 ஆசிரியர்களுக்கான தேவைகள் நிலவுவதாக பரீட்சைகள் ஆணையாளர் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

விடைத்தாள் திருத்தப் பணிகளுக்காக 20,000 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். எனினும்13,000 ஆசிரியர்களே இதுவரை விண்ணப்பித்துள்ளனர். கடந்த 08 ஆம் திகதியுடன் ஒன்லைன் மூலமாக விண்ணப்பிக்கும் திகதி நிறைவுபெற்றது. 06



கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபையின் தீர்மானத்திற்கமைவாக நடராஜர் பணிக் குழுவினால் ஆனையிறவு பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 27 அடி உயரமான நடராஜர் சிலை நேற்றுமுன்தினம் முற்பகல் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டபோது....

# மலையகத்துக்கான 4,000 தனிவீட்டுத் திட்டம் எஞ்சிய வீடுகளை நிர்மாணிக்க ஒப்பந்தம்

## இந்திய உயர்ஸ்தானிகருடன் அமைச்சர் ஜீவன் கைச்சாத்து

- புதிய சூழலில் ஒரு வீட்டுக்கு
- 28 இலட்சம் தேவை என மதிப்பீடு
- திட்டம் முழுமைப்படுத்தப்பட்ட பின்னர்
- 10,000 வீட்டுத்திட்டம் விரைவில்



இந்திய அரசாங்கத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் மலையகத்துக்கான 4,000 தனி வீட்டு திட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் உடன்படிக்கை இந்திய தூதரகத்தில் நேற்று கைச்சாத்திடப்பட்டது. அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்த இந்த இந்திய வீடமைப்பு திட்டம், மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான, மேலதிக நிதியை 06

# தொழில்சார் சட்டத்துறையில் 50 வருடங்கள் ஜனாதிபதிக்கு "அபிநந்தன" விருது



தொழில்சார் சட்டத்துறையில் 50 வருடங்கள் பணியாற்றிய இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களைப் பாராட்டும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட “அபிநந்தன விருது விழா” (12) இரவு கொழும்பு, சினமன் கிரான்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

இதன்போது, 50 வருட தொழில்சார் சட்டப் பணியை நிறைவு செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கௌரவம் வழங்கப்பட்டது.

இதற்கமைய பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய ஜனாதிபதிக்கு “அபிநந்தன விருது” வழங்கி ஜனாதிபதியை கௌரவித்தார். கொழும்பு சினமன் 06

# திறைசேரி உண்டியல்களை ஏலத்தில் விட மத்திய வங்கி தீர்மானம்

## ரூ.1,20,000 மில்லியன் திறைசேரி உண்டியல்கள் விற்பனை



திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் இம்மாதம் 15 இல், இந்த உண் டியல்கள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன. அன்றைய தினம் (15) ஒரு இலட்சத்து 20,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தை கொண்ட 50,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வு காலத்தை கொண்ட 35,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்களும், 364 நாட்கள் முதிர்வு காலத்தை கொண்ட 35,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்களும் ஏலமிடப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# அத்தியாவசிய மருந்துப் பொருட்களை அதிக விலையில் கொள்வனவு செய்வதாக வதந்தி

## அத்தகைய தீர்மானங்கள் எதையும் எடுக்கவில்லை வெளியான செய்திகளையும் மறுக்கிறார் அமைச்சர்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சுகாதார அமைச்சு சில அத்தியாவசியமான மருந்துப்பொருட்களை அதிக விலைக்கு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாக பத்திரிகையில் வெளியான செய்தி முற்றிலும் உண்மைக்குப் 06



# நூறு கோடி டொலர் கடனில் ஸ்ரீலங்கன் விமான நிறுவனம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் 100 கோடிக்கு அதிகமான அமெரிக்கன் டொலரை கடன் செலுத்த வேண்டியுள்ளதாக துறைமுக, கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள், அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

அந்நிறுவனம் லீசிங் தவணை செலுத்த வேண்டியுள்ளதுடன் வங்கிகளுக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் கோடிக்கணக்கான கடனை செலுத்த வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். 06

## 'நாட்டு நாட்டு' பாடல் ஒஸ்கார் விருதை வென்றது



சிறந்த பாடலுக்கான ஒஸ்கார் விருதை RRR திரைப்படத்தின் “நாட்டு நாட்டு” பாடல் வென்றுள்ளது. இயக்குநர் ராஜமவுலி இயக்கத்தில் கடந்தாண்டு வெளியான ‘ஆர்ஆர்ஆர்’ திரைப்படம் உலகம் முழுவதும் 1,200 கோடியை வசூலித்திருந்தது.

இப்படத்தில் ஜூனியர் என்டிஆர், ராம் சரண், அஜய் தேவ்கன், ஆலியா பட், ஸ்ரேயா சரண் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். படத்திற்கு எம்.எம். கீரவாணி இசையமைத்திருந்தார்.

இதேவேளை, நீலகிரி மாவட்டம் முதுமலையில் யானைகளை பராமரிக்கும் தம்பதியின் கதையைக் கொண்ட “தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்” என்ற ஆவணப்படமும் ஒஸ்கார் விருதை வென்றுள்ளது. 06



தங்கத்தின்விலை மீண்டும் மாற்றம் 03



விமல் வீரவன்சவை கைது செய்ய நீதிமன்று பிடியாணை 03

# வசந்த முதலிகேவுக்கு யாழ்.பல்கலை மாணவர்கள் தகுந்த பதிலடி!

## யதார்த்தத்தை உணர்த்தியிருக்கும் என மனோ எம். பி புகழாரம்



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்க்க யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களும் இணைய வேண்டுமெனத் தெரிவித்த வசந்த முதலிகேவுக்கு, தக்க பதிலடி வழங்கிய யாழ். மாணவர்களை பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் பாராட்டியுள்ளார். தமிழர்களின் சுமார் 44 வருடப் போராட்டத்தை கண்டுகொள்ளாது உறக்கத்திலிருந்த வசந்த முதலிகேவுக்கு, யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பதிலடி உறைக்க வைத்திருப்பதுடன், யதார்த்தத்தையும் உணர்த்தியிருக்கும் என்றும் மனோகணேசன் எம்.பி தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் தெரிவித்துள்ளதாவது,

“பயங்கரவாத தடை சட்டத்தை எதிர்க்க யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் இணைய வேண்டுமென, அனைத்து பல்கலைக்கழக ஒன்றிய 06

# ஹரக் கட்டா, குடு சலிந்து ஆகியோரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரிக்கத் தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

**தொடர்புள்ளதாக சந்தேகிக்கப்படும் பொலிஸார் மீதும் நடவடிக்கை**

மடகஸ்காரிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவுள்ள போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் பிரபல பாதாள உலக நபர்களான ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகிய இருவரையும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றத்தடுப்பு விசாரணை பிரிவு திணைக்களத்தின் பொறுப்பில் வைத்து விரிவான விசாரணைகளை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

அதுதொடர்பில் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் பிரதி பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்க மற்றும் அந்தத் திணைக்களத்தின் பணிப்பாளர் காவிந்த பியசேகர ஆகியோருடனும் நேற்று மாலை 06

## மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின்

# தொழிற்சங்க நடவடிக்கையால் நோயாளர்கள் பெரும் அவதி

அரசாங்கத்தின் வரிக் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அதனை மீள பெறுமாறு வலியுறுத்தியும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று திங்கட்கிழமை நான்கு மாகாணங்களில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டன.

இச்சங்கம் நேற்று முதல் நான்கு மாகாணங்களில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால், மேல், தென், கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ள சுகாதார நிலையங்கள், வைத்தியசாலைகள் உட்பட சகல மருத்துவ சேவை நிலையங்களின் வைத்தியர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று திங்கட்கிழமை (13) காலை 08 மணிமுதல் ஆரம்பித்த இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக டிக்கோயா ஆதார 06

# புனித பற்றிக் பண்டிகைக்காக பச்சை நிறமாக மாற்றப்பட்ட ஆறு

## அமெரிக்காவில் சம்பவம்

அமெரிக்காவிலுள்ள சிக்காகோ ஆறு, புனித பற்றிக் பண்டிகையை ஒட்டி பச்சை நிறமாக மாறி, பார்வையாளர்களை பரவசப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவிலுள்ள இலினாய்ஸ் மாகாணத்தில், 05ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மதகுருவான புனித பற்றிக்கை நினைவு படுத்தும் வகையில், ஆண்டுதோறும் மார்ச் 17ஆம் திகதி புனித பற்றிக் தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த கொண்டாட்டத்தின்போது, இங்குள்ள மக்கள் பச்சை நிற ஆடை அணிவதை வழக்கமாகக் கொள்வர். இதன் ஒரு பகுதியாக, சிக்காகோ நகரில் பாயும் சிக்காகோ ஆற்றை பச்சை நிறமாக மாற்றும் பணி நடந்தது.

பெரிய படகுகளில் எடுத்துவரப்பட்ட மோட்டார்கள் வாயிலாக பச்சை நிற சாயம் ஆற்றில் கலக்கப்பட்டது. பச்சையாக மாறியுள்ள சிக்காகோ ஆற்றைக் காண, உள்ளூர் மக்கள் மட்டுமின்றி, சுற்றுலா பயணிகளும் ஆர்வமுடன் குவிந்தனர். வண்ணமயமாக மாறிய ஆற்றைக் காண வந்தவர்கள், தங்கள் செல்லப் பிராணிகளான நாய்களுக்கும் பச்சை நிறம் பூசி மகிழ்ந்தனர்.

கடந்த 1962ஆம் ஆண்டு முதல் ஆற்றில் பச்சை சாயம் பூசுவது நடந்து வருகிறது. கடந்த 2020ஆம் ஆண்டு கொரோனா பாதிப்பு காரணமாக புனித பற்றிக் தினக் கொண்டாட்டம் தடைபட்டு, ஆற்றில் சாயம் கலப்பது நிறுத்திவைக்கப்பட்டது.

இவ்வாறு சாயம் பூசுவதால், குறைந்தது ஒரு வாரத்துக்காவது இந்த ஆறு, பச்சை நிறமாகக் காட்சியளிக்கும்.

# G.C.E. O/L பரீட்சையை ஒத்திப்போட நேரலாம்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மே, மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள க.பொ.த சாதாரணதரப் பரீட்சையை ஒத்திப்போடவேண்டி ஏற்படலாமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படாதுள்ள நிலையில், தற்போது அந்தப் பணிகள் இரண்டு வாரங்கள் தாமதமாகியுள்ளன. இதை நினைவு கூர்ந்த அமைச்சர், அந்த செயற்பாடுகள் மேலும் தாமதமானால் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையை ஒத்திப்போடவேண்டி நேரும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரண்டு பரீட்சைகளுக்கிடையில் மூன்று மாத கால இடைவெளி அவசியமென்றும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையை நடத்துவதற்கு அந்தக் கால இடைவெளி தேவைப்படுமென்றும் கல்வியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இத்தாலி நடுக்கடலில் உயிருக்கு தத்தளித்த

# ஆயிரம் அகதிகள் அதிரடியாக மீட்பு

துருக்கி, எகிப்து உள்ளிட்ட நாடுகளில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பலர், சட்ட விரோத பயணம் மேற்கொண்டு இத்தாலிக்கு அகதிகளாக தஞ்சம் அடைகின்றனர்.

கடல் மார்க்கமாக ஆபத்தான முறைகளில் மேற்கொள்ளப்படும் பயணங்கள், பல நேரங்களில் விபத்தில் முடிந்து விடுகின்றன.

அந்த வகையில் கடந்த 02 வாரங்களுக்கு முன்பு இத்தாலியின் கலபிரியா பகுதியில், அகதிகள் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் 02 குழந்தைகள் உட்பட 76 பேர் உயிரிழந்தனர். இதனையடுத்து இத்தாலி கடலோர காவல் படையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இத்தாலிக்கு வந்து கொண்டிருந்த சில அகதிகள் நடுக்கடலில் சிக்கித்தவித்ததாக கடலோர காவல் படையினருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, விரைந்து சென்ற கடலோர காவல் படையினர் நடுக்கடலில் படகுகளில் சிக்கித்தவித்த அகதிகளை பத்திரமாக மீட்டனர்.

இதுவரை 1,000க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக, அந் நாட்டின் அரசாங்கம் தெரிவித்துள்ளது. மேலும் இந்த மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

## மின்சார சபை மறுசீரமைப்பு திட்டம்

# தொழிற்சங்கங்களுடன் அமைச்சர் கஞ்சன விசேட கலந்துரையாடல்

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் செயற்பாடுகள் தொடர்பில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கரவுக்கும், மின்சார சபை தொழிற்சங்கங்களுக்குமிடையில் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

அமைச்சு வளாகத்தில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கை மின்சார சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல தொழிற்சங்கங்களும் இதில் கலந்து கொண்டன.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் செயற்பாடுகள் தொடர்பில் அமைச்சர், இங்குள்ள தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்துள்ளார்.

அமைச்சர் முன்வைத்த சில விடயங்கள் தொடர்பில் தொழிற்சங்கங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மறுசீரமைப்பு தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளில், தொழிற்சங்கங்களின் முன்மொழிவுகளை கலந்தாலோசிக்குமாறும் அங்குள்ள தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அநுராதபுரம் சென்ற யாழ். தேவி ஒறுகொடவத்தையில் தடம் புரள்வு

## பாதை மாறுகையில் சம்பவம்

கொழும்பு, கோட்டையிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த யாழ்.தேவி கடுகதி ரயில், ஒறுகொடவத்தை பகுதியில் தடம் புரண்டதால், புத்தளம் பிரதான பாதை மற்றும் புத்தளம் மார்க்கத்தில் பயணிக்கும் ரயில்கள் தாமதமாகலாமென ரயில்வே திணைக்களம் நேற்று அறிவித்திருந்தது.

மும்முனைப் பகுதியில் மூன்றாவது தண்டவாளத்தில் சென்று கொண்டிருந்த இந்த ரயில், இரண்டாவது பாதைக்கு மாறிச் செல்லும்போதே தடம் புரண்டது.

இதனால், இரண்டாவது மற்றும் மூன்றாவது ரயில் பாதைகளின் போக்குவரத்து முற்றிலும் தடைபட்டது.

ஒரே வழித்தடத்தில் ரயில்கள் இயக்கப்பட்டதால், பல அலுவலக ரயில்கள் தாமதமாகி, அலுவலக ஊழியர்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாகினர்.

## கண்டி-மடவளை-மாத்தளை

# பிழையான தகவல்களுடன் அறிவித்தல் பலகைகள்

கண்டி மாவட்டத்தில் உள்ள மடவளை தெல்தெனிய வீதியில் அமைக்கப்பட்டுள்ள பெயர்ப்பலகையில் பாரிய தவறு உள்ளதால், பயணிகள் திக்குமுக்காடுகின்றனர்.

கண்டியிலிருந்து மாத்தளைக்கு சுமார் 30 கிலோ மீற்றர் உள்ள நிலையில், இந்த அறிவிப்பு பலகையில் 10.5 கிலோ மீற்றரென குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், மடவளையிலிருந்து மாத்தளைக்கு சுமார் 20 கிலோ மீற்றர் இருக்கையில், மேற்படி அறிவிப்பு பலகை 02 கிலோ மீற்றர் எனக் காட்டுவதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

# பொன்மாலைப் பொழுது Unwind இசை நிகழ்ச்சி



தென்றல் எப்.எம்மின் அறிவிப்பாளரும் பொன்மாலைப் பொழுது ஏற்பாட்டாளருமான முஹம்மட் இர்பானின் தென்றல் எப்.எம்.மின் பொன்மாலைப் பொழுது Unwind இசை நிகழ்ச்சி எதிர்வரும் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனந்த சமரகோன் கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

நம் நாட்டின் முன்னணி இசைக் கு ழு வி ன ரின் இசையில் முன்னணி பாடக, பாடகிகள் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்ச்சி தினகரன், வாரமஞ்சரி ஊடக அனுசரனையுடன் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கான அனுமதி முற்றிலும் இலவசம். இதில் குடும்பத்தோடும் நண்பர்களோடும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைக்கிறார்கள்.



## தவக்கால சிந்தனை



### மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள்"

**(மத்தேயு 18: 21 – 35)**

மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள் என்பதே கிறிஸ்தவ போதனையாகும். இறை மன்னிப்பினை வாழ்வில் பெறவிரும்புகின்றவர்கள் முதலில் சகோதர மன்னிப்பினை நாடவேண்டும், கொடுக்க வேண்டும்.

ஏழேழு ஜென்மத்துக்கும் மன்னிக்க மாட்டேனென்று சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இன்றைய நற்செய்தியின் வாயிலாக இயேசுகிறிஸ்து ஏழு முறை மட்டுமல்ல, ஏழு முறை எழுபது தடவை மன்னிக்க வேண்டுமெனக்கூறி எல்லையற்ற மன்னிப்புக்கு மானிட சமூகத்தை அழைத்து நிற்கின்றார்.

கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்து கற்பித்த இறைவேண்டலில் கூறப்படுவது யாதெனில் 'எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பதுபோல் எங்கள் குற்றங்களையும் மன்னியும்'என்பதாகும்.

கிறிஸ்தவ வாழ்வுப்பயணமானது மன்னிப்பு வாழ்வுப் பயணமாகும். இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்குகின்றபோது வசனித்த ஒரு வசனம் 'தந்தையே இவர்கள் அறியாமற் செய்கிறார்கள், இவர்களை மன்னியும்'என்றுகூறி தனக்கெதிராக அறிந்து, தெரிந்து குற்றம் புரிந்தவர்களை மன்னித்தார் என்பது அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயமாகும்.

அவ்வாறு தனக்கெதிராக குற்றம் புரிந்தவர்களை இயேசுவால் மன்னிக்க முடிந்ததுபோன்று அவரைப் பின்பற்றுகின்ற அவரது நம்பிக்கையாளர்களும் வாழ்வில் எல்லையில்லாத அளவுக்கு மன்னிக்க வேண்டும்.

மன்னிப்பில்தான் கிறிஸ்தவம் மிளிர்கிறது.

அருட்தந்தை நவாஜி...

# எரிபொருள் விநியோகத்தை விரிவுபடுத்த முறையான வேலைத்திட்டம் விரைவில்

## எரிபொருள் இறக்குமதி, விநியோகம், சேமிப்பு நடவடிக்கைகளில் முதலிட சினோபெக் குழுமம் முன்வருகை



எரிபொருள் விநியோகத்தை விஸ்தரிக்க அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும், இதற்கான முறையான வேலைத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று (13) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தேவைக்காக எரிபொருள் இறக்குமதி, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றில் முதலீடு செய்வதற்கு தமது நிறுவனம் தயாராக இருப்பதாக சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அதற்காக, தற்போதுள்ள முறைமைக்கு அமைவாக தமது நிறுவனம் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவித்த நிறுவனத்தின் பிரதிநிதிகள், அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ள ஹம்பாந்தோட்டையில் பிரதான வலுசக்தி மையத்தை, சுத்திகரிப்பு நிலையத்துடன், நிர்மாணிக்கத் தேவையான முழு முதலீட்டையும் தமது நிறுவனம் செய்யத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

எதிர்காலத்தில், நாட்டின் அபிலாஷைகளின் அடிப்படையில் உரிய அழைப்புகளுக்குப் பங்கேற்க தமது நிறுவனம் தயாராக இருப்பதாகவும் பிரதிநிதிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சேமிப்பு மற்றும் விநியோகம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சினோபெக் நிறுவனத்தின் பிரதிநிதிகள், அது குறித்து தமது ஆலோசனைகளையும் ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தின் பின்னர், இலங்கை துரித அபிவிருத்தியை எதிர் பார்க்கிறது.

06

# பஸ்களில் ஏற்றிச் செல்லாததால் பரீட்சைக்குச் செல்ல முடியாமல் மாணவர்கள் தவிப்பு

மாணவர்களை பஸ்களில் ஏற்றிச் செல்லாததால், பரீட்சைக்கு செல்ல முடியாது வீதிகளில் தவித்து நிற்க வேண்டிய நிலைக்கு உள்ளாகினர்.

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் பனிக்கன்குளம், கிழவன்குளம் பகுதிகளை சேர்ந்த பாடசாலை மாணவர்களே இந்நிலைக்கு உள்ளாகினர். இவ்வாறு பொறுப்பின்றி நடந்து, மாணவர்களை அலைக்கழிய வைத்தோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஏ 9 வீதியில் அதிகளவான போக்குவரத்து சேவைகள் இடம்பெறுகின்ற நிலையிலும், மாணவர்களுக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், பாடசாலை மாணவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

இது தொடர்பாக பல்வேறு தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டும், எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.

பாடசாலையில் பரீட்சை நடைபெறுகின்ற இக் காலகட்டத்தில் நேற்று (13) காலை 8.12 மணிவரை, மாணவர்களை எந்த பஸ்களும் ஏற்றாமல் சென்றுள்ளன.

இதனால், தவித்து நின்ற மாணவர்களை, மாங்குளம் போக்குவரத்து பொலிஸார் பொறுப்பேற்று அழைத்துச் சென்றனர்.

மாணவர்களைப் புறந்தள்ளி இடம்பெறும் போக்குவரத்து சேவைகள் தொடருமானால்,அதை எதிர்த்து போராட்டம் நடத்தப்படுமென எச்சரிக் கையும் விடுக்கப்பட்டுள்ளது.

# "பரிப்புவா" மீது துப்பாக்கி சூடு நடத்திய மூவர் கைது

வெல்லம்பிட்டி கொட்டுவில பிரதேசத்தில் திட்டமிட்ட குற்றச் செயல் கும்பலைச் சேர்ந்த, மானவடுகே அசங்க என்று அழைக்கப்படும் "பரிப்புவா" என்பவரை கொலை செய்ய முயற்சித்த சம்பவம் தொடர்பில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்ட விசாரணைக்கமைய இவர் கள் கைதானதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

நடத்தப்பட்ட விசாரணைக்கமைவாக கொலைக்கு உடந்தையாக இருந்த இரண்டு சந்தேகநபர்கள் கைதானதுடன், துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளின் சாரதியும் கடுவெலபோம்பிரிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் கைவிடப்பட்ட நிலையில், பொரளை பிரதேசத்தில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட 28 மற்றும் 34 வயதுடைய மூன்று சந்தேக நபர்களும் நேற்று (13) அளுத்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவிருந்தனர்.

## சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்கிற்கு ஜனாதிபதி ரணில் வாழ்த்து

மூன்றாவது பதவிக்காலத்துக்காகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிற்கு ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அவரது தலைமையில் சீனா அடைந்துள்ள முன்னேற்றத்தையும் ஜனாதிபதி பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பொருளாதார சவால்களுக்கு மத்தியில், குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாட்டில், சீனா அளித்துவரும் ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி,

06

# விமல் வீரவன்சவுக்கு நீதிமன்றம் பிடியாணை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான விமல்வீரவன்சவைக் கைதுசெய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் இளவரசர் செயித் அல்ஹூசேன், நாட்டுக்கு விஜயம் செய்த போது ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தியிருந்தார். இச்சம்பவத்தின் பேரில் இடம்பெற்று வரும் வழக்கு தொடர்பிலே, அவரைக் கைதுசெய்து, நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று (13) பிடியாணை பிறப்பித்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணை நீதிமன்றத்தில் நேற்று (13) இடம்பெற்றது.

இவ்வழக்கிற்கு முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச நீதிமன்றத்திற்கு சமூகமளிக்காத நிலையிலேயே,அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை முன்னாள் மனித உரிமை ஆணையாளர்,செயித் அல் ஹூசேன் இளவரசர் நாட்டுக்கு விஜயம் செய்தார்.

06

# தங்கத்தின் விலை மீண்டும் மாற்றம்



தங்கத்தின் விலை கடந்த வாரத்தில் வேகமாக வீழ்ச்சியடைந்த போதும், தற்போது மீண்டும் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, நேற்று (13) காலை புறக்கோட்டைசெட்டியார் தெரு தங்கச் சந்தையில் 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை ரூ. 160,000 ஆக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை (09) 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை ரூ. 134,000 ஆகக் குறைந்தது.

இதனிடையே கடந்த வியாழக்கிழமை 24 காரட் தங்கம் ஒரு பவுணின் விலை ரூ. 145,000 ஆகக் காணப்பட்டிருந்தது. தற்போது 1,73,000 ரூபாவாக அதிகரித்துள்ளதாக புறக்கோட்டைசெட்டியார் தெரு தங்க சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை 9.6 வீதம் அதிகரிப்பு

நாட்டில், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. மார்ச் மாதத்தின் முதல் 06 நாட்களில் மாத்திரம் சுமார் 25,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாகவும் இந்த எண்ணிக்கை முதல் 08 நாட்களுக்குள் 30,000 ஆக அதிகரித்ததென்றும், அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 9.6 வீதம் அதிகரித்துள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, இவ்வருடத்தின் முதலிரண்டு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 2,10,184 ஆக பதிவாகியுள்ளது. அதற்கமைய ஜனவரியில் 1,02,545 சுற்றுலாப்பயணிகளும், பெப்ரவரியில் 1,07,639 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இதேவேளை, கடந்த 2022ஆம் ஆண்டில் மொத்தமாக 7,19,978 சுற்றுலாப் பயணிகளே வருகை தந்திருந்தனர்.

ரஷ்யாவிலிருந்தே, அதிகளவான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளனர். அங்கிருந்து 29,084 பேர்,நாட்டுக்கு வந்துள்ளனர்.மேலும் இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவானோர் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

# மஹிந்தானந்த MPயை திருப்பியனுப்பிய விவகாரம்

## விசாரணையை ஆரம்பிக்கிறது குடிவரவு திணைக்களம்

வெளிநாட்டு பயணத்துக்காக விமான நிலையத்துக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேவை திருப்பி அனுப்பியமை தொடர்பில், விசாரணைகள் நடைபெற்று வருவதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவரது கடவுச்சீட்டு தரவுகளுடன் தொடர்புடைய வேறு ஒருவரின் தரவுகள் உள்ளடக்கப்பட்டமையால், அவருக்கு இந்நிலை ஏற்பட்டதாக திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இத் தகவல்களை கணினியில் உள்ளீடு செய்த அதிகாரியின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் இலங்கை கணினி அவசர பதில் பிரிவு என்பன, விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

# திசைகாட்டியில் போட்டியிட்டாலும் ஜே.வி.பியின் பின்னணி மாறாது

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உயிர்களை காப்பாற்றிய கட்சி. மக்களைக் கொன்ற தலைவர்கள் எமது கட்சியில் இல்லை. மக்கள் விடுதலை முன்னணி திசைக் காட்டியில் போட்டியிட்டாலும் அதன் பின்னணியை மாற்றி விட முடியாதென "அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, எந்தவொரு தருணத்திலும் மக்களின் உயிர்களை பாதுகாக்கவே பாடுபட்டுள்ளது.

"எங்கள் கட்சி உறுப்பினர்களை துன்புறுத்தியவர்களுக்கு முறையாகவோ அல்லது அதிகாரப்பூர்வமற்ற முறையிலோ இழப்பீடு வழங்க வேண்டும். மக்கள்

06

# சூப் பக்கற்றுகள் போன்று கொகெய்ன் கடத்தல் முயற்சி

## மெசடோனியா பிரஜை கைது

சூப், பக்கற்றுகள் போன்று நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சுமார் 350 கிராம் கொகெய்ன் போதைப் பொருளை, சுங்க அதிகாரிகள் விமான நிலையத்தில் கைப்பற்றியுள்ளனர், பிரேஸிலிலிருந்து வருகை தந்த மெஸிடோனிய பிரஜை ஒருவரிடமிருந்து இது கைப்பற்றப்பட்டது.

சுங்கத்தின் போதை பொருள் கட்டுப்பாட்டு பிரிவினர், இவரைச் சோதனை செய்தபோது அவரின் பயண பொதியில்

06





National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.03.12
www.nlb.lk

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
| --- | --- | --- | --- | --- |
| மஹஜன சம்பத | 5057 | ரூ. 10,851,209.00 | H | 0 6 7 1 8 3 |
| கொவிசெத | 3299 | ரூ. 86,046,224.00 | W | 03 14 63 67 |
| தன நிதானய | 1087 | ரூ. 80,384,865.20 | G | 26 36 53 74 |
| மெகா பவர் | 1405 | ரூ. 307,188,526.00 | J | 21 01 11 20 61 |
| ஜாதிக சம்பத | 1512 | ரூ. 10,547,132.00 | | 6 9 2 5 4 2 |
| ராசி சுப மலன் | 366 | ரூ. 3,174,721.20 | | 22 49 51 53 |

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 203.45 | 218.35 |
| கனடியன் டொலர் | 223.17 | 239.59 |
| யூரோ | 328.39 | 349.71 |
| ஜப்பான் யென் | 2.2763 | 2.4249 |
| சிங்கப்பூர் டொலர் | 228.62 | 244.11 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 370.07 | 393.49 |
| சுவிஸ் பிராங்க் | 332.65 | 356.98 |
| அமெரிக்க டொலர் | 311.62 | 328.90 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹரின் டினார் | 845.12 | கட்டார் ரியால் | 87.33 |
| குவைத் டினார் | 1,036.67 | சவூதி ரியால் | 84.87 |
| ஓமான் ரியால் | 827.60 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 86.74 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 30ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 21

### குறள் தரும் சிந்தனை



வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது

*நல்வழி நாடாமல், பொருத்தமானதைச் செய்யாமல், பழிக்கு அஞ்சாமல், பண்பும் இல்லாமல் ஒருவன் இருந்தால் அவன் பகைவரால் எளிதில் வெல்லப்படுவான்.*

## நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் கொண்டுள்ள தார்மிக பொறுப்பு

இலங்கை கடந்த வருடம் ஆரம்பமானதுடன் அந்நிய செலாவணி பற்றாக்குறையோடு பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்கலானது. அதனைத் தொடர்ந்து பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு நெருக்கடிகளுக்கும் மக்கள் முகம்கொடுக்கும் நிலைமை உருவானது. குறிப்பாக எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலைமை ஏற்பட்டது. அதேநேரம் மணித்தியாலயக் கணக்கில் தினமும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களது விலைகளும் அதிகரித்தன.

இந்நெருக்கடி அதே வருடம் மே முதல் ஜுலை வரை தீவிர நிலையை அடைந்திருந்தது. இதன் விளைவாக இப்பொருளாதார நெருக்கடிக்கு தீர்வும் நிவாரணமும் கோரி மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தும் அளவுக்கு நிலைமை உருவானது. அத்தோடு அரசியலிலும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டது. நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருந்தது.

இந்நிலையில் அன்றைய பிரதமர் உட்பட அமைச்சரவை பதவி விலகியதோடு சொற்ப காலத்தில் ஜனாதிபதியும் பதவியை இராஜிநாமா செய்தார்.

இவ்வாறான சூழலில் ஜுலை மாதத்தின் பிற்பகுதியில் நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார். அவர் இப்பதவியை ஏற்றதும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளித்து வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கலானார். அதன் பிரதிபலன்களை மக்கள் குறுகிய காலத்திற்குள் அனுபவிக்கத் தொடங்கினர். குறிப்பாக எரிபொருள் மற்றும் எரிவாயுக்கு நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருக்கும் நிலைமை முடிவுக்கு வந்தது. அத்தோடு எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருட்களுக்கு அவ்வப்போது விலை குறைப்பும் செய்யப்படலானது. நெல் அறுவடை உட்பட மரக்கறி செய்கையிலும் திருப்திகரமான அறுவடை கிடைக்கப் பெற்றுள்ளன. அதனால் மரக்கறிகளின் விலைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க, ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதி கடந்த சில தினங்களாக தொடராக வீழ்ச்சி அடைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தும் சாதகமான பதில்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் பலனளிக்க ஆரம்பித்து விட்டன. அதன் பயனாக கடந்த வருடம் நிலவிய பொருளாதார ரீதியிலான அசௌகரியங்கள், தாக்கங்கள் தற்போது பெரும்பாலும் நீங்கியுள்ளன. இந்நிலையில் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்புக்களும் ஏற்பட்டுள்ளன. அவை நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று வருகின்றன.

இவ்வாறான சூழலில் சில தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பது ஆரோக்கியமானதல்ல என்பதுதான் மக்களின் கருத்தாகும். கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாடு கட்டம் கட்டமாக மீட்சி அடைந்து கொண்டிருக்கும் சூழலில், தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கான முயற்சிகளில் ஈடுபடுவதும் அவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் நாட்டை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிவிடவே வழிவகுக்கும் என்று மக்கள் கூறுகின்றனர்.

தற்போதைய சூழலில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது நாட்டினதோ மக்களினதோ நலன்களில் அக்கறை கொண்டவர்களின் செயற்பாடுகளாக இருக்கவே முடியாது. இத்தொழிற்சங்க நடவடிக்கைகளும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மைகளைப் பெற்றுத்தரப் போவதுமில்லை. மாறாக பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை சீர்குலைக்கவே வழிவகுக்கும். அதனால் இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு முழுமையாக மீட்சி பெற அனைத்துத் தரப்பினரும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அதற்கான பொறுப்பு தொழிற்சங்கங்களுக்கும் உள்ளது.

சில தொழிற்சங்கங்கள் மக்களை தொடர்ந்தும் பொருளாதார நெருக்கடிக்குள் வைத்திருக்க எதிர்பார்ப்பதாகவே தெரிகிறது. அதற்கான ஆயுதமாகவே தொழிற்சங்க நடவடிக்கையைப் பயன்படுத்த முயற்சிப்பதாகவும் தெரிகிறது. இவற்றின் ஊடாக அற்ப அரசியல் இலாபங்களை அடைந்துகொள்ள சில அரசியல் கட்சிகளும் காத்திருப்பதாகத் தெரிகிறது. தம்மை நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாக்கி அற்ப அரசியல் இலாபம் அடைய சில தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் முயற்சிப்பதை மக்கள் அறியாதவர்களும் அல்லர். நாட்டினதும் மக்களினதும் நலன்களில் அக்கறையும் கரிசனையும் கொண்ட எவரும் தற்போதைய சூழலில் தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவோ பங்களிக்கவோ நல்க மாட்டார்கள்.

நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுவதில் தொழிற்சங்கங்கள் கவனம் செலுத்த வேண்டும். அதுவே பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் விரைவாக மீட்டெடுக்க அளிக்கும் பங்களிப்பாக அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# மலையக மாணவர்களுக்கு அவுஸ்திரேலியாவில் இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் உதவி

அவுஸ்திரேலியாவிலிருந்து கடந்த 35 வருடகாலமாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் (1988 – 2023) ஏற்பாட்டில் மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டில் வாழும் வறிய நிலையில் உள்ள தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் நிதிக்கொடுப்பனவு இவ்வாண்டும் அண்மையில் வழங்கப்பட்டது.

கடந்த காலங்களில் இலங்கையில் வடக்கு – கிழக்கில் நீடித்த போர் அனர்த்தங்களினால் பெற்றோரை, குடும்பத்தின் மூல உழைப்பாளிகளை இழந்த வறிய தமிழ் மாணவர்களுக்கு உதவிய இலங்கை மாணவர் கல்வி நிதியம், மலையகத்தில் முன்னைய மண்சரிவு முதலான அனர்த்தங்களினாலும் தந்தையை இழந்தும் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டில் வாழும் மாணவர்களுக்கும் தற்போது உதவி வருகிறது.

நுவரெலியா மாவட்டத்தில் நானுஓயா நாவலர் கல்லூரி, டெஸ்ஃபோர்ட் தமிழ் மகா வித்தியாலயம், கந்தப்பளை மெதடிஸ்ட் கல்லூரி மற்றும் மகளிர் பாடசாலை (Our Lady' School ), ஆரம்பப் பாடசாலை முதலானவற்றைச் சேர்ந்த மாணவர்கள் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர்.





மலையக சமூக அபிவிருத்தி நிறுவனம் (Plantation Community Development Organization) அவுஸ்திரேலியாவிலிருந்து இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் தொடர்பாளர் அமைப்பாக இயங்கி வருகிறது.

இந்த அமைப்பு, கடந்த 2015 ஆம் ஆண்டு முதல், மலையக தாய்மாருக்கான விழிப்புணர்வு , பாடசாலை மாணவர்களுக்கான ஊக்கப்படுத்தல், முன்பள்ளி உதவிகள், பொதுப்பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கான மாதிரி பரீட்சை வினாத்தாள் வழங்குதல், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான கள ஆய்வுகள் முதலான வேலைத்திட்டங்களில் இயங்கி வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு நிகழ்ச்சி, மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் கே. அரியமுத்து தலைமையில் அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்களின் தாய்மார் முன்னிலையில் நடைபெற்றது.

**லெ.முருகபூபதி...**
*அவுஸ்திரேலியா.*

# கண்டி மாநகரில் முச்சக்கரவண்டிகளின் சேவைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை

கண்டி மாநகரசபையின் எல்லைக்குள் இயங்கும் அனைத்து வாடகை முச்சக்கரவண்டிகளையும் முறையான கட்டுப்பாட்டின் மூலம் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையொன்று தற்பொழுது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்வதற்கென்று பாதுகாப்பான மற்றும் நட்புறவான சேவையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து வாடகை முச்சக்கரவண்டிகளையும் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



மேலும் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு முச்சக்கரவண்டியின் சாரதியின் அடையாளத்தையும் தொலைபேசி இலக்கத்தையும் தெளிவாகக் காண்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், பொதுவான கட்டண முறைமையொன்றைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் லலித்.யூ.கமகே தலைமையில் அண்மையில் நடைபெற்ற 'கண்டியில் முச்சக்கர வண்டி போக்குவரத்து' தொடர்பான விசேட கலந்துரையாடலில் இந்த புதிய போக்குவரத்து வேலைத்திட்டம் தொடர்பான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன .

இதற்கு மேலதிகமாக, முச்சக்கர வண்டிகளின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசி விண்ணப்பம் என்பனவும் இந்த ஒழுங்குமுறையில் உள்ளடங்குவதாக கண்டி மாநகர ஆணையாளர் இஷான் விஜேதிலக தெரிவித்தார்.

கண்டி மாநகர சபை, வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, கண்டி பொலிஸ், கண்டி முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் சங்கம் உள்ளிட்ட பல நிறுவனங்களின் பங்களிப்புடன் முச்சக்கர வண்டிகள் தொடர்பான புதிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்த வேலைத்திட்டம் மிகவும் காலத்திற்கேற்றது என்பதால், சுற்றுலாத்துறைக்கு ஏற்ற வகையில் முச்சக்கர வண்டிகள் தரப்படுத்தப்பட வேண்டும் என மத்திய மாகாண ஆளுநர். லலித் யு.கமகே தெரிவித்தார்.



மத்திய மாகாண பிரதம அமைச்சின் செயலாளர் அஜித் பிரேமசிங்க, ஆளுநர் செயலாளர் மஞ்சுள மதஹபொல, உள்ளூராட்சி ஆணையாளர் மேனகா ஹேரத், கண்டி மாநகர ஆணையாளர் இஷான் விஜேதிலக, கண்டி முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் சங்கத்தின் தலைவர் ரூபசிங்க மற்றும் அதன் செயலாளர் கபில கலாபிடகே ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**எம்.ஏ.அமீனுல்லா...**

# கினிகத்தேனை வைத்தியசாலை காணியில் மரக்கறிச் செய்கை

கினிகத்தேனை பொதுவைத்தியசாலையில் கைவிடப்பட்டிருந்த நிலப்பகுதியில் தற்போது வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாறாக முன்னெடுக்கப்படும் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையில் கிடைக்கும் மரக்கறிகள் வைத்தியசாலையின் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்படி வீட்டுத் தோட்டத்தில் வெண்டி, வாழை, கத்தரி, பூசணி, பீட்ரூட், மரவள்ளி, ராபு போன்றன பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு வேண்டிய அனைத்து உதவிகளும் வைத்தியசாலையிலிருந்தே கிடைக்கப் பெறுகின்றன. அரச நிறுவனங்கள் தேவையற்ற நிதிச்செலவுகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அமைச்சுகளிடமிருந்து அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இக்காலக்கட்டத்தில் ஏதோவொரு வகையில் அரச நிறுவனங்கள் மக்களுக்குரிய சேவைகளை வழங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன. அந்த வகையில் கினிகத்தேனை பொதுவைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்திருப்பது ஒரு சிறப்பானதாகும்.





இவ்வாறான மாற்று வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதனூடாக அரச நிறுவனங்கள் தமது மக்களுக்கு உச்ச பயனை வழங்க முடியும். கினிகத்தேனை பொது வைத்தியசாலையில் தற்போது கைவிடப்பட்டிக்கும் நிலத்தில் வீட்டுத் தோட்ட பயிர்செய்கை மேற்கொள்வது ஏனைய வைத்தியசாலைகளுக்கு ஒரு முன்மாதிரியாகவே அமையும். அரச நிறுவனங்களுக்கு கூட ஒரு முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளலாம்.

இவ்வாறான வீட்டுத்தோட்ட பயிர் செய்கை மேற்கொள்வதனூடாக இரண்டு விடயங்கள் நிறைவேற்றப்படுகின்றன.வைத்தியசாலைக்கு வேண்டிய மரக்கறிகளை பெற்றுக் கொள்ள முடியும். அதன் மூலம் நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவில் மரக்கறிகளை சேர்க்க் முடயும். நிறைவேற்றப்படுகின்றது.மறுபுறத்தில் வேலையற்றிருப்போருக்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கக் கூடிய வாய்ப்பும் காணப்படுகின்றது.

**இரா.யோகேசன்...**
*(கினிகத்தேனை தினகரன் நிருபர்)*

# நாய்கள் மத்தியிலும் கொரோனா ஆபத்து!

கடும் பாதிப்பு ஏற்படுத்திய டெல்டா திரிபுகள் உட்பட பல கொடிய கொரோனா திரிபுகள் நாய்களுக்கு மத்தியிலும் பரவலாம் என்றும், இதைச் சமாளிக்க உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மேலும் பல திரிபுகள் உருவாகும் ஆபத்து உள்ளதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனாவில் இருந்து உலகம் மெல்ல மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பும் நிலையில், இப்போது மீண்டும் வைரஸ் பாதிப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதனிடையே கடும் பாதிப்பு ஏற்படுத்திய டெல்டா திரிபுகள் உட்பட பல கொடிய கொரோனா திரிபுகள் நாய்களுக்கு மத்தியிலும் பரவும் ஆபத்து உள்ளது. இதைச் சமாளிக்க உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மேலும் பல திரிபுகள் உருவாகும் ஆபத்து இருக்கிறது. இது குறித்து தென் கொரிய ஆய்வாளர்கள் தீவிர ஆய்வு நடத்தினர். அதில்தான் டெல்டா உள்ளிட்ட அதிக ஆபத்தை ஏற்படுத்தும் திரிபுகள் நாய்களுக்கு இடையே பரவும் என்பதை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.



## தடுப்பூசி தவிர்க்க முடியாதது

நாய்கள் மத்தியில் இதுபோன்ற பாதிப்பு கண்டறிவது இதுவே முதல் முறையாகும். கொரோனா காரணமாக நாய்களின் நுரையீரலிலும் நுண்ணிய புண்கள் இருப்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். இதன் மூலம் நாய்களும் வைரஸ் பாதிப்பு ஏற்படும் என்றும் அவை நேரடி தொடர்பு மூலம் மற்ற நாய்களுக்குப் பரவும் என்பதையும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த ஆய்வு முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. அதாவது இனி விலங்குகள் மத்தியில் ஏற்படும் கொரோனா பாதிப்பால் புதிய திரிபுகள் பரவுமோ என்று ஆய்வாளர்கள் கவலைப்படுகிறார்கள்.

"செல்லப் பிராணிகள் மூலம் மீண்டும் புதிய வகை தோன்றுவதைத் தடுக்க அதற்கும் நாம் தடுப்பூசிகளைச் செலுத்த வேண்டும்" என்றனர் ஆய்வாளர்கள்.

# காரைதீவில் விவேகானந்த மனிதவள மேம்பாட்டு நிலையம் திறந்துவைப்பு






**காரைதீவு சாரதா சிறுமியர் இல்லம் அமைந்திருந்த இடத்தில் விவேகானந்த மனித வள மேம்பாட்டு நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து வருகை தந்த உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் வேலூர் தலைமையக உதவிப் பொதுச்செயலாளர் ஸ்ரீமத் சுவாமி சத்யேஷானந்தஜி மஹராஜ் இதனைத் திறந்து வைத்தார்.**

அத்துடன் இல்லத்தில் புத்தகக்கூடம், அலுவலகம் மற்றும் கணினி ஆய்வு கூடத்தையும் பூமாலை சுருக்கிழுத்து அவர் திறந்து வைத்தார். அவருடன் இ.கி.மிஷனின் இலங்கை கிளைத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மஹராஜ், மட்டக்களப்பு மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மஹராஜ், உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விழாவில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், அறநெறி ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

முதலில் அதிதிகள் காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு சென்று விசேட பூஜை வழிபாடு செய்தனர். பின்னர் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125 ஆவது வருட நிறைவை முன்னிட்டு சுவாமிகளின் திருவுருவப் படம் கண்ணகி சனசமூக நிலையத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் சுவாமி விபுலானந்தா ஞாபகார்த்த இல்லத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இராமகிருஷ்ண மிஷன் சாரதா நலன்புரி நிலையத்திற்கு சென்ற சுவாமி மிஷன் கொடியை ஏற்றி வைத்து விவேகானந்தா மனிதவள மேம்பாடு நிலையத்தை திறந்து வைத்தார்.

அதனையடுத்து இல்ல மண்டபத்தில் இ.கி.மி.சிவானந்தா பழைய மாணவன் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தலில் கூட்டமொன்று இடம்பெற்றது. கலை நிகழ்ச்சிகளும்,சுவாமிகளின் விஷேட உரைகளும் இடம்பெற்றன.

இ.கி.மிஷன் பழைய மாணவன் கு.ஜெயராஜியின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற விழாவில் நன்றியுரையை ஆசிரியர் செ.சிவராஜா நிகழ்த்தினார்.





## இந்தியாவிலிருந்து இ.கி.மிஷன் துணை பொதுச் செயலாளர் வருகை

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# தொற்றாநோய்களுக்கு உள்ளானதும் சிகிச்சைக்கு செல்ல தயங்குவது தவறு!

## சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் விழிப்பூட்டல் கருத்தரங்கு

**சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த பெண்களுக்கு தொற்றாநோய் தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கொன்று சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்றது. சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஸனூஸ் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தந்திருந்த தமிழ், முஸ்லிம் பெண்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.**

பொதுமக்கள் மத்தியில் தொற்றாநோய் பற்றிய அறிவு குறைவாகக் காணப்படுவதால் தொற்றாநோய்க்குள்ளாகியுள்ள நோயாளிகள் மற்றையவர்களுடன் பழகுதல், பேசுதல் போன்ற செயற்பாடுகளிலிருந்து ஒதுங்கி வாழ முற்படுகின்றனர். இது உண்மையிலேயே பிழையான செயற்பாடாகும்.

போசாக்கு குறைவினாலும் உணவு பழக்கவழக்கங்களினாலும் சில வேளைகளில் பரம்பரையாகவும் தொற்றாநோய் ஏற்படலாம். இரத்த அழுத்தம், நீரிழிவு, காயங்கள் ஏற்படுதல், சிறுநீரகநோய் போன்ற பல நோய்களைக் குறிப்பிடலாம்.

தொற்றாநோய் ஏற்பட்ட ஒருவர் அருகிலுள்ள வைத்தியசாலையில் வைத்தியரை அணுகி தனக்கு ஏற்பட்டுள்ள நோய் சம்பந்தமாக எதனையும் மறைக்காமல் கூறி ஆலோசனை பெற்றுக் கொள்வதுடன் உரிய காலத்தில் நோய்க்கான சிகிச்சையையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.



சில நோயாளிகள் சத்திரசிகிச்சைக்கு பயந்து அதனை மறைத்து நாட்சென்ற பின்னர் வைத்தியரை அணுகினால் வீண்சிரமங்களை எதிர்கொள்வதுடன் பணச்செலவும் ஏற்பட வழிவகுக்கும்.

எனவே தொற்றாநோய் என்பது இலகுவில் குணமடையக் கூடியது. கவனமாக உரிய நேரத்தில் சிகிச்சை பெற்றால் நோயிலிருந்து தப்பிக் கொள்ளலாம் என்று அங்கு ஆலோசனை கூறப்பட்டது.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
*(மாளிகைக்காடு குறூப் நிருபர்)*

# சம்மாந்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளராக ஐ.எல்.எம்.மாஹீர் பதவியேற்று ஒருமாதம் நிறைவு

**சம்மாந்துறை பிரதேச சபையின் புதிய தவிசாளராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த ஐ.எல்.எம்.மாஹீர் கடந்த மாதம் 14 ஆம் திகதி பதவியேற்று இன்றுடன் (14) ஒரு மாதம் நிறைவடையும் நிலையில், அவர் பல்வேறு விடயங்கள் மீது துரித கவனம் செலுத்தி வருகின்றார்.**



சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், விவசாயம், வீதி அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள், நூலக அபிவிருத்தி, மதஸ்தாபனங்கள், சந்தை அபிவிருத்தி, மீன் வியாபாரிகளின் பிரச்சினைகள் போன்ற பல்வேறு துறைகள் மீது அவர் கவனம் செலுத்தி சபை உறுப்பினர்களுடன் கள விஜயம் செய்து தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை அவ்விடத்திலேயே தீர்த்து வைப்பதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறார். சம்மாந்துறை ஹிஜ்ரா நகர் பொதுச் சந்தை, மீன்சந்தை கடைத்தொகுதி போன்றவற்றின் தேவைகள் மற்றும் குறைபாடுகளை முதன் முதலாக களத்திற்குச் சென்று கண்டறிந்ததோடு, பல தேவைகளையும் நிறைவேற்றி வைத்தார்.

மேலும் ஜனாதிபதி விளையாட்டு கட்டடத் தொகுதியின் தேவைகள், குறைபாடுகள், சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் திண்மக் கழிவு முகாமைத்துவம் சம்பந்தமான பிரச்சினைகள் மீதும் அவர் கவனம் செலுத்தி வருகின்றார். வளத்தாப்பிட்டி இஸ்மாயில்புரம் ஜும்மா பள்ளிவாயல் மற்றும் விளையாட்டுக்கழக கோரிக்கைகளுக்கமைய அங்குள்ள குறைபாடுகள் தொடர்பாக தீர்வு காண்பதற்கு தவிசாளரின் தலைமையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை பிரதேச சபையில் கடமையாற்றும் ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது தேவைகள் தொடர்பில் கலந்துரையாடி பொதுமக்களுக்கு துரித சேவை வழங்குவது குறித்து கலந்துரையாடினார். இதனையடுத்து சம்மாந்துறை பிரதேச சபையில் பொதுமக்களுக்கான சேவைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

கிராமங்களில் வீதிப்புனரமைப்பு, மின்விளக்கு பொருத்துதல் மற்றும் திருத்த வேலைகள், மைதானம் புனரமைத்தல், சிறுவர் பூங்கா புனரமைப்பு செய்தல், பொதுநூலகங்களை புனரமைப்பு செய்தல், மழைகாலங்களில் வெள்ளத் தடுப்பை ஏற்படுத்தும் வகையில் வடிகான்களை புனரமைத்தல், சுத்தப்படுத்துதல், வீதியோர மீன் வியாபாரத்தை முறைமைப்படுத்துதல் போன்ற பல்வேறு செயல்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இளைஞர்கள், மற்றும் விளையாட்டுக்கழகங்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்த்து வைப்பதற்கும் பிரதேச மக்கள் யானைத் தொல்லையினால் அனுபவிக்கும் உயிரிழப்புக்கள் மற்றும் உடைமைச் சேதங்களை நிவர்த்தி செய்யக்கூடிய செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் வேலைத்திட்டங்கள் அங்குள்ள இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்களின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன,

பொதுமக்களின் கோரிக்கைகளையேற்று நேரடியாக களத்திற்குச் சென்றும் அதிகாரிகள், உத்தியோகத்தர்களை அனுப்பி வைத்தும் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அண்மையில் இங்குள்ள கல்குவாரியினால் உருவான ஆழமான குழியில் நீராடச்சென்ற சிறுவன் உயிரிழந்த சம்பவத்தையடுத்து, குறித்த குழி மூடப்பட்டதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாத வகையில் பொறிமுறைகளுடன் இயங்கக் கூடிய செங்கற் சூளைகளை அமைத்து செயற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வீரமுனை, மஜீத்புரம், வளத்தாப்பிட்டி, நெய்னாகாடு, கோரக்கர்கோவில் போன்ற அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியதாக மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொதுத்தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் இனமத வேறுபாடுகளுக்கப்பால் பிரதேசத்தின் தவிசாளர் என்ற வகையில் பதவியேற்று ஒருமாத காலப்பகுதிக்குள் ஐ.எல்.எம்.மாஹீர் மேற்கொண்டு வருவதை மக்கள் பாராட்டுகின்றனர்.





**எம்.எப். றிபாஸ்...**
*(பாலமுனை தினகரன் நிருபர்)*

# தேசிய மட்டத்தில் இரண்டாமிடத்தை வென்ற மருதமுனை மாணவர்களுக்கு பெருவரவேற்பு

**அகில இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையில் நடைபெற்ற 16 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சமபோச உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அணி இறுதிப்போட்டிக்குத் தெரிவாகி அகில இலங்கை ரீதியாக இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டது. வெற்றி பெற்ற பாடசாலையில் உதைபந்தட்ட மாணவ அணியினரை வரவேற்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம். ஜே. அப்துல் ஹஸீப் தலைமையில் மருதமுனையில் அண்மையில் நடைபெற்றது.**

கடந்த பெப்ரவரி மாதம் 26, 27, 28, ஆகிய தினங்களில் பொலநறுவை மைத்திரிபால சிறிசேன மைதானத்திலும் றோயல் கல்லூரி மைதானத்திலும் நடைபெற்று முடிந்த இந்தப் போட்டித் தொடரில் இறுதிப் போட்டிக்கு கண்டி களுகம்மான கெலி ஓயா மகாவித்தியாலயத்தை எதிர்த்து மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அணியினர் விளையாடினார்கள்.

இப்போட்டியில் இரு அணிகளும் எதுவித கோல் போடாத நிலையில் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது. இதனையடுத்து இடம்பெற்ற தண்டனை உதையில் மூன்றுக்கு இரண்டு (03:02) என்ற கோல் வித்தியாசத்தில் கண்டி களுகம்மான கெலிஓயா மகாவித்தியாலய அணி சம்பியனாக அறிவிக்கப்பட்டதோடு மருதமுனை அல்மனார் கல்லூரி இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டது. மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி அணி முதலாவது சுற்றில் இரத்தினபுரி தர்மபால வித்தியாலயத்தை (01 :00) என்ற கோல் வித்தியாசத்திலும் அடுத்த போட்டியாக இடம்பெற்ற கொழும்பு ஹமீட் அல் ஹுசைன்யா வித்தியாலயத்தை தண்டனை உதையில் (05:04) என்ற கோல் வித்தியாசத்திலும் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தெரிவாகியது. இரண்டாவது சுற்றில் யாழ்ப்பாணம் உடுப்பிலி மகாவித்தியாலயத்துடன் இடம்பெற்ற போட்டி சமநிலையில் நிறைவடைய தண்டனை உதையில் (04:02 ) என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது. காலிறுதிப் போட்டியில் கொழும்பு ஸாஹிறா கல்லூரியோடு விளையாடியது. இந்தப் போட்டியும் சமநிலையில் முடிவடைய இடம்பெற்ற தண்டனை உதையில் (03:01) என்ற கோல் வித்தியாசத்தில் அல்மனார் அணி வெற்றி பெற்று அரையிறுதி போட்டிக்கு முன்னேறியது. அரையிறுதிப் போட்டியில் களுத்து றை முஸ்லிம் மத்திய கல்லூரியை தண்டனை உதை மூலம் (03:02) என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.





மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) 112 வருடகால வரலாற்றில் அகில இலங்கை ரீதியாக உதைபந்தாட்ட சுற்றிப் போட்டித் தொடர் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட மாபெரும் உயரிய அடைவாக இது விளங்குகிறது. பாடசாலையின் வெற்றி வீரர்களை வரவேற்று இந்த வீதி ஊர்வலம் மருதமுனையில் இடம்பெற்றது.

வெற்றிக்கு உறுதுணையாக செயற்பட்ட பாடசாலையின் அதிபர் எம்.ஜே.அப்துல் ஹஸீப், பிரதி அதிபர்களான எம்.எம். எம்.அனஸ், எம்.எம்.ஹஸ்மி, திருமதி. றிஸானா லுத்பி ஹுசைன், உதவி அதிபர் எஸ். முபாறக் மற்றும் பகுதி தலைவர்கள், ஆசிரியர் குழாத்தினர், 16 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணியினர், பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர்களான ஏ.எம்.எம். றஜி, ஐ.எம். இர்பான், எம்.ஜே.எம்.நிஹால், எம். ஜே.எம். தில்சாத், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான ஆர்.றிஸாப், ஏ.ஜே. துவைஜ் அஹமட், எம்.எச்.எம்.நிஷாத் உட்பட வெற்றி வீரர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

நிகழ்வின்போது பாடசாலை அபிவிருத்தி குழு, பழைய மாணவர் சங்கம், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், அனைவருக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளை தெரிவித்ததோடு பிரதேசத்தின் ஏனைய பாடசாலைகளிலும் அல்மனார் கல்விச் சமூகத்தினரை மாலை அணிவித்து வரவேற்று பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.



**ஏ.எல்.எம்.ஷினாஸ்...**
*(பெரியநீலாவணை விசேட நிருபர்)*

# கடலரிப்பால் மிகமோசமாக காவு கொள்ளப்படும் நிந்தவூர் பிரதேசம்!

**அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கடலோர பிரதேசங்கள் கடுமையான கடலரிப்புக்குள்ளாகி வருகின்றன. நிந்தவூர் பிரதேசத்தின் கிழக்கு எல்லையானது முழுமையாக கடற்கரை பிரதேசமாக காணப்படுவதனால் தொடர்ச்சியாக இப்பிரதேசம் கடலரிப்புக்குள்ளாகி வருகின்றது. குறித்த பிரதேசம் முழுமையாக கடலினால் காவு கொள்ளப்படும் அபாயம் தோன்றியுள்ளது.**

நிந்தவூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சில பகுதிகளுக்கு பாரிய கருங்கற்களை இடுவதன் மூலம் வேகமான அலைகளை குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனாலும் அலை முறிப்பு தடைகள் (வேவ் பிரேக்கர்ஸ்) மூலம் அலையின் வேகம் சிறிதளவு மாத்திரமே குறைக்கப்பட்டுள்ளது.





ஆனாலும் கருங்கற்கள் இடப்படாத ஏனைய பிரதேசங்கள் குறிப்பாக அட்டப்பள்ளம் பிரதேசத்தில் காணப்படுகின்ற தென்னந் தோட்டங்கள் முழுமையாக கடலுக்குள் உள்வாங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பல்வேறு இடங்களிலும் கடலரிப்பு தொடர்வதனால் இப்பிரதேசத்து மக்கள் பாரிய பொருளாதார நஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

சுமார் 06 கிலோமீட்டர் கடல் எல்லை கொண்ட இப் பிரதேசமானது மிக அழகான கடற்கரையினை கொண்டிருந்ததன் மூலம் சுற்றுலாப் பயணிகள் மூலம் அதிக வருமானத்தை ஈட்டி வந்தது. இன்று கடலரிப்பின் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை இப்பிரதேசத்தில் வெகுவாக குறைவடைந்துள்ளமை அவதானிக்கத்தக்கது.

கரையோர பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் இதர அரச அதிகார சபைகள் குறித்த கடலரிப்பினை தடுக்கும் வகையில் பாரிய கருங்கற்களை கரையோரங்களில் இடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுமுள்ளது.

இருந்தபோதிலும் தொடர்ச்சியாக இப்பிரதேசம் கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றமையால் தங்களது ஜீவனோபாயத் தொழிலான மீன்பிடித் தொழிலினை தொடர முடியாமல் இப்பிரதேச மக்கள் உள்ளனர்.

எனவே குறித்த கடலரிப்புப் பாதிப்பைக் குறைக்கும் வகையில் உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என இப்பிரதேசத்து பொதுமக்கள் வேண்டி நிற்கின்றனர்.

**அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்...**

### அதிதிறன் மோட்டார் சைக்கிள்களை

# சட்டபூர்வமாக பதிவு செய்வதற்கு முறைமையை தயாரிக்க பணிப்பு

## அமைச்சர் பந்துல அதிகாரிகளுக்கு ஆலோசனை

இலங்கையின் சட்டரீதியாக பதிவு செய்யப்படாத அதிதிறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களை சட்டபூர்வமாக பதிவு செய்வதற்கு முறையான அமைப்பு ஒன்றை விரைவாக தயாரிக்குமாறு போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாட்டுக்குள் உதிரிப் பாகங்கள் கொண்டுவரப்பட்டு இணைக்கப்படும் அதித்திறன் கொண்ட ( என்ஜின் திறன் 450 CC மேல்) மோட்டார் சைக்கிள்களுக்காக சரியான பதிவை மேற்கொண்டு பயன்படுத்தக் கூடிய வகையில் முறை ஒன்றை தயாரித்துத் தருமாறு ஸ்பின் ரைடர்ஸ் மோட்டார் சைக்கிள் மற்றும் விளையாட்டு கழகத்தால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய குறிப்பிட்ட தரப்பினருடன் கலந்துரையாடலொன்று போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சின் கேட்பார் கூடத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் இலங்கைக்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கொண்டுவரப்பட்ட சுமார் அதி திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்கள் 3000 முதல் 4000 வரை தற்போது நாடு முழுவதும் பலரிடம் இருப்பது தெரியவந்துள்ளது.



ஆனால் வரி செலுத்தாமல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள்கள் மூலம் அரசாங்கத்துக்குரிய வரி, பதிவு கட்டணம் என்பன செலுத்தப்படாமல் உள்ளன என கலந்துரையாடலின் போது தெரிய வந்துள்ளது.

இதற்கு தீர்வு காணும் முகமாக மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

அதற்கமைய அது தொடர்பாக காணப்படும் சட்ட நிலைமையை ஆராய்ந்த பின்னர் இதற்கு முன்னர் வரவு செலவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள எஞ்சின் கொள்ளளவு 1000 வரையான மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு செயற்பட வேண்டியது எவ்வாறு என்பது தொடர்பாக தேவையான விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

அதன்படி குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரம் உட்பட்டதாக எதிர்காலத்துக்கு எடுத்துக்காட்டாக அமையாத விதத்தில் இந்த மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்கு தேவையான சட்ட சூழலை தயாரிக்கவும் அரசாங்கத்தால் குறிப்பிட்ட காலத்துக்கு இவ்வாறு காணப்படும் மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதற்காக அமைச்சரவை அனுமதியை பெற்றுக் கொள்வதற்கான அமைச்சரைவை பத்திரத்தை தயாரிக்கவும், அந்த பதிவை விளையாட்டு நடவடிகைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த எவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்பது குறித்தும் இங்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

நாட்டுக்கு கிடைக்காத வரி வருமானத்தை குறிப்பிட்ட கால எல்லையில் மீண்டும் அறவிடுவதற்கும் மற்றும் மீண்டும் சட்டவிரோதமாக இந்நாட்டிற்குள் மோட்டார் சைக்கிள்களை கொண்டு வருவதை ஊக்குவிக்காதிருப்பதற்கும் சரியான போக்குவரத்துச் சட்ட விதிகளை உருவாக்குவதன் ஊடாக மேற்கொள்ள முடியும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன வலியுறுத்தினார்.

முன்னாள் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்தன, போக்குவரத்து மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன, மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகள், அதிதிறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

## மலையகத்துக்கான 4,000...

வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்திய அரசின் நிதி பங்களிப்புடன், மலையகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள இவ்வீடமைப்பு திட்டத்தில், ஒரு வீட்டுக்கு தலா 09 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும், பணவீக்கம் உள்ளிட்ட காரணங்களால் தற்போது ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கு சுமார் 28 இலட்சம் ரூபா தேவையென தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே,இத்திட்டத்தில் எஞ்சியுள்ள வீடுகள்

புதிய மதிப்பீட்டு விலையின்கீழ் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கான உடன்படிக்கையே, நேற்று (13) கைச்சாத்திடப்பட்டது.

இந்நிகழ்வு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தலைமையில் இந்திய இல்லத்தில் நேற்று (13) நடைபெற்றது. இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான்,

" 2020 ஆம் ஆண்டில், நான், இராஜாங்க அமைச்சராக பதவியேற்கும்போது இந்தியாவின் 04 ஆயிரம் வீட்டு திட்டம் அமுல்படுத்தப்பட்டு வந்தது.அப்போது, 699 வீடுகளே முழுமைப்படுத்தப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டிருந்தன. சுமார் 02 ஆயிரம் வீடுகளில் மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இருக்கவில்லை. அவற்றை முழுமைப்படுத்தி பயனாளிகளிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

இதற்கிடையில், கொரோனா, அதன் பின்னர் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் இந்திய வீட்டு திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இக்கால கட்டத்தில் 03 ஆயிரம் ரூபா வரை சீமெந்து விலை அதிகரிக்கப்பட்டது. அன்று ஒரு வீட்டுக்கு 09 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. தற்போதைய சூழ்நிலையில் ஒரு வீட்டுக்கு 28 இலட்சம் ரூபா அவசியமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ் விலையின்கீழ் எஞ்சியுள்ள வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமை மகிழ்ச்சிக்குரிய விடயம். இது முழுமைப்படுத்தப்பட்ட பின்னர் 10 ஆயிரம் வீட்டு திட்டமும் வெகு விரைவில் அமுல்படுத்தப்படும் என்றார்.

## A/L விடைத்தாள் திருத்தப்...

எனினும் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்காததால் காலத்தை நீடித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து தினங்களில் மேலும் 1,300 பேர் இதற்காக விண்ணப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்காக 500 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது.

இம்முறை விசேட அமைச்சரவையின் அனுமதியின் கீழ் 2,000 ரூபாவாக இந்தக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இருந்தும் அதிகரிக்கப்பட்டுள்ள இந்தத் தொகையும் போதுமானதல்ல என சில ஆசிரியர் சங்கங்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துவருகின்றன. இதனால், ஆசிரியர்களிடமிருந்து தேவையான விண்ணப்பங்களும் கிடைக்கவில்லை.

க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தப் பணிகள் மூன்றுவார காலங்கள் தாமதமாகியுள்ளன.அவர்களுக்கான கொடுப்பனவாக 2,000 ரூபாவை வழங்குவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. அந்தவகையில், 30 இலட்சம் விடைத்தாள்கள் தற்போது பரீட்சைகள் திணைக்களத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இரசாயனங்களின் உபயோகத்துடன் அவை பாதுகாக்கப்பட்டு வருகிறது.

கடந்த பெப்ரவரி (17) க.பொ.த உயர்தரப் பரீட்சை நிறைவடைந்தது. அத்துடன் விடைத்தாள் திருத்தும் பணிகளை பெப்ரவரி (02) ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், இதுவரை இதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால், இந்தவருடத்தில் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரணதரப் பரீட்சைகள் இரண்டும், உயர்தர பரீட்சையும் மேலும் காலதாமதமாகும் நிலை ஏற்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, விடைத்தாள் திருத்தும் பணிகள் 06 வாரகாலங்களுக்குள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும் அந்த பணிகளுக்காக ஆசிரியர்களை ஒன்லைன் மூலம் இணைத்துக் கொள்வதற்கு கடந்த ஒக்டோபர் மாதம் முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

விடத்தாள் திருத்தப் பணிகளுக்காக கடந்த வருடங்களில் வழங்கப்பட்ட கொடுப்பனவோடு ஒப்பிடுகையில், 12 தினங்களுக்காக பிரதான பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 62,050 ரூபா இம்முறை 101,600 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலதிக, பிரதான பரிசோதகர்களுக்காக வழங்கப்பட்டு வந்த 52,250 ரூபா இம்முறை 90,270 ரூபாவாகவும் உதவி பரிசோதகர்களுக்காக வழங்கப்பட்டு வந்த 36,725 ரூபா இம்முறை 60,475 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, விஞ்ஞான பாடத்திற்கான பிரதான பரிசோதகர்களுக்கு இதற்கு முன்னர் வழங்கப்பட்டுவந்த 64,550 ரூபா இம்முறை 106,506 ரூபாவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலதிக பிரதான பரிசோதகர்களுக்காக வழங்கப்பட்டு வந்த 59,900 ரூபா இம்முறை 95,946 ரூபாவாகவும் உதவி பரிசோதகர்களுக்காக வழங்கப்பட்டு வந்த 44,199 ரூபா இம்முறை 64,460 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அத்தியாவசிய மருந்துப்...

புறம்பானதென்றும், அதனை தாம் நிராகரிப்ப தாகவும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அதேவேளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மருந்து கொள்வனவுக்காக 500 மில்லியன் ரூபாவை சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதையும் முற்றாக நிராகரித்த அமைச்சர், அந்தப் பணியகத்தினால் சுகாதார அமைச்சுக்கு 100 மில்லியன் ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அந்த வகையில் சுகாதார அமைச்சு தொடர்பில் வெ ளியிடப்பட்ட அத்தகைய செய்திகள் அடிப்படையற்றவையென்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்றைய தினம் தேசிய பத்திரிகையொன்று சுகாதார அமைச்சின் மருந்துக் கொள்வனவு தொடர்பில் தவறான செய்திகளை வெளியிட்டிருந்தது.

அந்தச் செய்தியில் கடந்தவருடம் 3,000 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒருவகை மருந்தை, தற்போது 30,000 ரூபா விலைக்கு கொள்வனவு செய்யவுள்ளதாகவும் அத்துடன் 7,000 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மருந்து, இம்முறை 39,000 ரூபாவுக்கு அவசரமாகக் கொள்வனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது முற்றிலும் தவறானது. அவ்வாறான எந்தத் தீர்மானத்தையும் சுகாதார அமைச்சு மேற்கொள்ளவில்லை.

சில, அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக சில தினங்களுக்கு முன்னரே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. திறைசேரியின் அதிகாரிகள் உள்ளிட்ட அதனோடு சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளின் பங்கேற்புடனேனே அந்த பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அந்தப் பேச்சுவார்த்தை இன்னும் சுமார் ஒரு வாரம் தொடரலாம். எந்தவித இறுதித் தீர்மானமும் இது தொடர்பில் மேற்கொள்ளப்படவில்லை.

மருந்து கொள்வனவுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் செயலாளர் திறைசேரியின் அதிகாரிகளோடு பல தினங்கள் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே, இதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் எதிர்வரும் புதன் கிழமையே டெண்டர் தொடர்பில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படவுள்ளது. அதற்கிடையில் தன்னிச்சையாக மேற்படி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

சில ஊடகங்கள் தன்னிச்சையாக செய்திகளை வெ ளியிடுகின்றன. அந்த தகவல்கள் தொடர்பில் எம்முடன் ஆராய்ந்து செய்திகளை பிரசுரிக்க முடியும்.

அவ்வாறின்றி தவறான மற்றும் அடிப்படையற்ற செய்திகள் குழப்பங்களையே ஏற்படுத்தும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர் கேள்வியெழுப்பியபோது இத்தகைய தவறான செய்தி தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா? என கேள்வியெழுப்பினார். அதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர், சம்பந்தப்பட்ட நிறுவனத்தோடு இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும், தவறு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஹரக் கட்டா, குடு சலிந்து...

பொலிஸ்மா அதிபர் விசேட பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பாதாள குழு நபர்களான இருவரையும் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் தவிர்ந்த வேறு எந்த விசாரணைக்குழுவிடமும் ஒப்படைக்காமலிருக்க விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் எந்த விசாரணைக்குழுவும் அந்த விசாரணை சம்பந்தமாக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்திடம் காலம்தாழ்த்தாது நேரத்தைப் பெற்றுக்கொள்வது அவசியமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அத்தகைய விசாரணைகள் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் அதிகாரிகளின் கண்காணிப்பிலேயே இடம்பெற வேண்டும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோரின் பாதுகாப்பு தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதற்கும் பொலிஸார் நடவடிக்கையெடுத்துள்ளனர்.அதற்குக் காரணம் ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோர் மோசமான பொலிஸ் அதிகாரிகள் சிலருடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருப்பதாக புலனாய்வு பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளமையாகும்.

மேற்படி இருவரிடமும் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் வெளிருவரும் தகவல்களை வைத்து அந்த அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவும் பொலிஸாரினால் கவனம் செலுத்தப்படும்.

தனிப்பட்ட ஜெட் விமானமொன்றின் மூலம் கடந்த பெப்ரவரி 12 ஆம் திகதி மடகஸ்காருக்கு சென்றுள்ள மேற்படி இருவரும் பாதாள உலக குற்றவாளிகள் ஆறுபேர் மடகஸ்கார் பாதுகாப்புப் பிரிவினரால் கடந்த முதலாம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள் மடகஸ்காரிலிருந்து மீண்டும் வெ ளியேறுவதற்கு அந்நாட்டில் விமான நிலையத்திற்கு சென்றபோதே கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களுள் ஹரக் கட்டாவின் மனைவி என கூறப்படும் வெ ளிநாட்டு பெண்ணொருவரும் அவரது தகப்பன் என்று கூறப்படும் நபரும் உள்ளடங்குகின்றனர்.

அவர்கள் அந்த நாட்டில் பாதுகாப்புப் படையினரின் பொறுப்பில் வைக்கப்பட்டு அதுசம்பந்தமாக இலங்கைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அங்கு சர்வதேச பொலிஸார் மூலம் சிவப்பு அறிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் அவர்களிருவரையும் சர்வதேச சட்டத்திற்கிணங்க, இலங்கையிடம் ஒப்படைப்பதற்கு மடகஸ்கார் பாதுகாப்புப் படையினர் இணக்கம் தெரிவித்திருந்தனர். அதற்கிணங்க கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை இலங்கையிலிருந்து மடகஸ்காருக்கு குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் விசேட செயலணி அதிகாரிகள் ஐந்து பேர் சென்றிருந்தனர். அவர்கள் மேற்படி இருவரையும் பொறுப்பேற்றுள்ளதுடன்

அவர்களுக்குச் சொந்தமான கையடக்கத் தொலைபேசிகளையும் மடகஸ்கார் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அந்த கையடக்கத் தொலைபேசியூடாக ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோரின் போதைப் பொருள்வலையமைப்புமட்டுமன்றி இலங்கையில் அவர்களோடு தொடர்புகளைக் கொண்டிருந்த பொலிஸார் உள்ளிட்ட பலரது தகவல்கள் ஆதாரங்களுடன் காணப்படுவதாகவும் அதுதொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## நாட்டின் பொருளாதாரத்தை...

தேர்தலும் முக்கியம் என்பதை மக்களே முடிவு செய்ய வேண்டும். தேர்தலுக்கு சென்றாலும் எங்களால் வெற்றிபெற முடியும்.

ஆனால், இந்நேரத்தில் தேர்தலுக்குச் செல்வது மக்களையே சிரமப்படுத்தும். முதலில் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டும். கடந்த காலத்தில் இது, இல்லாமலிருந்தது. மக்கள் கொல்லப்பட்டனர், வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டன, மக்கள் துன்புறுத்தப்பட்டனர், கழுத்தைப் பிடித்து பொலிஸ் அதிகாரிகள் வீதிக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். நாட்டில் சட்டம் ஒழுங்கு இருக்கவில்லை. அன்று சட்டத்தை மீறியவர்கள், இன்று ஜனநாயகம் பற்றி பேசுவது வேடிக்கையாக உள்ளது. அமைதியையும், சட்டத்தையும் ஏற்படுத்திய பின், நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டும். சுற்றுலா பயணிகள் வரும்போது, அவர்கள் தெருக்களில் போராட்டம் நடத்துகின்றனர். பல்கலைக்கழகங்களில் உள்ள அரசியல் கையாட்களை வீதிக்கு கொண்டு வந்து பிரச்சினைகளை உருவாக்குகின்றனர். அதன் மூலம் நாட்டுக்கு வரும் சுற்றுலா பயணிகளை அழிக்க சிலர் முயல்கின்றனர். இதை, மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அரசை கவிழ்க்காமல் எங்கள் பொறுப்பை நிறைவேற்ற தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தொழில்சார் சட்டத்துறையில்...

கிராண்ட் ஹோட்டலில் (12) ஆரம்பமான "இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தேசிய வருடாந்த மாநாடு 2023"இற்கு இணைந்த வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இங்கு 03 பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டன.

ஜூலியானா மார்கரெட் கொஸ்வத்த, வோல்டர் லெஸ்லி டி சில்வா, இரத்னசபாபதி ஆறுமுகம் ஜெகதீசன், ஜனாதிபதி சட்டத்தரணி உபாலி ஏ. குணரத்ன. கனகரத்னம் கணேஸயோகன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுஹைர், நீதியரசர் அசோக நிஹால் டி சில்வா, நீதியரசர் டி.ஜே. த.எஸ். பாலபடபெந்தி, டபிள்யூ. டி.ஜே. செனவிரத்ன உட்பட 26 சட்டத்தரணிகளுக்கு இங்கு விருதுகள் வழங்கப்பட்டன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, சட்ட மாஅதிபர் சஞ்சய் ராஜரத்தினம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ், "அபிநந்தன" குழுவின் தலைவர் ஜனப்ரித் பெர்னாண்டோ, இணைப்பாளர் சமத் பெர்னாண்டோ, உள்ளிட்ட பிரதம அதிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## நூறு கோடி டொலர்....

சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் 17 கோடி அமெரிக்கன் டொலரை, வெளிநாட்டு கடனாகவும் அதனைத்தவிர லீசிங் தவணையாக 08 கோடி டொலர் அமெரிக்கன்,டொலரை செலுத்த வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அதேவேளை இந்த நிறுவனம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய ரீதியிலான வங்கிகளுக்கு, 80 கோடி அமெரிக்க டொலர் கடனாக செலுத்த வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 'நாட்டு நாட்டு' பாடல் ...

முதுமலை காப்பகத்தில் யானை பராமரிப்பாளர்களாகப் பணியாற்றும் காட்டு நாயக்கர் பழங்குடி இனத்தைச் சேர்ந்த பொம்மன், பெள்ளி தம்பதியைப் பற்றியது இந்த குறு ஆவணப்படம்.

## வசந்த முதலிகேவுக்கு...

அழைப்பாளர் வசந்த முதலிகே முதலானோர் கோரியமை நகைப்புக்கு இடமானது.

இத்தகையை கோரிக்கைகளுடன் இணைகிறோம், ஆனால், எமது பிரச்சினைகளையும் உள்வாங்குங்களென யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் பதில் அளித்துள்ளமையும் பாராட்டுக்குரியது.

பயங்கரவாத தடை சட்டம் தமிழருக்கு எதிராக 1979 இல் உருவாகிய சட்டமாகும். ஏறக்குறைய 44 வருடங்களாக எத்தனையோ பேர் மாண்டு போய்விட்டனர். இன்னும் எத்தனையோ பேர் சிறையில் வாழ்வை இழந்தனர். இன்னும் இழந்தப்படி இருக்கிறோம். எத்தனையோ குடும்பங்கள் அனாதரவாக வாடுகின்றன.

தமிழர்கள் 40வருடங்களுக்கு மேல் தேசிய, சர்வதேசிய ரீதியாக இந்த இச்சட்டத்தை எதிர்த்து போராடியதால், ஐநா மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கவனத்துக்கும் வந்துள்ளது.

இப்போது, கடந்த சில மாதங்களில், வசந்த முதலிகே, சிறி தம்ம தேரர் போன்றோரை இச்சட்டம் பதம் பார்க்கிறது.இதனால்,திடீரென தூக்கத்திலிருந்து எழுந்து, வாகனம் பிடித்து, யாழ்ப்பாணத்துக்குச் சென்று, “பயங்கரவாத தடை சட்டத்தை எதிர்த்து போராட கை கோர்க்குமாறு கோருவது, 2023இன் மிக சிறந்த நகைச்சுவையாக தோன்றுகிறது.

வடக்கு கிழக்கு தமிழ், முஸ்லிம் மக்கள், மலையக தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களையும் புரிந்துகொண்டு அவற்றையும் பொதுப் போராட்டத்தில் இணைத்துக்கொள்ள சிங்கள அரசியல் கட்சிகள், சிங்கள மாணவர், இளைஞர் அமைப்புகள் தயாராகாதவரை இந்நாடு விடிவு பெறாதென்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

## தொழிற்சங்க நடவடிக்கையால் ...

வைத்தியசாலை மற்றும் பொகவந்தலாவ, மஸ்கெலியா, நுவரெலியா ஆகிய வைத்தியசாலைகளும் வெறிச்சோடியிருந்தன.

வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பை அறிந்த பெருந்தொகையான நோயாளர்கள், முன்கூட்டியே வைத்தியசாலைகளுக்கு வந்து சிகிச்சை பெற்றுக்கொண்டனர். அதேவேளை, பணிப்பகிஷ்கரிப்பை அறியாத நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதையும் காணக்கூடியதாக இருந்தது. வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சை மட்டுமே வழங்கப்படும் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## எரிபொருள் விநியோகத்தை... 03ஆம் பக்கத் தொடர்

அதேபோன்று, நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வர்த்தகங்களை எதிர்காலத்தில் ஊக்குவிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன ஆகியோருடன் அரச அதிகாரிகள் மற்றும் சினோபெக் குழுமத்தின் பிரதிநிதிகள் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## சீன ஜனாதிபதி... 03ஆம் பக்கத் தொடர்

சீன ஜனாதிபதியின் புதிய பதவிக்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேலும் வலுவடையுமெனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

## விமல் வீரவன்சவுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

இதன்போது, மேற்படி பிரதிவாதி கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்துக்கு முன்பாக வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தார். இதனால், மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகும் வகையில்,

செயற்பட்டார் என பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர் ப்பித்திருந்தனர்.முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர, பாராளுமன்ற உறுப்பினர் முஹம்மட் முசம்மில், தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களான வீரகுமார திசாநாயக்க, பியசிறி விஜயநாக்க மற்றும் ரொஜட் செனவிரத்ன ஆகியோர் இந்த வழக்கின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## திசைகாட்டியில்... 03ஆம் பக்கத் தொடர்

விடுதலை முன்னணியினரைப் பற்றி மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும், நாங்கள் பொதுஜன பெரமுன பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## சூப் பக்கற்றுகள்... 03ஆம் பக்கத் தொடர்

மிகவும் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 350 கிராம் கொக்கேன் போதை பொருளை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.


கட்டார் விமான சேவைக்கு சொந்தமான QR664 இலக்க விமானத்தில் காலை 8:30 மணி அளவில் இவர், நாட்டுக்கு வந்துள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்ட நான்கு கொக்கேன் பக்கட்டுகள் சூப் பக்கட்டுகள் போன்று பொதி செய்யப்பட்டிருந்தன.

இந்த போதைப் பொருளின் சந்தை பெறுமானம் 17 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 54 வயதுடைய இச்சந்தேக நபர், முதற்தடவையாக இலங்கைக்கு வந்துள்ளார்.

இது தொடர்பான விசாரணை நடவடிக்கைகளை சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவினர் மேற்கொள்ளவுள்ளனர்.


## LKR APPRECIATED AGAINST THE USD FOLLOWING THE FREE FLOAT OF THE LKR AND INCREASE IN POLICY RATES




Sri Lankan Rupee (LKR) strengthened against the USD. The middle rate of USD/LKR Spot Exchange Rate was **LKR 319.11** as at 13th March 2023 down from LKR 361.63 as at 28th February 2023.

Increase of daily trading band from LKR.2.60 on February 24th 2023 to LKR.10.00 as at 3rd March 2023 and subsequent relaxation by the Central Bank supported the gradual LKR appreciation against the dollar, given the **Lower demand for Imports.**

## GROSS OFFICIAL RESERVES IMPROVED TO USD 2.2 BN AS AT END FEBRUARY 2023




The Central Bank continued to supply Forex Liquidity to finance essential imports by utilizing inflows to Gross Official Reserves.


Marginal Improvement of Liquid Reserves by the end of February 2023 due to The Central Bank being a Net Buyer of USD from the Market.

## EXTERNAL SECTOR OUTLOOK REMAINS POSITIVE

Capitaltrust
Capital TRUST Research (Pvt) Ltd.

In January 2023 the **Trade Deficit** contracted by **52.1%** to **USD 410Mn** from USD 857Mn last year. This was primarily due to lower demand for imports amid imposed restrictions.

**Workers' remittances** recovered **by 68.7% YoY** during January 2023 recording **USD 437Mn. Tourism Earnings** increased to **USD 162Mn**, improving **6.6% YoY** in January 2023.




**With the expected finalization of the IMF- EFF facility** along with other developments and improvements in the Current Account, the **external sector outlook is positive.**

Source: Central Bank of Sri Lanka

Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company

# புவியில் வாழும் உயிரினங்களை படிப்படியாக அழித்து வரும் ஆபத்தான பொருள் பிளாஸ்டிக்!

எழில் மிகுந்த இயற்கைச் சூழலை தன்னகத்தே கொண்டுள்ள எமது நாட்டில் மெல்லக் கொல்லும் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையானது அதிகரித்து வருவதுடன், மக்களும் தங்களை அறியாமல் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனைக்கு அடிமையாகி வருவதைத் தொடர்ந்து, பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதியிலிருந்து சில பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி, விற்பனை, அவற்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன அறிவித்திருந்தார்.

இதேவேளை, கடந்த 2021ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுவரை பிளாஸ்டிக்கழிவு முகாமைத்துவ தேசிய செயற்றிட்டமும் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்பட்ட பானம் உறிஞ்சிகள், யோகர்ட் கரண்டிகள், தட்டுகள், கத்திகள், முள்ளுக்கரண்டிகள், இடியப்பத் தட்டுகள், மலர்மாலைகள், பொலித்தீன் உள்ளிட்ட பிளாஸ்டிக் பொருட்களைத் தடை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எமது நாட்டை நச்சுச் சூழல் மாசடைவிலிருந்து பாதுகாக்கும் நோக்கிலும் எமது மக்களின் ஆரோக்கியத்தைக் கருத்திற் கொண்டும் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள இத்தீர்மானம் உண்மையில் வரவேற்க வேண்டியதென்பதுடன், மக்களாகிய நாமும் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் முன்வைத்துள்ள இத்தீர்மானத்துக்கு எம்மால் இயன்ற ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இந்நிலையில், ஒவ்வொரு வீட்டிலும் தாம் அன்றாடம் பாவிக்கும் பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்த்து, அவற்றுக்குப் பதிலாக மாற்றுப் பொருட்களையோ அல்லது இயற்கை உற்பத்திகளையோ பயன்படுத்துவதற்கு நாம் மாறுவதனூடாக இந்த ஒத்துழைப்பை மக்கள் வழங்க முடியுமென்பது திடகாத்திரமான உண்மையாகும்.




பிளாஸ்டிக் பாவனைக் கட்டுப்பாட்டுக்கு எமது வீடுகளில் மாற்றம் ஏற்படுமாயின், அம்மாற்றம் எமது நாட்டில் பிரதிபலிக்கும். இது தொடர்பாக நாம் சற்றுக்கூடிய வகையில் கவனம் செலுத்துவது அவசியம்.

நாம் அன்றாடம் பாவித்துவரும் பிளாஸ்டிக்பொருட்களைக் கழிவுகளாக வீசும் போது, அவை உக்குவதற்கு மிகவும் நீண்டகாலம் பிடிக்குமென்பது அனைவரும் அறிந்ததேயாகும். இவ்வாறு நீண்டகால அடிப்படையில் சிதைவடையும் பிளாஸ்டிக்குகள் சிறிய சிறிய துண்டுகளாக உடைவடைந்து எமது கண்களுக்குப் புலப்படாத வகையில் மிக நுண்ணிய துகள்களாக மாற்றமடைவதே மைக்ரோ பிளாஸ்டிக்காகும். அதாவது, பிளாஸ்டிக்குகள் சிதைவடைந்து 5 மில்லிமீற்றர் அளவைவிடக் குறைவான நுண்ணிய துகள்களாக மாற்றமடைவதே மைக்ரோ பிளாஸ்டிக்காகும்.



இந்த மைக்ரோ பிளாஸ்டிக்குகள் 5 மில்லிமீற்றர் அளவில் தொடங்கி கண்களுக்குப் புலப்படாத

மிக நுண்ணிய துகள்களாகக் காணப்படுகின்றன. இந்த மைக்ரோ பிளாஸ்டிக்குகளும் சிதைவடைந்து, அவை நனோ பிளாஸ்டிக்குகளாக மாற்றம் பெறுகின்றன. நுணுக்குக்காட்டியூடாக மாத்திரமே மைக்ரோ, நனோ பிளாஸ்டிக் துகள்களை நாம் காணக்கூடியதாக இருக்கும்.

இந்த மைக்ரோ, நனோ பிளாஸ்டிக்குகள் மனிதர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் மிகவும் தீமை பயப்பவையாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதாக, களனிப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடத்தின் உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பேராசிரியர் எம்.எம்.எம். நாஜிம் தெரிவித்தார்.

இந்த மைக்ரோ பிளாஸ்டிக்குகள் எமது சூழலில் மிக இலகுவாகப் பரவுவதுடன், நாம் சுவாசிக்கும் காற்றில், குடிநீரில், உணவுகளில் மைக்ரோ பிளாஸ்டிக்குகளின் துகள்கள் கலந்து எமது உடலில் ஏதோவொரு வகையில் நுழைந்து விடுவதாகவும் இச்சந்தர்ப்பத்தில் அதிகளவான இரசாயனப் பொருட்கள் எமது உடலில் மாத்திரமின்றி, ஏனைய உயிரினங்களின் உடலிலும் சேரக்கூடிய ஆபத்து காணப்படுவதாகவும் அவை மிகவும் நச்சுத்தன்மையானதாக இருக்குமெனவும், ஆராய்ச்சிபூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், சில பார உலோகங்கள் கூட, அவற்றின் மூலமாக எமது உடலில் சேரக்கூடிய ஆபத்து காணப்படுவது தொடர்பாக தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வருடமொன்றுக்கு மனிதர்கள் 39 ஆயிரம் முதல் 52 ஆயிரம் பிளாஸ்டிக் நுண்துகள்களை நுகரக் கூடுமென்பதுடன், 74 ஆயிரத்தை விடக் கூடுதலான பிளாஸ்டிக் நுண்துகள்கள் சுவாசிக்கப்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டில் எமது நாட்டுக்கு Virgin பிளாஸ்டிக் மூலப்பொருட்கள் 3 இலட்சம் மெற்றிக்தொன் இறக்குமதி செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எமது நாட்டில் 1.59 மில்லியன் மெற்றிக்தொன் பிளாஸ்டிக் கழிவுப்பொருட்கள் வருடமொன்றுக்கு உற்பத்தியாகுவதாக கணிப்பிடப்பட்டுள்ளதுடன், இவற்றில் 50 சதவீதமான பிளாஸ்டிக் கழிவுகள் ஆறுகள், ஏரிகள், ஓடைகள், கடலில் சேர்வது தொடர்பாகவும் ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

- Plastic தடை இன்றேல் அத்தனை உயிரினங்களின் உடலிலும் இரசாயன நுண்துகள்கள் இரண்டறக் கலப்பது தவிர்க்க முடியாத ஆபத்தாகி விடும்!
- உணவு மற்றும் பானங்களை பொதியிடுவதில் இனிமேல் இயற்கைப் பொருட்களை நாடுவது அவசியம்!

அத்துடன், எமது நாட்டில் வருடமொன்றில் நபரொருவர் 6 கிலோகிராம் பிளாஸ்டிக்பொருட்களைப் பாவிப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளதாக, ஆராய்ச்சித் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. நாம் பாவித்த பிளாஸ்டிக் கழிவுகளை குப்பைகளில் வீசும் அதேவேளை, கடலிலும் பிளாஸ்டிக் கழிவுகள் கலக்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் மாடுகள் உள்ளிட்ட விலங்கினங்களின் உணவுகளுடனும் மீன் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்களின் உணவுகளுடனும் ஏதோவொரு வகையில் பிளாஸ்டிக் துகள்கள் உட்சேர்ந்து, அவற்றின் உடலில் நுழைந்து விடுகின்றன.

சங்கிலிப் பிணைப்பாகக் காணப்படும் மனித வாழ்வில் இவ்வாறான மீன்கள், பசுப்பால், இறைச்சி உள்ளிட்டவற்றை மனிதர்கள் தமது நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்ளும் போது, அவை மனிதர்களின் உடலில் மெதுமெதுவாக நுழைந்து நாளடைவில் மனிதர்களின் தேக ஆரோக்கியத்தில் பல்வேறுபட்ட பாதிப்புகளை உண்டுபண்ணுவதாகவும் ஆராய்ச்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், பிளாஸ்டிக் பாவனையினால் நாம் இனம் புரியாத நோய்களுக்கு ஆளாக நேரிடலாமென்பதுடன், இதற்கான வைத்தியச் செலவுகளும் நேர விரயங்களும் ஏற்படலாமெனவும் மருத்துவத் தகவல்கள் எச்சரிக்கின்றன.

பிளாஸ்டிக் போத்தல்களில் அடைத்துவரும் குடிநீர், சுவையூட்டி பானங்களைப் பாவித்தல், பிளாஸ்டிக் போத்தல்களில் திரும்பத் திரும்பக் குடிநீரை நிறைத்து வைத்து அருந்துதல், பிளாஸ்டிக் கப்களில் தேநீர் உள்ளிட்ட பானங்களை அருந்துதல், பிளாஸ்டிக் பெட்டிகள், கோப்பைகளில் இட்டு உணவை உட்கொள்ளுதல், ரிசுவினால் உணவுகளைப் பொதி செய்து உட்கொள்ளுதல் உள்ளிட்டவை கூட எமது தேக ஆரோக்கியத்துக்குத் தீமை பயப்பவையாகக் காணப்படுவதுடன், இந்த நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டியதென மருத்துவ ரீதியாகச் சுட்டிக்காட்டுகின்றது.


ஆகையினால், பிளாஸ்டிக்குகளின் உற்பத்திகளை நிறுத்தி, அவற்றின் பாவனையைக் குறைப்பதனூடாக இதற்கான தீர்வு கிடைக்குமென்பதுடன், எதிர்காலச் சந்ததியையும் ஆரோக்கிய ரீதியாகக் காப்பாற்றுவதற்கு எமது ஒத்துழைப்பை வழங்க முடியும்.

பிளாஸ்டிக் உபகரணங்களுக்குப் பதிலாக எமது நாட்டில் காணப்படும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி, பிளாஸ்டிக்குகளுக்கு ஈடான பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். இல்லாவிடின், எவர்சில்வர் போன்ற மாற்று உபகரணங்களைப் பாவிக்கலாம்.

பொலித்தீன் பைகளுக்குப் பதிலாகக் துணிப்பைகள், பனையோலை மற்றும் பன்புல்லினால் இழைக்கப்பட்ட பைகள், பிளாஸ்டிக் போத்தல்களுக்குப் பதிலாக கண்ணாடிப் போத்தல்கள், பிளாஸ்டிக் பானம் உறிஞ்சிகளுக்குப் பதிலாகக் கடதாசியினால் உற்பத்தி செய்யப்பட்ட பானம் உறிஞ்சிகள், பிளாஸ்டிக் கப்கள் மற்றும் கோப்பைகளுக்குப் பதிலாகக் கடதாசி, எவர்சில்வர், பீங்கான் கப்கள் மற்றும் கோப்பைகள், பிளாஸ்டிக் கரண்டிகள், முள்ளுக்கரண்டிகளுக்குப் பதிலாக மரப்பலகையினால் உற்பத்தி செய்யப்பட்ட கரண்டிகள், முள்ளுக்கரண்டிகள், எவர்சில்வர் கரண்டிகள், பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுகளுக்குப் பதிலாக பிரம்பினால் உற்பத்தி செய்யப்பட்ட இடியப்பத் தட்டுகள், பிளாஸ்டிக் மலர்மாலைகளுக்குப் பதிலாக இயற்கை மலர் மாலைகள், தென்னோலையினால் உற்பத்தி செய்யப்படும் மாலைகள் ஆகியவற்றை எமது நாளாந்த வாழ்வில் பாவிக்க முடியும்.

உணவுகளைப் பொதி செய்வதற்கு வாழை இலை, தாமரை இலை, தேக்கம் இலை ஆகியவற்றை பாவிக்க முடியுமென்பதுடன், பாக்குமர ஓலை மட்டைகளினால் உணவுத் தட்டுகளும் பெட்டிகளும் உற்பத்தி செய்யும் முறையும் தற்போது மீளுருவாக்கம் பெற்று வருகின்றன. பனை மற்றும் மரப்பலகைகளினால் உபகரணங்களையும் விளையாட்டுப் பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியும். இந்த இயற்கை முறை அனைவரினதும் ஒத்துழைப்புடன் முழுமையடைய முடியுமெனவும், பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறிருக்க, நாம் கடைகளுக்கு பொருட்களை நுகர்வதற்குச் செல்லும் போது எம்மிடமுள்ள கடதாசி, துணிப் பைகளை எடுத்துச் செல்லும் போது, நாம் கடைகளிலிருந்து வீடுகளுக்கு எடுத்துவரும் பொலித்தீன் பைகளின் அளவுகளைக் குறைக்க முடியும். அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் கூட்டங்கள் நடைபெறும் போது பங்குபற்றுநர்களுக்கு பிளாஸ்டிக் போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்குப் பதிலாக கண்ணாடிப் போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீரை வழங்க முடியும். இவ்வாறான மாற்று வழிமுறைகளையும் எம்மால் பின்பற்ற முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.



**ஆர். சுகந்தினி**

# கொழும்பு அல் ஹிக்மாவில் ஊடக மன்றம் அங்குரார்ப்பணம்





**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

கொழும்பு, அல்ஹிக்மா கல்லூரியின் ஊடக மன்றம் உத்தியோகபூர்வமாக அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர் எம்.எம்.மஹ்சூர் தலைமையில் சனிக்கிழமை (11) இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். நஜீப் மற்றும் கௌரவ அதிதியாக சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எம். தாஜ் மற்றும் பாடசாலையின் ஊடகப் பொறுப்பாளர்களான ரி.என். ஹிதாயா, ரி.பி. சங்கர், எப். பஹாஸா மற்றும் ஊடக மன்ற தலைவர் ஏ.எம்.எம். அனஸ் உள்ளிட்ட ஊடக மன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஊடக மன்றத்தின் இணையத்தளம் ஊடக மன்றத்தின் பெயர்ப் பலகை என்பன அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டதுடன் ஊடக மன்ற உறுப்பினர்களுக்கு சின்னம் சூட்டி பாடசாலையின் ஊடக அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வாழ்வு தரும் ஊற்றான இயேசு

## பரிசுத்த வேதாகமம் தரும் இயேசுவும் சமாரியப் பெண்ணும் உரையாடல்

### அருட்தந்தை பிரான்சிஸ் அடிகளாரின் மறையுரையிலிருந்து.......





கடவுள் மீது மனிதன் எந்தளவுக்கு நம்பிக்கை கொள்கின்றானோ அந்த அளவுக்கு அவர் அவனை மேன்மைப் படுத்துகின்றார் என்பதையே தவக்காலத்தின் மூன்றாம் வார ஞாயிறு வாசகங்கள் நமக்கு கற்பிக்கின்றன.

இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மோசே அழைத்துச் செல்கின்றார். அவ்வேளையில் மனிதனின் அடிப்படைத் தேவையான தண்ணீர் கிடைக்காமல் போகவே அந்த மக்கள் அதனை மோசேவுக்கு தெரிவிக்கின்றனர்.

தண்ணீர் இல்லாமல் தாகத்தோடு நாங்கள் மடிந்து போவதற்கா நீர் எம்மை அழைத்து வந்தீர் என மோசேயின் மீது அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். கடவுளுக்கு எதிராகவும் அவர்கள் முணுமுணுத்தார்கள். அதனைப் பார்த்த மோசே கடவுளிடம் அதனை முறையிடுகின்றார்.

அப்போது கடவுள் மோசேயைப் பார்த்து நீ உன் கையில் வைத்திருக்கும் கோலால் கற்பாறையின் மீது தட்டு. அப்போது அங்கு நீர் கிடைக்கும் என்றார். அவ்வாறே மோசே செய்ய அவர்களுக்கு தேவையான நீர் ஊற்றாக அங்கிருந்து கிடைத்தது.

நற்செய்தி வாசகத்தில் இயேசுவுக்கும் சமாரியப் பெண்ணுக்கும் இடையில் இடம்பெறுகின்ற சம்பாஷனை தெரிவிக்கப்படுகிறது. சமாரியப் பெண் கிணற்றடிக்கு தண்ணீர் எடுக்க வருகின்ற போது அங்கு இயேசுவும் கிணற்றடியில் அமர்ந்திருக்கின்றார்.

இயேசு அந்தப் பெண்ணின் வருகைக்காக காத்திருந்தது போன்று நற்செய்தி நமக்கு சுட்டிக் காட்டுகின்றது.

வழமையாகவே சமாரியர்கள் காலையில் அல்லது மாலையில் தான் தண்ணீர் எடுக்க கிணற்றடிக்கு வருவார்கள். ஏனென்றால் பகலில் கடும் வெயிலில் அவர்கள் கிணற்றடிக்கு வருவதை தவிர்த்துக் கொள்வார்கள்.

ஆனால் இந்தப் பெண் மதிய வேளையில் அங்கு வருகின்றார். நற்செய்தியில் அந்தப் பெண்ணின் விடயங்களைப் பார்க்கும் போது அந்தப் பெண் நல்லவள் அல்ல என்பது தெரிகிறது. அத்தகைய பெண்களை சமூகம் தள்ளி வைப்பதுடன் அவர்களும் தங்களை தனிமைப்படுத்திக் கொண்டு வாழ்வதையே விரும்புவார்கள். அதனால் தான் மக்கள் நடமாட்டம் இல்லாத நேரத்தில் அவள் கிணற்றடிக்கு வருகின்றாள்.

இயேசு அவளிடம் பேச்சுக் கொடுத்து அவள் தன்னிலையை உணரச் செய்கின்றார். அந்த உரையாடல் அவளிடம் இருந்த பாவ நிலையில் இருந்து அவள் மனம் திரும்புவதற்கு வழிவகுக்கிறது. அவள் உடனே ஊருக்குள் சென்று தான் சந்தித்த இயேசுவைப் பற்றி தெரிவிக்கின்றாள். மக்கள் அவளை நம்பினார்களோ இல்லையோ இயேசுவை காண்பதற்காக கிணற்றடிக்கு அவர்கள் வருகின்றார்கள். அவர்கள் இயேசுவின் நம்பிக்கை கொண்டார்கள் என பார்க்கின்றோம்.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கூறுவது போல் தூய ஆவியானவரை நாம் பெற்றுக் கொள்ளும் போது அவர் எமக்குள் வந்து எம் உள்ளத்தில் உள்ள அழுக்குகளை களைந்து எம்மை தூய்மைப்படுத்துகின்றார்.

நீர் தாகத்தை தணிப்பது போல மனிதனிடம் உள்ள அழுக்குகளையும் அகற்றுகிறது. அதே போன்று அவனது உள்ளத்தில் உள்ள அழுக்குகளையும் தூய ஆவியானவர் அகற்றுகின்றார் என்பதையே பவுல் தெரிவிக்கின்றார்.

இத்தகைய அழுக்கான உள்ளம் கொண்டவர்களாக மனிதர்கள் அன்றும் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள்.

தவக்காலம் ஆரம்பித்து இரண்டு வாரங்கள் கடந்து விட்டன.


இந்த காலத்தில் நாம் எமது வாழ்க்கையை பற்றி சிந்தித்துப் பார்த்திருக்கின்றோமா? எமது வாழ்க்கையில் ஏதாவது மாற்றங்கள் நடந்திருக்கின்றனவா? அவ்வாறு நடக்கவில்லை என்றால் இனிவரும் இந்த வாரங்களில் எமக்காக கொடுக்கப்பட்ட இந்த மன மாற்றத்தின் காலத்தில் நாமும் பாவ சங்கீர்த்தனம் மூலம் பாவ அறிக்கை செய்து மனமாற்றம் அடைவோம்.

அன்று கிணற்றடியில் சமாரிய பெண்ணுக்கு வாழ்வளிக்கும் நீரை வழங்கிய இயேசு எமது வாழ்விலும் வாழ்வுக்கான நீரை வழங்குமாறு இத்தவக் காலத்தில் நாம் மன்றாடுவோம்.

எல்.செல்வா...

# இயேசுவின் காயம்பட்ட கைகள் நமக்கு அடைக்கலம் வழங்கும்

## திருத்தந்தை பிரான்சிஸ்



"தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று கூறி திருஅவைப் பணிகளுக்கான வழிகளை இயேசு திறந்துள்ளார் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

திருத்தூதர்களுக்கு தனது கைகளையும் விலாவையும் காட்டுவதன் வழியாக தந்தை கடவுளால் தான் அனுப்பப்பட்ட வழியை சுட்டிக்காட்டிய உயிர்த்த இயேசு அவ்வழியில் செல்ல நம்மையும் அழைக்கின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வலி, பாவம், மரணம் ஆகியவற்றின் எதார்த்தம் ஒருவரைக் கண்டிப்பதற்காக அல்ல, மாறாக ஆழ்ந்த மனிதகுலத்தை குணப்படுத்துவதற்காக என்பதை இயேசு தன் வாழ்வால் எடுத்துரைத்தார் என்று கூறிய திருத்தந்தை இலத்தீன் அமெரிக்காவின் எதார்த்தத்தை அறியவும், விழிப்புணர்வு பெறவும் இயேசுவினுடைய காயம்பட்ட கை நமக்கு சிறந்த அடைக்கலத்தை வழங்கி உதவும் என்றும் தெரிவித்துள்ளார்.

இயேசு, திருத்தூதர்கள் மீது தூய ஆவியை ஊற்றி ஒப்படைக்கப்பட்ட பணியை நிறைவேற்றுவதற்கான வலிமையையும் அதிகாரத்தையும் அளித்து அவர்களை இன்னும் அதிக சுறுசுறுப்பாகவும் ஆர்வமாகவும் மாற்றியது போல நம்மையும் அதே தூயஆவியால் தூண்டி, இறையரசின் நற்செய்தியை உலகெங்கும் அறிவிப்பதற்கான ஆற்றலைத் தருவார் என்றும் திருத்தந்தை கூறினார்.

உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்ற வரிகள், கடவுள் மனிதனுடனும் மனிதர்களிடையேயும் ஏற்படுத்திய "அமைதி" நம் இருப்பை மாற்றி, ஒன்றாக நடப்பதில், நன்மையைத் தேடுவதில், அன்பையும் நல்லிணக்கத்தையும் பரப்புவதில் அன்றாட வாழ்க்கையாகிறது என்றும் புதிய எதார்த்தங்களை உருவாக்குதல், உறவுகளிடையே இணைப்புப் பாலங்களைக் கட்டுதல், அச்சங்கள் மற்றும் குறைகளை அழித்தல் போன்றவற்றிற்கும் உதவுவதாக, திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன்,பார்வையில் தெளிவு, மரியாதை, தன்னார்வத் தொண்டு மற்றும் ஒத்துழைப்பு கொண்டு மறைபணியின் நற்செய்தி ஒளியில் தொடர்ந்து பயணியுங்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஸ்பானிய ஆயர் பேரவையின் அமெரிக்க மறைபணி அமைப்பின் இயக்குநர்கள் குழுவினரை வத்திக்கானில் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை, ஸ்பானிய ஆயர் பேரவைக்கு தலத்திருஅவைப் பணிகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்தும் எடுத்துரைத்தார்.

“et□ perfetta”, அதாவது "சரியான வயது" என்ற பெயருடன் தொடங்கப்பட்ட அமெரிக்க மறைபணி அமைப்பு தன் முப்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில் கிறிஸ்துவின் வயதை, அவரது பாடுகள் மற்றும் மரணத்தின் தருணத்தில் நெருங்குகிறது என்றும்.கிறிஸ்துவின் வழியில் பார்வையில் தெளிவு, மரியாதை, தன்னார்வத் தொண்டு மற்றும் ஒத்துழைப்பு கொண்டு தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை.

இலத்தீன் அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க மக்களின் வளர்ச்சிப் பணிகளுக்காக செயல்படும் இவ்வமைப்பு இயேசுவின் வயதான 33 சரியான வயதை அடைய மீதமிருக்கும் மூன்று வருடங்கள், கிறிஸ்துவை அடையாளப்படுத்த தொடர்ந்து முன்னேறக்கூடிய ஓர் ஆழமான பாதை என்பதையும் உறுதிப்படுத்தினார் திருத்தந்தை.

மெரினா ராஜ்...




# கடவுள் விரும்பும் பேதங்கள் அற்ற வாழ்வு

## தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு தரும் சிந்தனை



கடவுளே நிலை வாழ்வு அளிக்கும் நீரூற்று என்பதை தவக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு வாசகங்கள் தெரிவிக்கின்றன. இந்த வாசகங்கள் இரண்டு கருத்துக்களை மையப்படுத்துகின்றன.

முதலாவதாக, முதல் வாசகமும் மூன்றாம் வாசகமும் ‘கடவுளே நிலைவாழ்வு அளிக்கும் நீரூற்று’ என்று எடுத்துக்காட்டுகின்றன. மிகவும் கொடுமையான அடிமைத்தளையில் சிக்கித்தவித்த இஸ்ரயேல் மக்களை இரக்கமுள்ள இறைத்தந்தை பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டிற்கு நடத்திச் செல்கின்றார்.

ஆனால், நன்றி மறந்து அவரைச் சோதிக்கும் விதமாக மோசேயை கடிந்துகொள்கின்றனர்அந்த மக்கள்.. எந்தளவுக்கு என்றால், தன்மீது இந்த மக்கள் கல்லெறிவார்களோ என்று மோசேயே பயம்கொள்ளும் அளவிற்கு அவர்களின் நன்றி மறந்த நடவடிக்கைகள் இருந்தன என்பதைப் பார்க்கின்றோம்.

அவர்கள் இரபிதிம் வந்தபோது அங்குப் பாளையம் இறங்கினர். மக்கள் குடிக்க அங்கு தண்ணீர் இல்லை. இதனால் மக்கள் மோசேயிடம் வாதாடி, ‘குடிக்க எங்களுக்குத் தண்ணீர் கொடும்’ என்று கேட்டனர். மோசே அவர்களை நோக்கி, “நீங்கள் என்னோடு வாதாடுவது ஏன்? ஆண்டவரை ஏன் சோதிக்கிறீர்கள்?” என்றார்.

அங்கு தண்ணீரின்றித் தவித்ததால் மக்கள் மோசேயை எதிர்த்து முறுமுறுத்து, “நீர் எகிப்திலிருந்து எங்களை வெளியேறச் செய்தது எங்களையும், எங்கள் பிள்ளைகளையும் கால்நடைகளையும் தாகத்தால் சாகடிக்கவா?” என்று கேட்டனர்.

மோசே ஆண்டவரிடம், “இந்த மக்களோடு நான் என்ன செய்வேன்? இன்னும் கொஞ்சம் போனால் என்மேல் கல்லெறிவார்களே!” என்று கதறினார் என்று முதல் வாசகம் எடுத்துரைக்கிறது.

இதன் பிறகு இறைத்தந்தை அவர்களுக்கு பாறையைப் பிளந்து தண்ணீர் கொடுக்கின்றார். நற்செய்தி வாசகத்தில் சமாரியப் பெண்ணிடம் “இந்தத் தண்ணீரைக் குடிக்கும் ஒவ்வொருவருக்கும் மீண்டும் தாகம் எடுக்கும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது; நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்” என்று கூறுவதன் வழியாக, இயேசு தன்னை வாழ்வளிக்கும் ஊற்றாக எடுத்துக்காட்டுகின்றார்.

இரண்டாவது கருத்தாக நாம் காண்பது, இயேசு வேற்றுமைகளை வேரறுத்து சமத்துவ சமுதாயம் பேண விரும்புகின்றார் என்பதே.

தான் எல்லாருக்குமான மெசியா என்றும், தான் யூதராக இருந்தாலும் வேறுபாடுகளைக் கடந்த கடவுளின் மெசியா என்பதை ஆணித்தரமாகச் சமாரியப் பெண்ணிடம் எடுத்துரைக்கின்றார்.

நமது சமூகத்தில் இருப்பது போன்று யூதச் சமுதாயத்தில் சாதிய வேற்றுமைகள் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக ‘தூய்மைதீட்டு’ என்ற வேற்றுமை நிலவியது.

அதாவது, யூத இனத்திற்குள்ளேயே திருமணம் செய்து கொண்டவர்கள் அனைவரும் தூய்மையான யூதர்கள் என்றும், வேற்றினத்தாரோடு திருமணம் செய்துகொண்ட யூதர்கள் தீட்டானவர்கள் அதாவது சமாரியர்கள் என்றும் கருதி வெறுத்தொதுக்கப்பட்டனர்.

இதனை நாம் கலப்புத் திருமணம் என்று அழைக்கின்றோம். இந்தக் கலப்புத் திருமணம் என்பது பாபிலோனிய அரசன் நெபுகத்னேசர் எருசலேம் மீது படையெடுத்து வந்து அதனைத் தாக்கி இஸ்ரயேல் மக்களை அவனது நாட்டிற்குச் சிறைபிடித்துச் சென்றபோது தொடங்கி இருக்கலாம்.

அதுமட்டுமன்றி, அம்மன்னன் எருசலேமை விட்டு போவதற்கு முன்பு தன்னுடன் வந்த சிலரையும் அங்கு விட்டுச் சென்றதாகவும், இதுவும் யூதர்கள் கலப்புத் திருமணம் செய்துகொள்வதற்கு வழிவகுத்தது என்றும் வரலாறுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதன் காரணமாகவே, தங்களைத் தூய்மையான யூதர்களாகக் காட்டிக்கொண்டவர்கள் சமாரியர்களை மிகவும் கொடுமையாக நடத்தினர். எந்தளவுக்கு என்றால் அவர்கள் வாழும் ஊர்கள் வழியாக செல்வதே தீட்டு என்று கருதினர்,

அவர்களோடு பேசுவதையும் உரையாடுவதையும் உறவாடுவதையும் தவிர்த்தனர். இதனால்தான், “குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்" என்று இயேசு சமாரியப் பெண்ணிடம் கேட்டபோது, “நீர் யூதர்; நானோ சமாரியப் பெண். நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?” என்று பதில்மொழி தருகின்றார் அப்பெண்.

இந்த நீண்ட உரையாடலில் சமாரியப் பெண் இயேசுவை, முதலாவதாக சாதாரண மனிதராகவும் இரண்டாவதாக, இறைவாக்கினராகவும் மூன்றாவதாக, மெசியாகவும் கண்டுகொள்கின்றார்.

நான்காவதாக, அங்கு வரும் சமாரியர் பலர் இயேசுவிடம் நம்பிக்கைகொண்டு அவரை மீட்பராக அறிந்துகொள்கின்றனர். மேலும், சமாரியப் பெண்ணுடனான இந்த நீண்ட உரையாடலில் இயேசு, தன்னை ஒரு உண்மை மெசியாவாகவும், எல்லாருக்குமான மீட்பராகவும் அனைத்துலக மீட்பராகவும் வெளிப்படுத்துகின்றார்.

சமாரியப் பெண், கானானியப் பெண், நூற்றுவர் தலைவர், நோயாளர்கள், வரிதண்டுவோர், ஆகியோருடனான தனது அணுகுமுறைகள் வழியாக, தான் சமத்துவ சமுதாயம் பேணவே வந்தேன் என்பதை எடுத்துக்காட்டுகிறார் இயேசு.

யூதர்களால் வெறுத்தொதுக்கப்பட்ட சமாரியர், கடவுளின் பார்வையில் மிகவும் உயர்ந்தவர் என்பதை எடுத்துக்காட்டவே நல்ல சமாரியர்’ உவமையைக் கையாள்கிறார் இயேசு

( லூக் 10:2537).

அவ்வாறே, ‘பத்துத் தொழுநோயாளர்கள் நோய் நீங்கப்பெறுதல்’ என்னும் நிகழ்வில் ( லூக் 17:1119), குணம் பெற்ற பத்து பேரில், சமாரியர் மட்டுமே திரும்பி வந்து இயேசுவுக்கு நன்றி கூறுகின்றார். அவரைப் பார்த்து, “பத்துப் பேர்களின் நோயும் நீங்கவில்லையா? மற்ற ஒன்பது பேர் எங்கே? கடவுளைப் போற்றிப் புகழ அந்நியராகிய உம்மைத் தவிர வேறு எவரும் திரும்பிவரக் காணோமே!” என்றார்.

பின்பு அவரிடம், “எழுந்து செல்லும், உமது நம்பிக்கை உமக்கு நலமளித்தது” என்று கூறும் இயேசுவின் வார்த்தைகள் இதனை நமக்கு உறுதிப்படுத்துகின்றன.

'அந்நியராகிய உம்மைத் தவிர' என்ற இயேசுவின் வார்த்தைகள், தங்களை மட்டுமே தூய்மையானவர்களாகக் காட்டிக்கொண்ட யூதர்கள் சமாரியர்களை எந்தளவுக்குத் தீண்டத்தகாதவர்களாக அதாவது, அந்நியராகக் கருதினர் என்பதையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

இந்த நிகழ்வில், இயேசு எருசலேமுக்குப் போய்க் கொண்டிருந்தபோது கலிலேய, சமாரியப் பகுதிகள் வழியாகச் சென்றார். ஓர் ஊருக்குள் வந்தபொழுது, பத்து தொழுநோயாளர்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்து, தூரத்தில் நின்று கொண்டே, “ஐயா! இயேசுவே, எங்களுக்கு இரங்கும்” என்று உரக்கக் குரலெழுப்பி வேண்டினார்கள் என்றே பதிவு செய்கின்றார் லூக்கா நற்செய்தியாளர்.

அப்படியென்றால், தொழுநோய் பீடித்த பிறகு யூதர் என்றும் சமாரியர் என்றும் பேதமில்லாமல் அந்தப் பத்து பேரும் ஒன்றாகத்தான் இருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

மனிதர் வாழும்போது ஏற்படும் பேதங்கள், நோய்நொடிகளின் போதும், இயற்கைப் பேரழிவுகளின் போதும் இருப்பதில்லை என்பதை வரலாறும் பதிவு செய்கிறது.

. அடக்கமாகும் வரை நாம் அடக்கமாய் இருக்க கற்றுக் கொள்ள வேண்டும், சாதி, மதம் இனம் மொழி ஆகிய பேதங்களை களைந்தெறிய வேண்டும், எதுவும் எதையும் விட உயர்ந்தது அல்ல, யாரும் யாரை விடவும் உயர்ந்தவரும் அல்ல தாழ்ந்தவரும் அல்ல, மனிதர் என்பவர் மனிதம் கொண்டிருந்தால் மட்டுமே, அவர் உயர்ந்தவராக இருக்க முடியும், இல்லையேல் மண்ணுக்குப் போகும்போது கண்ணீர் சிந்த கூட மற்றவர்கள் உடனிருக்க மாட்டார்கள் என்பவற்றை தான் துருக்கியும் சிரியாவும் நமக்கு வாழ்க்கைப் பாடங்களாகச் சொல்லிக் கொடுக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

"எந்த நாட்டுக் குயிலின் கூட்டமும் பாடும் பாடல் கூ கூ, எந்த நாட்டுக் கிளிகள் பேச்சிலும் கொஞ்சும் மழலை உண்டு. ஜாதி என்ன கேட்டுவிட்டு தென்றல் நம்மை தொடுமா? தேசம் எது பார்த்துவிட்டு மண்ணில் மழை வருமா? உன்னோடு நானும் எல்லோரும் ஓர் சொந்தம் அன்புள்ள உள்ளத்திலே" என்று கவிஞர் பழனி பாரதி எழுதுகின்றார். நாம் அனைவரும் ஒரே இறைத்தந்தையின் பிள்ளைகள், அவர் எல்லாருக்கும் சொந்தமானவர், அவரது பார்வையில் யாரும் உயர்ந்தவர் தாழ்ந்தவர் கிடையாது, அவர் எல்லாரையும் மீட்பதற்காகத் தன் மகனை அனுப்பியவர், ஆகவே, இவ்வுலக வாழ்வு நிரந்தரமில்லை, வான்வீடுதான் நமக்கு என்றும் நிரந்தரம்.

அதுவே நமக்கு நிலைவாழ்வு அருளும் இடம் என்பதை எடுத்துக்காட்டி வேற்றுமைகளை வேரறுத்து சமத்துவ சமுதாயம் பேண நம்மை அழைக்கிறார் இயேசு என்பதை உணர்வோம். நிலையற்ற இவ்வுலகில் நிலையான இறைவனைப் பற்றிக்கொண்டு வாழ்வோம்.

அருட்பணி
செல்வராஜ் சூசைமாணிக்கம்




# சுகாதாரத் துறையில் பெண்களின் பங்களிப்பு அதிகம்

## பணிப்பாளர் வைத்திய கலாநிதி என்.நிஷாந்தினி

(தலைமன்னார் விசேட நிருபர்)



சுகாதார துறையில் பெண்களின் பங்களிப்பு மிக அதிகமாக காணப்படுகின்ற போதும் நிர்வாக கட்டமைப்பு என்று பார்க்கும்போது பெண்களின் சதவீதம் மிகக் குறைவாகவே காணப்படுவதாக மன்னார் பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி என்.நிஷாந்தினி இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் 'மெசிடோ' நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வுகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சுகாதாரத்துறையில் பெண்களின் பங்களிப்பு மிகவும் அதிகம்.

அதாவது 62 வீதமான மகளிர் சுகாதாரத் துறையில் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றனர். 2012 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியத்தின் கணக்கெடுப்பின்படி மருத்துவம் போன்ற துறைகளில் பெண்களின் பங்களிப்பு மிக அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 60 வீதம் தொடக்கம் 70 வீதமான பெண்கள் மருத்துவம்,பல் மருத்துவம் இணைந்த மருத்துவ சேவைகளில் இருக்கின்றனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சுமார் 95 வீதமான பெண்களே சேவையில் ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கின்றனர்.

அத்துடன் சுகாதாரப் பணி உத்தியோகத்தர்களாக மன்னார் வைத்தியசாலையில் 80 வீதமானவர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர். சுகாதார பகுதியில் இவ்வாறாக இருக்கின்றபோதும் நிர்வாக கட்டமைப்பு என்று பார்க்கும்போது உயர்ந்த நிலைக்கு வருகின்ற பெண்களின் சதவீதம் மிகக் குறைவாகவே இருக்கின்றது.

மன்னார் மாவட்டம் பெருமைக் கொள்கின்றது. மன்னார்மாவட்டஅரசாங்க அதிபராக ஒரு பெண்மணியே காணப்படுகின்றார்.

மகளிர் தினத்தை மகளிர்களால் கொண்டாடுவதைவிட இத்தினத்தை ஆண்கள் கொண்டாடுவார்களானால் அது மிகவும் சிறப்பு கொண்டதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

# யாழில் புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி




யாழ்.விசேட நிருபர்

புற்றுநோய் விழிப்புணர்வை ஏற்படுத்தல், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவைக் காட்டுதல் என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்தில் நடைபவனியொன்று இடம்பெற்றது. யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய்ப் பிரிவின் ஏற்பாட்டில் இருநூறாவது ஆண்டுவிழாவினைக் கொண்டாடும் யாழ்.பரியோவான் கல்லூரியுடன் இணைந்து நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை இந்த நடைபவனி மேற்கொள்ளப்பட்டது.

நடைபவனியானது யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு பிரதான வீதி ஊடாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை வந்தடைந்து மீண்டும் பரியோவான் கல்லூரியை சென்றடைந்தது. இதில் கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், வைத்தியசாலை சமூகம், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பாரதி பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா



சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரி பாரதி பாலர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த 11ஆம் திகதி பிற்பகல் முன்பள்ளியின் முகாமைத்துவ குழுத்தலைவர் சு.டினேஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊடகவியலாளரும் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தருமான க.ரஜனிகாந்தனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலய முதல்வர் தர்சனி வசந்தமாறனும், கௌரவ விருந்தினராக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி துஸ்ஷானி சதீஸூம் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள், வினோத உடைப்போட்டி, இசையும் அசைவும் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

# ஆனையிறவில் 27 அடி உயரமான நடராஜர் சிலை திறந்துவைப்பு





(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபையின் தீர்மானத்திற்கமைவாக நடராஜர் பணிக் குழுவினால் ஆனையிறவு பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 27 அடி உயரமான நடராஜர் சிலை நேற்றுமுன்தினம் முற்பகல் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையின் கீழுள்ள ஆனையிறவு பகுதியில் பிரதான வர்த்தக மையம், பாரம்பரிய உணவகம், எரிபொருள் நிலையம்,நவீன குளியலறை, விளையாட்டு முற்றம், மற்றும் கடற்கரை உல்லாச விடுதி மற்றும் உணவகம், வங்கி வசதிகள் என்பவற்றுடன் கூடிய ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தை நிறுவும் மூல திட்டமிடல் வரைபடத்தின் அடிப்படையில் முதலாம் கட்ட பணிகள் நிறைவு பெற்று அங்கு நிறுவப்பெற்ற சுமார் 27 அடி உயரமான நடராஜர் சிலை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணிக்கு பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் இந்துமத சிவாச்சாரியார்கள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா, பக்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

அதாவது விசேடமாக 27 அடி உயரமான நடராஜர் சிலை ஆறடி உயரமான பீடத்தில் ஏற்றி கிளிநொச்சி ஆனையிறவு வீர மண்ணுக்கு அழகு சேர்க்கின்றமை குறிப்பிடத்தக்கது

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(நாகர்கோவில் விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்)

கட்டைக்காடு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரினால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் பொன்னுத்துரை கிருஷாந்தன் நேற்று திங்கட்கிழமை (13) உத்தரவிட்டார்.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (12) கட்டைக்காடு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர். அவர்கள் நேற்று திங்கட்கிழமை (13) பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.



நாரந்தனை அண்ணா சிறுவர் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் யாழ். மாநகர சபைஉறுப்பினர் லயன் கலாநிதி நா.தனேந்திரன், சமூகசேவையாளர் யோசப் ஆகியோரின் ஏற்பாட்டில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வின்சன் விஜிதாவின் பிள்ளைகளின் பிறந்த நாள் பரிசாக பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

# சடலம் மீட்பு

சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட தவசிகுளம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் வீட்டுக்கிணற்றிலிருந்து பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த 57 வயதான சோதீஸ்வரி என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணுடைய சடலம் மீட்கப்பட்டு மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# பகிடிவதையால் தலைமறைவான பல்கலை மாணவன் பாதுகாப்பாக மீட்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்ட மொறட்டுவ பல்கலைக்கழக மாணவன் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீட்டை விட்டு வெளியே சென்ற போது காணாமல் போனதாக வீட்டாரினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில், தெல்லிப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள பாழடைந்த வீடொன்றில் இளைஞன் ஒருவர் தங்கி இருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்த பொலிஸார் இளைஞனை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போதே கோப்பாய் பொலிஸ் பிரிவில் காணாமல் போனதாக கூறப்பட்ட மொறட்டுவ பல்கலைக்கழக மாணவன் என கண்டறிந்தனர்.

அதை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், பல்கலைக்கழகத்தில் கடுமையாக பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டேன், தினமும் மாலை 06 மணி முதல் இரவு 10 மணிவரையில் சிரேஷ்ட மாணவர்களுடன் தொலைபேசியில் உரையாட கட்டாயப்படுத்தப்பட்டேன், "சிரேஷ்ட மாணவர்களுக்கு மரியாதை கொடுப்பேன்" என ஆயிரம் தடவைகள் எழுத பணிக்கப்பட்டேன், அந்த கொடுமைகள் சித்திரவதைகள் தாங்காது, பல்கலைக்கழகத்திலிருந்து வீடு திரும்பியதாக மாணவன் கூறியுள்ளான்.

அதேவேளை, தான் மீண்டும் பல்கலைக்கழகம் செல்ல மாட்டேன் என கூறி வீட்டில் வந்து தங்கியிருந்த வேளை, யாழ்ப்பாணம் வந்த இரு சிரேஷ்ட மாணவர்கள் தன்னை அழைத்து சென்று தனிமையான இடத்தில் வைத்து தாக்கி மீண்டும் பல்கலைக்கழகம் வா என்று மிரட்டிச் சென்றதாகவும் மாணவன் கூறியுள்ளான்.

அதனால் தான் பயத்தில் வீட்டை விட்டு வெளியேறி காங்கேசன் துறை கடற்பகுதிக்கு சென்று 2 நாட்கள் அநாதரவாக திரிந்ததாகவும் , பின்னர் அங்கிருந்து தெல்லிப்பளை பகுதியிலுள்ள ஆட்கள் அற்ற வீடொன்றில் இரண்டு நாட்கள் தங்கியிருந்ததாக விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

மாணவனின் கைகள் மற்றும் கழுத்து பகுதிகளில் வெட்டுக் காயங்களும் இருந்துள்ளன. இளைஞன் உயிரை மாய்க்க முயன்று இருக்கலாம் என பொலிஸார் சந்தேகித்துள்ளனர். மாணவனை சட்ட வைத்திய அதிகாரியிடம் மருத்துவ பரிசோதனைக்காக ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நாவற்குழி சம்பவத்தை உதாரணம் காட்டி கைதடியில் மிரட்டல்

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடிப்பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு திருத்த வேலை காரணமாக எரிபொருள் நிரப்ப முடியாது என ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ஊழியர்களை மிரட்டி விட்டு சென்றுள்ளனர். அண்மையில் இடம்பெற்ற நாவற்குழி எரிபொருள் நிரப்பு நிலைய வாள்வெட்டுச் சம்பவத்தை அவர்களுக்கு ஞாபகப்படுத்தி விட்டு சென்றிருப்பதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது 'நாவற்குழி சம்பவம் தெரியும் தானே...அப்படி சம்பவம் செய்வோம்' என எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களை மிரட்டியுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# நகர்வலம்




குவைத் நாட்டின் நிதியுதவியில்

## அநு./கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் வித்தியாலயத்திற்கு புதிய கட்டடம்

### அடிக்கல்நாட்டு விழா இன்று

கெக்கிராவ குறூப் நிருபர்



அநுராதபுரம், கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் மகா வித்தியாலயத்தில் நான்கு வகுப்பறைகளைக் கொண்ட புதிய கட்டட நிர்மாணத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று (14) காலை 9.00 மணிக்கு பாடசாலை அதிபர் ஜே.ஏ. அசாத் முஹம்மத் தலைமையில் நடைபெறவுள்ளது.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைக்கான குவைத் நாட்டு தூதுவர் கலாப் எம். புதையிர் அவர்களின் வழிகாட்டலில் அல் ஹிமா இஸ்லாமிய நலன்புரி அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் (நளீமி) யின் முயற்சியில் குவைத் இஸ்லாமிய கெயார் அமைப்பின் ஊடாகவே இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கான முழு நிதியினையும் குவைத் நாட்டின் நதா அப்துல் அசீஸ் பின்த் தலாமா என்பவர் வழங்குகிறார்.

இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான், அல் ஹிமா இஸ்லாமிய நலன்புரி அமைப்பின் பணிப்பாளர் நூறுல்லாஹ் நளீமி, வலயக்கல்விப் பணிப்பாளர் மஹேஷி மஞ்சரிக்கா ஆகியோர் கலந்துகொண்டு அடிக்கல்லினை நட்டி வைப்பர்.

## நாட்டை கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் திட்டத்திற்கு வெளிநாடுகள் ஒத்துழைப்பு

### காலி மாவட்ட நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன

வெலிகம தினகரன் நிருபர்

பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை உலக நாடுகளின் உதவியுடன் மீண்டும் கட்டியெழுப்பி முன்னோக்கிச் செல்ல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முடிந்துள்ளதாகவும் வெளிநாடுகள் கூட ஜனாதிபதி முன்னெடுத்து வருகின்ற திட்டத்திற்கு உதவ முன்வந்துள்ளதாகவும் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்

காலியில் நேற்று முன்தினம் (12) நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில்; டொலரின் விலை குறைந்து இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது. பொருட்களின் விலைகளும் குறைவடைய ஆரம்பித்துள்ளன. இந் நிலையில் இதனை சகித்துக் கொள்ள முடியாத



ஒரு சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வரும் வேலைத் திட்டங்களுக்கு குந்தகம் ஏற்படும் வண்ணம் நாடளாவிய ரீதியில் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு அரசியல் இலாபம் பெற முயற்சிக்காமல் நாட்டை கட்டியெழுப்ப சகலரும் கைகோர்க்க முன்வர வேண்டிய தருணம் இது. நாட்டிலே ஏற்பட்டிருந்த பாரிய பிரச்சினைகளை 7, 8 மாதங்களில் தீர்த்து வைக்க ஜனாதிபதிக்கு முடிந்தது. எமது நாடு தற்போது சுற்றுலா துறையில் பாரிய முன்னேற்றத்தை அடைந்து வருகிறது. இதனையும் சீர்குலைத்து மீண்டும் பின்னோக்கி செல்ல சில குழுவினர் முயற்சிக்கின்றனர்.

மக்கள் இவைகளை சரியான முறையில் புரிந்து கொண்டு புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

## பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் - கங்காராம விகாராதிபதி சந்திப்பு

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வுநிலை) உமர் பாரூக் பர்கி கொழும்பு கங்காராமய விகாரையின் வணக்கத்திற்குரிய கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரரை சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பின்போது, பாகிஸ்தானிலுள்ள பௌத்த பாரம்பரியம் மற்றும் அப்பகுதிகளுக்கு புனித யாத்திரை செல்வதை ஊக்குவிக்கும் வாய்ப்புக்கள் குறித்தும் இலங்கை பௌத்த மத சுற்றுலாப் பயணிகள் பாகிஸ்தானுக்குச் செல்வதற்கான வழிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இறுதியாக, உயர்ஸ்தானிகர் தலைமையில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. உலர் உணவுப் பொதிகள் விநியோகத்தின் மூலம் எளிய மக்களுக்கு உதவிக்கரம் நீட்டிய பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் முயற்சிகளை வணக்கத்திற்குரிய தேரர் பாராட்டினார்.



(படங்கள்: தெஹிவளை, கல்கிசை விசேட நிருபர்)



## ஹம்பாந்தோட்டை இக்ராவில் 11 மாணவர்கள் சிறந்த பெறுபேறு



(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)



அண்மையில் வெளியான 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்திலிருந்து தோற்றிய மாணவர்களுள் 11 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெறுபேறுகளைப்பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இவர்களில் எம். டி. எம்.யாசிர் (163), எம்.ஆர். ஸஹ்ரா (155), என். எப். நஸ்ரின் (153), டி. என்.கே.எப். ருஹைமா (150), எம்.ஆர்.எப். ஸல்மா (150), எம்.எம்.எப். சல்ஹா (147), எம். ஆர். எம். ரிம்ஸி (146), எம். ஆர். டீ. ரபீஆ (145), எம். ஆர். ரிஸ்னி அப்துல்லாஹ் (144), டீ. ஆர். டீ. ரஸாம் (143), எம், ஏ. எம். சில்மி (140) ஆகிய மாணவர்களே சிறப்பாக சித்தியடைந்து பாடசாலைக்கு புகழ் சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஓய்வுநிலை பிரதி அதிபர் திரு. தம்பையா இராஜரட்னம் தலைமையில் நாளை 15ம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் “தொல்பொருள் சின்னங்களை சட்டத்துக்குப் புறம்பான வகையில் மாற்றியமைத்தல்” பிரச்சினைகளும் சவால்களும் எனும் தலைப்பில் சட்டத்தரணி சு. கமலயோகேஸ்வரன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## கொழும்பு பொது நூலகத்தில் ஈரானிய கலாசார, அறிவியல் புத்தகப்பிரிவு திறந்து வைப்பு





ருஸைக் பாரூக்

ஈரான் நாட்டின் கலை, கலாசார, அறிவியல் சார்ந்த புத்தகங்களை வாசிக்கும் வகையில் கொழும்பு பொது நூலகத்தில் விசேட பிரிவொன்று சனிக்கிழமை (11) சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இப்புத்தகங்கள் நூலகத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விசேட பிரிவில் வாசகர்களின் நலன்கருதி வைக்கப்பட்டுள்ளன. ஈரான் நாட்டின் கலை, கலாசார, அறிவியல் சார்ந்த சகல விடயங்களை அறிந்துகொள்ளும் வசதி இதன் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஈரான் கலாசார பிரிவின் கவுன்சிலர் கலாநிதி பி.எம். குதார்ஸி மற்றும் பொதுநூலகத்தின் பிரதம நூலகர் வர்ணி கங்காபட ஆராச்சி ஆகியோர்கள் கலந்துகொண்டு இப்புத்தகப்பிரிவை ஆரம்பித்து வைத்தனர். இந் நூலக பிரிவு பிரபல பாரசீக கவிஞர் காலஞ்சென்ற நெஜாமி கஞ்ஞாவியின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரின் ஞாபகார்த்தமாக இது திறந்து வைக்கப்பட்டது. இதில் பாரசீக, ஆங்கிலம் , தமிழ் மற்றும் சிங்கள மொழியினால் புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின்போது சிறார்களுக்கு ஈரான் திரைப்படமும் காண்பிக்கப்பட்டது.

## சுற்றுலா பயணியின் கைப்பை திருட்டு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

சுற்றுலாவந்து திஸ்ஸமகாராமை கடலில் நீராடிக்கொண்டிருந்த பிரித்தானிய பெண்கள் மூவர் வைத்திருந்த பையை மோட்டார் சைக்கிளில் வருகை தந்த ஒருவர் திருடிச்சென்றுள்ளதாக கிரிந்தை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக கிரிந்தை பொலிஸார் (13) தெரிவித்தனர்.

திருடிச்செல்லும்போது குறித்த நபர் பயணம்செய்த மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியதாகவும் இதன்போது திருடிய பையினுள் இருந்த ரூ. 60,000 மற்றும் 105 அமெரிக்க டொலர்களை எடுத்து விட்டு பையை திருடன் கைவிட்டுச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் இனங் காணப்பட்டுள்ளதுடன் அவரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## நான்கு பிள்ளைகளின் தாய் மரணம்; திறப்பனையில் ஆர்ப்பாட்டம்

திறப்பனை தினகரன் நிருபர்

நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவரின் மரணம் தொடர்பான விசாரணையில் திறப்பனை பொலிஸார் சட்டத்தை முறையாக அமுல்படுத்தவில்லை என கூறி , உயிரிழந்தவரின் உறவினர்கள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து நேற்று முன் தினம் (12 ) பிற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கடந்த 03ஆம் திகதி இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் திறப்பனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அலிஸ்தான பிரதேசத்தைச் சேர்ந்த தனுஷ்க சஞ்சீவனி கருணாரத்ன (41) என்ற நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவரே விபத்தில் உயிரிழந்தவராவார். இவரின் மரணம் தொடர்பில் பொலிஸார் முறையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனக் கூறியே பிரதேசவாசிகள் பதாகைகளை ஏந்தி பொலிஸாருக்கு எதிரான ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

24 மணித்தியாலங்களுக்குள் மரண விபத்தை ஏற்படுத்திய சாரதியை விடுவிக்க ஏற்பாடுகள் செய்ததாகவும், விபத்துக்குள்ளான வானையும் விடுவித்ததாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் குறிப்பிட்டுள்ளனர்.



விபத்து நடந்த இடத்தில் சாரதியை வாகனத்தில் இருந்து இறக்கி உடனடியாக பொலிஸாரிடம் அழைத்துச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் விபத்துக்குள்ளான பெண்ணை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில் ஆர்வம் காட்டவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இவர்கள் குறித்து உடனடி விசாரணை நடத்தி, சட்டத்தை முறையாக அமுல்படுத்த வேண்டும், விபத்தில் உயிரிழந்தவர்களின் ஆதரவற்ற நான்கு குழந்தைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தி சுமார் ஒரு மணி நேரம் இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திறப்பனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ். குமாரசிங்க மற்றும் பொலிஸ் பரிசோதகர் கயான் சமரகோன் ஆகியோர் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்ந்து பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு விரைவில் நீதிபெற்று தருவதாகவும் இரு தரப்பினரையும் அழைத்து கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி (13) உறுதியளித்ததை அடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.



இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷ் (Eric Walsh) கொழும்பு மேயர் ரோஸி சேனாநாயக்கவை மேயர் பணிமனையில் சந்தித்து சினேக பூர்வ கலந்துரையாடல்களை மேற்கொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## ரஜரட்ட பல்கலை மாணவர்களின் மடிக்கணினிகள் திருட்டு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிகளிலிருந்து ஐந்து மடிக்கணினிகள் திருடப்பட்டுள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் பந்துல மற்றும் துட்டுகெமுனு ஆண்கள் விடுதிகளில் உள்ள கணினிகள் கடந்த 07 மற்றும் 08 ம் திகதிகளில் திருடப்பட்டுள்ளதாக மாணவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



பன்னூலாசிரியரும் முன்னாள் முஸ்லிம் விவாகப் பதிவாளருமான ஏ.ஜே.எம். பளீல் எழுதிய "தொட்டவத்தை பள்ளிவாயல்கள் வரலாறு" எனும் நூல் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. பாணந்துறைக்கு அண்மையில் விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு நூலின் பிரதியொன்றை நூலாசிரியர் கையளிப்பதையும் பிரதேச சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தாஹிர் பாஸி, களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன தலைவர் எம்.எம்.ஜௌபர் உட்பட பிரமுகர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: பேருவளை விசேட நிருபர்)




# அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு ஒரு நாடாக நாம் முன்னேற வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க

அக்குறணை குறூப் நிருபர்

அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு ஒரு நாடாக நாம் முன்னேற வேண்டும், கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைகள் தணிந்து தற்போது நல்லதொரு சூழ்நிலை உருவாகி வருவதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை எம்.சி. வீதியிலுள்ள அவரது மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகச்சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சிறந்தொரு நாட்டை உருவாக்கி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் வெற்றியீட்டியுள்ளது.



ஒரு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்படும். அவற்றை தீர்க்க கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

கடந்த காலங்களில் முகநூல் மூலமே ஜனாதிபதிகள் நியமிக்கப்பட்டனர். இப்போது மக்களுக்கு அதெல்லாம் புரிந்துவிட்டது. கடதாசித் துண்டு ஒன்றின் மூலம் கடைகளையும் அரச நிறுவனங்களையும் மூடியவர்கள் தற்போது முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். இது மக்களுக்கு தெரியும். 1971 மற்றும் 88/89 இல் இந்த நாட்டில் எப்படி அராஜகம் இருந்தது என்பதை மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

தேர்தல்களை நடத்துவது பற்றி எமக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் நாட்டின் பொருளாதார நிலையை பற்றி சற்று சிந்திக்க வேண்டும்.

அரசு பல்வேறு வகையான வரிகளை விதித்துள்ளது. நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக இது மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் குழுக்களும் உள்ளன. இந்த அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு ஒருநாடாக நாம் முன்னேற வேண்டும்.

அதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் வட்ட மேசைக்கு வந்து பேச வேண்டும்.

இன்று எதிர்க்கட்சிகள் தமது அரசியல் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக பொய்களை கூறி மக்களை தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர். நாட்டின் பொருளாதார நிலை மேம்பட்டு வருகின்றது. இன்னும் சில மாதங்களில் பல நிவாரணங்களை வழங்க அரசாங்கம் தயாராகவுள்ளது. அதற்காக நாம் செய்ய வேண்டிய அனைத்து தியாகங்களையும் செய்வோம் என அமைச்சர் தெரிவித்தார்.

## நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் முச்சக்கரவண்டி குடை சாய்ந்து விபத்து ; இருவர் படுகாயம்

தலவாக்கலை குறூப் நிருபர்



நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் நேற்றுமுன்தினம் (12) ஞாயிற்றுக்கிழமை மாலை முச்சக்கரவண்டியொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நானுஓயா பிரதான நகரிலிருந்து ரதல்ல குறுக்கு வீதியூடாக நானுஓயா கிளாரண்டன் பகுதியை நோக்கி சென்ற முச்சக்கரவண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. முச்சக்கரவண்டி சாரதிக்கு வேகத்தை கட்டுப்படுத்த இயலாமையால் இவ் விபத்து நேர்ந்துள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவ்விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு மலையகத்தில் வெறிச்சோடிய வைத்தியசாலைகள்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

வரிக்கொள்கை மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று ஆரம்பித்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் காரணமாக டிக்கோயா ஆதார வைத்தியசாலை மற்றும் பொகவந்தலாவ, மஸ்கெலியா, நுவரெலியா ஆகிய வைத்தியசாலைகள் வெறிச்சோடியிருந்தன.

வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பை அறிந்த பெருந்தொகையான நோயாளர்கள் முன்கூட்டியே வைத்தியசாலைகளுக்கு வந்து சிகிச்சை பெற்றுக்கொண்ட அதேவேளை, பணிப்பகிஷ்கரிப்பை அறியாத நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய தையும் காணக்கூடியதாகவிருந்தது.

வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சை மட்டுமே வழங்கப்படும் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு, வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

## கோஷ்டி மோதலில் ஒருவர் பலி

(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி, தவுலகலபொலிஸ் பிரிவில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக தவுலகல பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த மேலும் இருவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர் ஹந்தெஸ்ஸ என்ற இடத்தைச் சேர்ந்த 32 வயதுடையவர் என தெரியவருகின்றது. இவர் தனது சகோதரனது வீட்டுக்குச் சென்றிருந்த வேளை அயலவர்களுடன் ஏற்பட்ட மோதலிலேயே உயிரிழந்துள்ளார்.

கத்தியால் குத்தப்பட்டு காயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## புதிய நிர்வாகிகள் தெரிவு

ஊவா சுழற்சி நிருபர்

ஊவா தமிழ் இலக்கியப் பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டம் யாப்பு விதிமுறைகளுக்கமைய நேற்றுமுன்தினம் பண்டாரவளை இந்து கலாசார மண்டபத்தில் பேரவையின் தலைவர் ஏ.தியாகலிங்கம் தலைமையில் ஒன்று கூடியது. இதன்போது 2023 ஆம் வருடத்துக்கான புதிய முகாமைத்துவ குழுவாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் கலாபூஷணம் ஏ.தியாகலிங்கம்,செயலாளர் கவிஞர் பழனியாண்டி கனகராஜா, பொருளாளர் கவிஞர் ஆர்.இராஜகோபால், உப செயலாளர் ஆசிரியர் ஏ.எட்வேட், உப தலைவர் கலாபூஷணம் தங்கவேல் (ராதாமணாளன்), ஆலோசகர் கலாபூஷணம் வீ. எஸ்.பாலச்சந்திரன் மற்றும் இணைப்பாளராக எஸ்.ராஜலக்ஷ்மி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் பேரவையின் எதிர்கால திட்டங்கள் மற்றும் கவிதை நூல்கள் வெளியீடு தொடர்பிலும் இதன் போது ஆராயப்பட்டன.

## தொ.தே.சங்கத்தின் மகளிர் தின விழா

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மகளிர் தின விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் இவ்வருட மகளிர் தின விழா நேற்றுமுன்தினம் டிக்கோயா என்பீல்ட் தாயகம் மண்டபத்தில் இடம்பெற்றது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மகளிர் அணி தலைவி திருமதி. சரஸ்வதி சிவகுருவின் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் விசேட அதிதியாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் கலந்து கொண்டு உரையாற்றினர்.



மேலும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன், பிரதி பொதுச் செயலாளர் கல்யாண குமார், தேசிய அமைப்பாளர் நகுலேஸ்வரன், தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் வைலட்மேரி உட்பட மகளிரணி அங்கத்தவர்கள், தொழிலாளர் தேசிய சங்கப் பணிமனை பெண் உத்தியோகஸ்தர்கள், மாவட்ட தலைவிகள், உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், தோட்ட கமிட்டி தலைவிகள், யுவதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகள், சிறப்பு உரைகள், கௌரவிப்புகள் உட்பட பல நிகழ்வுகள் இடம்பெற்றன.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைவாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரனால் இந்து ஆலயங்கள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு சுவாமி ராங்கள், கதிரைகள் என்பன வழங்கப்பட்டன. அதற்கிணங்க நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட டெஸ்போட் மேற்பிரிவு அம்மன் ஆலயம், சின்ன மட்டுக்கலை அம்மன் ஆலயம், சென் சுவ்ஸ் கத்தோலிக்க தேவாலயம், பெரிய மட்டுக்கலை அம்மன் ஆலயம் ஆகியவற்றுக்கு நேற்று முன்தினம் (12) ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்ற உறுப்பினரால் இப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் இ.தொ.கா வின் தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல், உப தலைவர் சச்சிதானந்தன், நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். படம்: தலவாக்கலை குறூப் நிருபர்



கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றிய, உயர்தரத்தில் கல்வியைத் தொடர்கின்ற மற்றும் வேலைவாய்ப்புகளை பெற காத்திருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் தொழிற்பயிற்சி நிலையங்களின் ஊடாக அவரவரின் திறமைக்கேற்ப தொழிற்பயிற்சிகளை வழங்கும் விசேட செயற்றிட்டமொன்று கடந்த சனிக்கிழமை பதுளை சரஸ்வதி தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# தோட்ட புதுமைப் பெண்கள் அமைப்பின் எதிர்ப்பு பேரணி

'வெட்கம் கொண்டு விலகிச் செல்லாதே வீரம் கொண்டு வேர்த்து போக வை' எனும் தொனியில் இராகலை நகரில் சென்லெனாட்ஸ் தோட்ட புதுமைப்பெண்கள் அமைப்பு எதிர்ப்பு பேரணியொன்றை நேற்று முன்தினம் மதியம் நடத்தினர்.

கண்டி சமூக அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் உலக மகளிர் தினத்தையொட்டி இப்பேரணி சென்லெனாட்ஸ் தோட்ட கைகாட்டி சந்தியில் இப்பேரணி ஆரம்பமானது.

இதன்போது வேலைத்தள வன்முறை மற்றும் பாலியல் சீண்டல் எதிராக சமவாய 190 சட்டத்தை தேசிய சட்டமாக அங்கீகரிக்கவும்,

நாட்டின் பொருளாதாரத்திற்கு இரண்டு தசாப்த காலமாக உழைக்கும் தோட்ட தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை வழங்கு, தோட்டத்தொழிலாளர்களுக்கு வீட்டுரிமை,நில உரிமையை வழங்கு, தோட்ட வைத்தியசாலைகளை தேசியமயமாக்கி அடிப்படை சுகாதார வசதியை வழங்கு, நாட்டின் பொருளாதார பின்னடைவால் சிக்கி தவிக்கும் தோட்டத்தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை முன்கொண்டு செல்ல சம்பள உயர்வை வழங்கு, பொருளாதார நெருக்கடியில் அதிகரிக்கப்பட்டுள்ள மின்சார கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடு, பொருட்களின் விலையேற்றம், தொழிலுக்கேற்ற ஊதியம் இடைக்காத நிலையில் கல்வி மற்றும் இடைவிலகல்களில் பாதிக்கப்பட்டுள்ள தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

இதுபோன்ற பல கேள்விகளையும், வேண்டுகோள்களையும் கோஷங்களாக எழுப்பியும் பதாகைகளை ஏந்தியவாறும் பெண்கள் பேரணியை நடத்தினர்.

# மக்கள் நலன்கருதியே ஜனாதிபதியை ஆதரித்தோம்

## மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி

ஹற்றன் சுழற்சி நிருபர்)

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றிருக்காவிட்டால் இந்நாடு அதலபாதாளத்துக்குள் விழுந்திருக்கும். இதனால் எமது மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பார்கள். மக்கள் நலன்கருதியே நாம் ஜனாதிபதியை ஆதரித்தோம். தற்போது அவருக்கு உலக நாடுகள் கைகொடுத்து வருகின்றன. இந்த அரசியலில் ஜீவன் தொண்டமான் பலமான அமைச்சராக இருக்கின்றார். அதன்மூலம் மலையகத்துக்கு பல அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கிடைத்து வருவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

" நானும், எமது தேசிய அமைப்பாளர் சக்திவேல் உள்ளிட்டவர்கள் பிரதேச சபையில் இருந்துதான் மக்கள் பிரதிநிதித்துவ அரசியலை ஆரம்பித்தோம். அப்போது மக்கள் தமது பிரச்சினைகளை எம்மிடம் எடுத்துரைப்பார்கள். நாம் எமது மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானிடம் கூறி, தேவையான வேலைத்திட்டங்களை பெற்றுக்கொள்வோம். இவ்வாறு நாம் மக்கள் சேவையாற்றியதால் தான் எம்மை மாகாணசபை முதல் பாராளுமன்றம் வரை மக்கள் அனுப்பி வைத்தனர்.

எனவே, உங்கள் பகுதி பிரச்சினைகளை எடுத்துக்கூறவும் பிரதிநிதி ஒருவர் அவசியம். அதனால் தான் இப்பிரதேசத்திற்கு துடிப்பான இளைஞர் ஒருவரை வேட்பாளராக நிறுத்தியுள்ளோம். எனவே, அவருக்கு ஆதரவளித்து, அவர்மூலம் சேவைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பலமானதொரு ஸ்தாபனமாகும். அதன்பொதுச்செயலாளர் பலமான அமைச்சராக இருக்கின்றார். எனவே, எம்மால் தான் மலையகத்துக்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய தகைமிருக்கும். மக்கள் மென்மேலும் ஆணை வழங்கினால் எமது பேரம் பேசும் சக்தியும் அதிகரிக்கப்படும். அதற்கு இந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலை சிறந்த களமாக பயன்படுத்திக்கொள்ளவும். நாட்டை பொறுப்பேற்குமாறு சஜித் பிரேமதாசவுக்கும் கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார். எவரும் முன்வரவில்லை. ரணில் விக்கிரமசிங்கதான் அச்சமின்றி பொறுப்பேற்றார். தற்போது நாட்டை படிப்படியாக மீட்டுவருகின்றார்.

உலக நாடுகள் அவரை ஆதரிக்கின்றன. அவர் நாட்டை பொறுப்பேற்றிருக்காவிட்டால் நிலைமை மோசமாக இருக்கும். நாமும் மக்கள் பக்கம் நின்று மக்கள் சார்பில் அவரை ஆதரித்தோம். அவரின் அரசில் எமது பொதுச் செயலாளர் அமைச்சராக இருக்கின்றார்.

பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகின்றார். அண்மையில் கூட உலக வங்கியின் ஆதரவுடன், பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் இலவச சத்துணவு திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார் என அவர் தெரிவித்தார்.

# சேருவிலவில் துப்பாக்கிச் சூட்டு காயத்துடன் காட்டு யானை மீட்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் சேருவில ஸ்ரீமங்களபுர காட்டுப்பகுதியில் காலில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் காட்டு யானையொன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (12) மீட்கப்பட்டுள்ளதாக, சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.



இது தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் தமக்கும் அப்பகுதி மக்கள் வழங்கிய தகவலை அடுத்து, ஸ்ரீமங்களபுர காட்டுப்பகுதிக்கு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சென்று, அந்த யானையின் காயத்துக்கு சிகிச்சை அளித்து வருவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இந்த யானைக்கு மகாவலி வலய விலங்கு கால்நடை வைத்தியர்கள் உணவு வழங்கி வருகின்றனர். சுமார் 35 வயது மதிக்கத்தக்க இந்த யானை, 12 நாட்களுக்கும் முன்னர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருக்கலாம் என, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# யுத்தத்தை விட வீதி விபத்துகள் பயங்கரமானவையாக உள்ளன

## மேஜர் ஜெனரல் விபுல சந்தரசிரி

நிந்தவூர் குறூப் நிருபர்



தற்போது வீதி விபத்துகள் அதிகமாக இடம்பெற்று வருவதினால் இளைஞர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமென்பதுடன், யுத்தத்தை விட வீதி விபத்துகள் பயங்கரமானவையாகக் காணப்படுவதாக, இலங்கை இராணுவத்தின் 24ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி, மேஜர் ஜெனரல் விபுல சந்தரசிரி தெரிவித்தார்.

கல்முனையில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் 18ஆவது விஜயபாகு காலாட் படையணி முகாமின் கட்டளை அதிகாரி மேஜர் உதித்த கலுஆராச்சி தலைமையில் கடந்த சனிக்கிழமை (11) நடைபெற்ற இளைஞர் தன்னார்வ அணியின் அங்கத்தவர்களுக்கான தலைமைத்துவ வழிகாட்டல் செயலமர்வில் பிரதம வளவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

வீதி விபத்துகளினால் இளைஞர் சமூகம் பாதிக்கப்பட்டு வருவது மன வேதனை தருகின்றது. தற்போதைய சாரதிகளின் கவலையீனம் காரணமாக வீதி விபத்துகள் ஏற்படுகின்றன. ஒருவரை ஒருவர் முந்திச் செல்ல வேண்டும், வாகனங்கள் ஓட்டுவதில் தங்களது வீரத்தை நிரூபிக்க வேண்டும் என்ற மனப்பாங்கினாலும் வீதி விபத்துகள் ஏற்படுகின்றன.

கடந்த 13 வருடங்களில் நாட்டில் 68 ஆயிரம் பேர் வீதி விபத்துகளினால் இறந்துள்ளதுடன், ஒரு ஆண்டுக்கு சராசரியாக 3 இலட்சம் பேர் பாதிக்கப்படுகின்றனர். ஒரு நாளைக்கு சராசரியாக 10 பேர் வீதி விபத்துகளினால் பாதிக்கப்பட்டு, சிலர் மரணத்தை தழுவுகின்றனர். ஆகையினால், வீதி விபத்துகளை கட்டுப்படுத்த இளைஞர்கள் ஒவ்வொருவரும் முன்வரவேண்டுமென்பதுடன், உரிய விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்" என்றார்.

# அமைதிக்கு பங்கம் விளைவித்த ஒருவருக்கு அபராதம் விதிப்பு

பாலமுனை தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மது போதையில் நடமாடி அமைதியைச் சீர்குலைத்த ஒருவருக்கு 3,000 ரூபா அபராதம், அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸாவினால் விதிக்கப்பட்டது.

இந்த நபர் தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை (13) ஆஜர்படுத்திய போதே, இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

இந்நிலையில், மேற்படி நபர் அபராதத் தொகையை செலுத்தியதைத் தொடர்ந்து விடுதலை செய்யப்பட்டார்.



# ஒரேவேளையில் வைத்திய நிபுணர்களாக சாதனை படைத்த காரைதீவு தம்பதியினர்

காரைதீவு குறூப் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதேசத்தைச் சேர்ந்த தம்பதியர், பொது மருத்துவத்தில் மருத்துவ முதுமாணிப் பரீட்சையில் சித்தி பெற்று ஒரே வேளையில் பொது மருத்துவ நிபுணர்களாகப் பட்டப் பின்படிப்புப் பட்டம் பெற்றுள்ளனர். வைத்திய அதிகாரி இராஜேஸ்வரன் அர்ஜுன் மற்றும் வைத்திய அதிகாரி கேதுஜா அர்ஜுன் ஆகிய தம்பதியினரே இச்சாதனையைப் படைத்துள்ளனர்.

அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு பல்கலைக்கழக பட்டப்பின் பட்டமளிப்பு விழாவில் இவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது.

இவர்கள் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றி வருகின்றனர்.

# முன்பள்ளி சிறுவர்களுக்கு தென்னங்கன்றுகள் விநியோகம்



தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம், முள்ளிபொத்தானை பிரதேசத்தில் அமைந்துள்ள ஏழு முன்பள்ளிப் பாடசாலைகளைச் சேர்ந்த சிறுவர்களுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (12) தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

தி/ கிண்/ புஹாரி நகர் முஸ்லிம் வித்தியாலயத்தில் வைத்து தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டதுடன், வை.எம்.எம்.ஏ. தம்பலகாமம் கிளை இதனை ஏற்பாடு செய்திருந்தது.

உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், இதன்போது ஆயிரம் தென்னங்கன்றுகள் சிறுவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

# ஒலுவிலில் கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

பாலமுனை தினகரன் நிருபர்



அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டார்.

இச்சந்தேக நபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அவரைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து 860 மில்லிகிராம் கஞ்சாவையும் கைப்பற்றினர்

இச்சந்தேக நபரை நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை (13) ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவை நீதவான் வழங்கியுள்ளார்.

# சட்டவிரோத மதுபானம் தயாரிக்கும் 'கோடா' வைத்திருந்தவருக்கு அபராதம்

தோப்பூர் குறூப் நிருபர்

சட்டவிரோதமான முறையில் மதுபானம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் 'கோடா' 80 போத்தல்களை வைத்திருந்த ஒருவருக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாவை அபராதமாக விதித்து மூதூர் நீதவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பட்டித்திடல் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த நபர் 'கோடா' வைத்திருந்ததை அவதானித்த மூதூர் பொலிஸார், இவரைக் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து, இவரை மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை (13) ஆஜர்படுத்திய போது, இவரது குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

# ஜம்மு-காஷ்மீர், லடாக் இந்தியாவின் பிரிக்கப்பட முடியாத பகுதிகள்

## ஐ.நா.வில் இந்திய வெளியுறவு முதன்மை செயலாளர் தெரிவிப்பு

ஜம்மு – காஷ்மீர், லடாக் என்பன இந்தியாவில் இருந்து வேறுபடுத்த முடியாத மற்றும் ஒன்றிணைந்த பிரதேசங்களாகும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் முதன்மை செயலாளர் ஜக்பீர் கௌர் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 52வது கூட்டத் தொடரில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த கூற்றுகளுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் பேசிய அவர், பக்கச் சார்பாகவும், உண்மைக்குப் புறம்பாகவும் அப்பட்டமாக பொய் உரைத்திருப்பதும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் கௌரவத்துக்கு இழுக்கை ஏற்படுத்தியுள்ளது என்று இந்திய முதன்மை செயலாளர் மேலும் தெரிவித்திருந்தார்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மனித உரிமைகள் சபையில் உரையாற்றிய பாக். வெளிவிவகார அமைச்சர் பியாவல் பூட்டோ சர்தாரி, பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றி பேசும் போது பல தடவைகள் 'ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்முகாஷ்மீர்' என்ற பதத்தை பயன்படுத்தினார்.

இதைக் குறிப்பிட்ட இந்திய வெளிவிவகார முதன்மைச் செயலாளர், இன்றைய பாகிஸ்தானில் பாரபட்சமின்மை என்பது சாத்தியமான ஒன்றல்ல என்றும், பலுசிஸ்தான், கைபர் பக்துங்காவா மற்றும் சிந்து மாகாண மக்கள் அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்டு துன்புறுத்தப்படுவதாகவும், பாகிஸ்தானில் வாழும் மதச் சிறுபான்மையினரான கிறிஸ்தவர்கள், இந்துக்கள், சீக்கியர்கள், அகமதியார்கள், ஹஸாரஸ், ஷியா என்போர் மீது மத நிந்தனை சட்டத்தின் கீழ் தூக்குத் தண்டனை உட்பட கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டதோடு புதிய கிரிமினல் சட்டத்திருத்தத்தின் கீழ் புனிதர்களை இகழ்வோருக்கு மூன்று முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை வழங்கப்பட முடியும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

# ராஜ்நாத்சிங்கின் ஹோலி பண்டிகையில் கலந்து கொண்ட அமெரிக்க வர்த்தக செயலாளர்

இந்திய – அமெரிக்க வர்த்தக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காக டில்லி வந்திருந்த அமெரிக்க வர்த்தக செயலாளர் ஜினா ரெய்மொன்டோ, ஹோலி பண்டிகையை இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இல்லத்தில் கொண்டாடி மகிழ்ந்தார்.

வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் பியுஸ்கோயல், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அனுராக் தாகூர், பா.ஜ.க. பாராளுமன்ற உறுப்பினர் கிரண் ரிஜிஜூ ஆகியோர் பங்குபற்றிய இவ்விழாவில் மேளம் இசைத்து நடனமாடி மகிழ்ந்தார் அமெரிக்க வர்த்தக செயலாளர்.

வர்த்தக பேச்சுவார்த்தைகளிலும் நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் கூட்டத்திலும் கலந்து கொண்ட ஜினா ரெய்மொண்டோ, வர்த்தகத்துக்கான புதிய சந்தைகளையும் ஏற்கனவே செயற்பாட்டில் உள்ளவற்றை விரிவுபடுத்தவும் இவற்றின் மூலம் ஜனநாயகத்துக்கான இரு தரப்பினரின் செயற்பாடுகள் மேலும் வலுப்பெறவும் முடியும் என முன்னர் தெரிவித்திருந்தார்.

வர்த்தகம் தொடர்பாக அரசுகள் தமக்கிடையேயும் இரு தரப்பு தனியார்துறை தொடர்புகள் மூலமும் அபிவிருத்தி செய்வதே வழமை. மேலதிக வர்த்தக பேச்சுவார்தைகள் ஊடாக முயற்சிகளை செயல்திறன் கொண்டவையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

# இஸ்ரேலிய பிரதமர் இந்திய பிரதமருக்கு ஹோலி பண்டிகை வாழ்த்து

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்ஜமின் நெத்தன்யாகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஹோலி பண்டிகை வாழ்த்துகளை ட்விட்டரில் தெரிவித்துள்ளார். ஹோலியின் கவர்ச்சி மிக்க வர்ணங்கள் மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியாக மிளிரட்டும் என வாழ்த்தியுள்ள அவர், இந்தியப் பிரதரை 'என் நண்பரே' என விளித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நெருங்கிய உறவை மேலும் பலப்படுத்துவது தொடர்பாக இந்தியப் பிரதமருடன் பேசியிருப்பதாகவும், இரு தரப்பும் இணைந்து நவீன பாதுகாப்பு முறைகள், பொருளாதார உறவுகள், உயர் தொழில்நுட்பங்கள் என்பனவற்றில் பணியாற்றுவுள்ளதாக ஏற்கனவே ஒரு ட்விட்டர் பதிவில் நெத்தன்யாகு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரசித்தி பெற்ற இந்திய வடகிழக்கு மாநிலங்கள்

இந்தியாவின் அதிகம் அறியப்படாத ஏழு சகோதரிகள் என அழைக்கப்படும் வட கிழக்கு மாநிலங்களின் அருமை பெருமைகளை 'வுலகர்' என அறியப்படும் வீடியோ வலைத்தளங்கள் மூலமே அதிக பிரசித்தம் பெற்று வருவதாக இந்திய சுற்றுலா முகவர்கள் பாராட்டு தெரிவிக்கின்றனர்.

வடகிழக்கு மாநிலங்களான அசாம், மேகலாயா, அருணாசல பிரதேசம், மணிப்பூர், மிசோரம், நாகலாந்து மற்றும் திரிபுரா என்பன நாகரிகமற்ற மலைவாழ் பழங்குடிகள் வாழும், வசதிகளற்ற, வெளியாரை வரவேற்காத மற்றும் மர்மமான பிரதேசங்கள் என்றொரு மாயையே பெரும்பாலான இந்தியருக்குள் இருந்ததால் வெளித் தொடர்புகள் குறைந்த பிரதேசங்களாக இவை இருந்துவந்தன.

கடந்த சில ஆண்டுகளாக வீடியோ கெமராக்களுடன் இங்கு வந்த 'வுலகர்'கள் இரம்மியமான இயற்கை காட்சிகளையும், புன்னகை பூக்கும் மக்களையும், வெளியாருக்கு இங்கே காணப்படும் வசதிகள், வேறு எங்குமே சுவைக்க முடியாத தனித்துவமான உணவுகள், பானங்கள் மற்றும் கலைப் பொருட்களை காணொளி மூலம் உலகம் முழுவதும் எடுத்துச் சென்றனர் என்று தெரிவிக்கும் சுற்றுலா முகவர்கள், தற்போது ஏராளமான பயணிகள் இங்கு வருவதாக மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.இப்பிரதேசங்களுக்கான சுற்றுலா பயணிகளின் வருகை 2019 இல் 24 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாகவும் அவர்களில் பலர் வலைத்தள காணொளிகள் ஊடாகவே இங்கு வரவேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்ததாக கூறியிருப்பதாகவும் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

# உக்ரேன் விவகாரத்தில் அணுவாயுத பிரயோகம் பற்றி ரஷ்யா பேசக் கூடாது

## புதுடில்லி குவாட் மாநாடு கூட்டறிக்கையில் தெரிவிப்பு

குவாட் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் மாநாடு புதுடில்லியில் நடைபெற்ற பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், உக்ரேன் யுத்தத்தில் அணுவாயுத பிரயோகத்தின் சாத்தியக் கூறு பற்றி ரஷ்யா குறிப்பிட்டிருப்பது ஏற்கத்தக்கதல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியாயபூர்வமான சர்வதேச நியதியின்படி இறைமைக்கும், ஆட்புல ஒருமைப்பாட்டுக்கும் வெளிப்படைத் தன்மைக்கும் மதிப்பளிக்கும் வகையில் பூசலுக்கு ஒரு அமைதித் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இக் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உக்ரேன் யுத்தம் தொடர்பாக நாம் தொடர்ந்தும் பேசி வருகிறோம். இது மாபெரும் மனித அவலத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் அணுவாயுத பயமுறுத்தல் ஏற்றுக் கொள்ள முடியாதது. இதே சமயம் மியன்மார் இராணுவ அரசு அங்கு இடம்பெறும் வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். கைது செய்து தடுத்து வைப்பதை நிறுத்த வேண்டும் என குவாட் நாடுகள் கேட்டுக் கொள்வதாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் குவாட் அமைப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கர், குவாட் அமைப்பு பற்றி 2004ம் ஆண்டு பேசப்பட்டதாகவும் இடையில் வந்த சுனாமியால் அது குலைந்து போனதாகவும் குறிப்பிட்டதோடு, 2006ம் ஆண்டு ஜப்பானிய முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே இந்தியாவுக்கு வந்தபோது பிராந்திய சவால்களை சந்திப்பதற்கு குவாட் அமைப்பு உதவியாக இருக்கும் எனத் தெரிவித்ததாகவும் ஆனால் இந்த அமைப்பு 2017ம் ஆண்டிலேயே சாத்தியமானது என்றார். ஜோ பைடன் காலத்திலேயே அது உச்சிமாநாடு அளவுக்கு வரை முடிந்ததாகவும் கூறினார்.

# இந்தியாவுக்கு புகழாரம் சூட்டிய தெற்கு சூடான் ஐ.நா. பிரதிநிதி

தெற்கு சூடான் அரசு இந்தியாவுக்கு கடமைப்பட்டிருப்பதாகவும் அதற்காக அந்நாட்டு அரசு நன்றி செலுத்துவதாகவும் ஐ.நா.வுக்கான நிரந்தர தெற்கு சூடான் பிரதிநிதி அகுய் பொனா மல்வாள், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தரமற்ற உறுப்பினரான இந்தியா, இரண்டு வருட கால உறுப்பு நாடாக விளங்கிய பின் தற்போது வெளியேறிய இருக்கிறது. அதைக்குறிப்பிட்டு உரையாற்றும்போதே அவர் இந்தியாவின் சேவைகளுக்காக நன்றி தெரிவித்தார். ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன். தன் பதவி காலத்தில் இந்தியா தெற்கு சூடானில் ஐ.நா. மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு தன் முழுமையான ஆதரவை வழங்கியிருந்தது என்று அவர் தன் ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டிருந்தார். சூடானில் ஏற்பட்ட உள்நாட்டு போரில் தலையிட்ட ஐ.நா. இரு தரப்பும் ஒரு சமாதான உடன்படிக்கைக்குள் வருவதற்கு உதவியது. இதன் மூலம் சூடான் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தது. இதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான 'அபே' பகுதியில் ஐ.நா. சமாதானப் படை நிறுத்தப்பட்டது. இப்படையில் இந்தியா பெண்கள் மட்டும் உள்ளடக்கப்பட்ட படையணியை நிறுத்தியுள்ளது. ஐ.நா. சமாதான படையொன்றில் அதிக பெண்கள் கொண்ட படையணி பணியாற்றுவது இதுவே முதல் தடவை. லைபீரிய உள்நாட்டு பிரச்சினையின் போதும் இந்திய மகளிர் படையணியையே 2007ம் ஆண்டில் அனுப்பி வைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.




வவுனியா அல்இக்பால் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. வவுனியா, சூடுவெந்தபுலவு பகுதியில் அமைந்துள்ள அல்.இக்பால் மகா வித்தியாலய மைதானத்தில் முதல்வர் ஏ.கே.உபைத் தலைமையில் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன. படங்கள் வவுனியா விசேட நிருபர்அல்இக்பால்

# நினைவேந்தல் நிகழ்வு

*அக்குறணை குறூப் நிருபர்*

மலையக கலை கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் மறைந்த கலைஞர்கள் மூவரினது நினைவேந்தல் நிகழ்வு கண்டியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, கண்டி வீரகெப்பட்டிப் பொல நினைவு மண்டபத்தில் இது இடம்பெறவுள்ளது.

பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் பின்வரும் மறைந்த கலைஞர்கள் நினைவு கூறப்படுவர்.

பிரபல சிங்கள சினிமா நட்சத்திரமும் அரசியல்வாதியுமான காமினி பொன்சேக்கா, திரைப்பட ஔிப்பதிவாளர் லெனின் மொராயஸ் மற்றும் ஊடகவியலாளர் எம்.எஸ் குவால்தீன் ஆகியோர்களின் நினைவு தினமே அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திரைப்பட நடிகர் தமித் பொன்சேக்கா, பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்துறை முன்னாள் பேராசிரியர் கலாநிதி துரை மனோகரன், மற்றும் வீரகேசரி ஆசிரிய பீடத்தைச். சேர்ந்த ஜோர்ஜ் ஸ்டீவன் ஆகியோர் கலந்து கொள்வர்.

விசேட அதிதிகளாக பிரபல சிங்கள திரைப்பட இயக்குனர் பத்மசிரி கொடிகார, திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நடிகர் விஸ்வ கொடிகார, சிங்கள தமிழ் திரைப்பட நடிகர் ரிசர்ட் வீரக்கொடி, நீதவான் ஏ.எம். வைஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

இது தவிர மலையகத்தைச் சேர்ந்த பல ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் உட்பட அண்மையில் 80 வயதைக் கொண்டாடிய சமூக சேவையாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான அமுத விழா நாயகன் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் ஆகியோரும் அதிதிகளும் பொன்னாடை போர்த்தி, விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர்.

மேற்படி விழாவில் கலைத் துறையில் ஆர்வம் கொண்ட அனைவரையும் மலையக கலை கலாசார சங்கம் அன்புடன் அழைப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# சேவை நலன் பாராட்டு விழா



வலப்பனை கல்வி வலயத்தில் ஆரம்ப பிரிவு பாடசாலைகள் மற்றும் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் பாடசாலைகளில் ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் வலய கல்வி பணிப்பாளர்களின் சேவை நலனை பாராட்டி அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இராகலை உயர்நிலை பாடசாலையில் பாரதி மண்டபத்தில் இந்நிகழ்வுகள் ஆரம்ப பிரிவு பாடசாலைகளின் உதவி கல்வி பணிப்பாளர் கே.யசோதரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக வலப்பனை கல்வி வலய பணிப்பாளர் திருமதி டி.எம்.எம்.திஸாநாயக்க, முன்னாள் கல்வி பணிப்பாளர் பி.பி. நவரத்தின,உட்பட உதவி கல்வி பணிப்பாளர்களான வி.யோகராஜ்,ஏ. கே.அலிக்வெல உட்பட அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இதன்போது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை சிறந்த பெறுபேறுகளை பெற்று தந்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாணவி மீது பாலியல் சேட்டை

*அக்குறணை குறூப் நிருபர்*

கண்டி, ஹசலக்க மாணவர் படையணி முகாமில் பயிற்சியில் ஈடுபட்ட மாணவியொருவர் மீது இனந்தெரியாத நபரொருவர் பாலியல் சேட்டை புரிந்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டி, ஹசலக்க மாணவர் படையணி முகாமில் பயிற்சியில் ஈடுபட்ட பின்னர் விடுதியில் தாங்கியிருக்கும் மாணவி மீது இனந்தெரியாத நபரொருவர் பாலியல்சேட்டை புரிந்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டி நகரிலுள்ள பிரபல பாடசாலையொன்றைச் சேர்ந்த மாணவியொருவர் இரவு வேளை தனது விடுதி அறையில் நித்திரையில் இருக்கும் போது இனந்தெரியாத

நபரொருவர் பாலியல் சேட்டை புரிந்து தப்பிச்சென்றதாக மாணவி புகார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஹசலக்க பொலிஸாரும் ரன்தெம்பே மாணவர் படையணி பயிற்சி முகாம் அதிகாரிகளும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பலாங்கொடை பிரீமியர் லீக் மென்பந்து கிரிக்கட் போட்டி

**இரத்தினபுரி சுழற்சி, பலாங்கொடை தினகரன் நிருபர்கள்**

இனங்களுக்கிடையே புரிந்துணர்வு ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பலாங்கொடையில் பிரிமியர் லீக் மென்பந்து கிரிக்கட் போட்டி தொடர் எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் பலாங்கொடை பொது விளையாட்டு திடலில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன

பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த பிரபலமான 120 வீரர்கள் பிரதான 8 அணிகளாகப் பிரிந்து 8 முகாமையாளர்களின் கீழ் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்போட்டி தொடருக்கு அரச மற்றும் தனியார் துறைகளின் வர்த்தக நிறுவனங்களும் வர்த்தகர்களும் தமது பூரண ஒத்துழைப்பையும் அனுசரனையையும் வழங்கி வருவதாகவும் வெற்றி பெறும் அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் கவர்ச்சியான பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகவும் ஏற்பாட்டு குழுவினர் தெரிவிக்கின்றனர்.

# கரப்பந்தாட்டப் போட்டியில் மோதல் பல்கலை மாணவர்கள் 7 பேர் காயம்

*அக்குறணை குறூப் நிருபர்*

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கரப்பந்தாட்டப்போட்டியில் ஏற்பட்ட கோஷ்டி மோதலில் 7 மாணவ மாணவிகள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவபீடம் மற்றும் வர்த்தகப் பீடம் என்பவற்றுக்கிடையே இடம்பெற்ற கரப்பந்தாட்டப்போட்டியை அடுத்தே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. தோல்வியடைந்த ஒரு பிரிவினர் அதனைத் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் மோதல் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

இதில் மூன்று மாணவர்களும் நான்கு மாணவிகளும் காயமடைந்து சிகிச்சைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இப்போட்டி பல்லைக்கழகநிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.



கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியிலுள்ள மகா வித்தியாலயத்துக்கு மாணவர்களின் நலன்கருதி பான்ட் வாத்திய கருவிகள் கனடாவில் பணிபுரியும் மெற்ரோலானட் மீடியா ஊழியர்களின் நிதிப்பங்களிப்பில் வழங்கியிருந்தனர். யாழ் மாநகரசபை உறுப்பினர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் நேரடியாக பாடசாலைக்கு சென்று பான்ட் வாத்திய கருவிகளை வழங்கிவைத்தார்.

# இலவச டீசல் விநியோகம்

*சாவகச்சேரி விசேட நிருபர்*

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான இலவச டீசல் விநியோகம் நேற்று திங்கட்கிழமை இடம்பெறவிருப்பதாக கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

டீசலுக்கான பதிவுகள் திங்கட்கிழமை காலை சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் இடம்பெறும். இத்தினத்தில் 2023ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரியை செலுத்தி எரிபொருளுக்கான டோக்கனைப் பெற்று தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

4 பரப்பிற்கு ஒரு லீற்றர் என்ற அடிப்படையில் 12 பரப்புக்கும் 60 பரப்புக்கும் இடைப்பட்ட வயல் நிலத்தில் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகம் இடம்பெறுமென மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

## தார், கோலாஸ் வழங்குவதற்காக விலைமனுக்களை பெற்றுக்கொள்ளல் – 2023

கட்டான பிரதேச சபைக்கு தார் மற்றும் கோலாஸ் கொள்வனவு செய்வதற்காக பின்வரும் உருப்படிகளுக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | உருப்படி | அளவு | விலை |
|---|---|---|---|
| 01 | 80/100 தார் 180 லீற்றர் உள்ள பெரல் | 353 | |
| 02 | CSS 1 200 லீற்றர் உள்ள பெரல் | 50 | |

இந்த விலைமனுக்களை மேற்கூறப்பட்ட மாதிரியின் பிரகாரம் பிழையின்றி பூர்த்தி செய்து 2023 மார்ச் மாதம் 28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2023 தார், கோலாஸ் கொள்வனவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு ''தலைவர், கட்டான பிரதேச சபை, தெமங்ஹந்திய'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது என்பதுடன் அன்றைய தினமே மு.ப. 10.00 மணிக்கு முன் தெமங்ஹந்திய தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அன்றைய தினமே மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

குறித்த விடயத்திற்காக உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைகளை கேள்விச் சபை ஏற்றுக்கொண்டால் அந்த விலைகளின் கீழ் குறித்த உருப்படிகள் உங்களால் 2023 வருடம் முழுவதும் வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் தேவையின் பிரகாரம் அவ்வப்போது கட்டளைகள் வழங்கப்படும் என்பதுடன் தெமங்ஹந்திய தலைமை அலுவலக களஞ்சியசாலைக்கு உங்களால் போக்குவரத்து வழங்குதல் வேண்டும்.

உங்களால் வழங்கப்படும் உருப்படிகள் தொழில்நுட்ப மதிப்பீட்டு அதிகாரியின் பரிந்துரைக்கு அமைவாக அல்லாவிட்டால் நிராகரிக்கப்படும் என்பதுடன் வேறொரு வழங்குநருக்கு குறித்த கட்டளை வழங்கப்படும்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைமனுக்களில் ஒன்றை அல்லது சிலவற்றை அல்லது அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது அங்கீகரிக்கப்பட்ட தர நிறுவனத்தின் தரச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை கட்டான பிரதேச சபையில் 031 2222275 எனும் தொலைபேசி இலக்கத்தில் கடமை நேரங்களில் வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**கே. சிசிரகுமார பிரனாந்து,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**கட்டான பிரதேச சபை,**
**தெமங்ஹந்திய.**

## இலங்கை துறைமுக அதிகாரசபை

## மருந்து வகைகளுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல் – 2023 ஆம் ஆண்டு

2023ஆம் ஆண்டுக்காக கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்களை வழங்குவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையில் பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனம், கூட்டுறவு சங்கம் உட்பட அரச நிறுவனங்கள், தனியார் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் வேறு நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 31 | மேற்கத்திய மற்றும் ஆயுர்வேத மருத்துவ உபகரணங்கள் மற்றும் மேற்கத்திய மருந்து வகைகள் |

**நிபந்தனைகள்**

01. வழங்குநர்களாக பதிவு செய்வதற்கு விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்கள் தமது பதிவு சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மேல் குறிப்பிடப்பட்ட பொருட்களுக்காக பதிவு செய்வதற்காக அலுவலக நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை 2023.04.03ஆம் திகதி வரையில் தேவையான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு பொருட்களுக்காக 1000 ரூபா மற்றும் வெட் வரியை செலுத்திய பின் இல. 45, லேடன் பெஸ்டியன் வீதி, கொழும்பு 01இல் அமைந்துள்ள வழங்கல் பிரிவின் தலைமை பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
03. வழங்கலுக்காக பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுவதோடு பதிவு செய்யப்படாத மற்றைய வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலை கோரல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமை துறைமுக அதிகாரசபை வசமானது.
04. முறையாக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு மற்றும் நேரத்திற்கு பொருட்களை விநியோகிப்பதற்கு தவறுகின்ற மற்றும் துறைமுக அதிகாரசபை மூலம் வெளியிடப்படும் கோரலில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் மற்றும் மாதிரிக்கு அமைய சிறந்த தரத்தைக் கொண்ட பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலில் இருந்து நீக்கப்படும்.
05. அனைத்து விண்ணப்பங்களும் ''2023 ஆம் ஆண்டுக்காக மருந்து வழங்குநர் பதிவு செய்தல்'' என்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைமை பொறியியலாளர் (வழங்கல்), வழங்கல் பிரிவு, இலங்கை துறைமுக அதிகாரசபை, இலக்கம் 45, லேடன் பஸ்டியன் வீதி, கொழும்பு 01 என்ற முகவரிக்கு 2023.04.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் உள்ள தலைமை பொறியியலாளர் அலுவலகத்திற்கும் இந்த விண்ணப்பத்தை ஒப்படைக்க முடியும். இதற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.
06. மேலதிக விபரங்களை 2323102, 2432866, 2328342, 2320250, 2482761 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைமை பொறியியலாளர் (வழங்கல்),**
**வழங்கல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**இலக்கம் 45, லேடன் பஸ்டியன் வீதி, கொழும்பு 01.**

## விலைக்கோரலுக்கான அழைப்பு

### மாவட்ட பொது வைத்தியசாலை, மாத்தறை

**மாத்தறை மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு பின்வரும் பொருட்களை வழங்கக்கூடிய அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன**

இந்த வழங்கலுக்கான சகல விண்ணப்பப் படிவங்களையும் பின்வரும் வகையில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வழங்கல் தொடர்பான விபரங்கள் | தேவையான அளவு | விண்ணப்பதாரரின் தகைமை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கெஸ்மன் துணி பச்சை நிறம் (60 அங்குல அகலம்) | 1000 மீற்றர் | நிறுவனப் பதிவுச் சான்றிதழ் | 3500.00 |
| 02 | கெஸ்மன் துணி பழுப்பு நிறம் (60 அங்குல அகலம்) | 1000 மீற்றர் | | |
| 03 | கரிக்கன் துணி (60 அங்குல அகலம்) | 2000 மீற்றர் | | |
| 04 | கரிக்கன் துணி (36 அங்குல அகலம்) | 4000 மீற்றர் | | |
| 05 | திரைச்சீலைகள் கிறீம் நிறம் (60 அங்குல அகலம்) | 100 மீற்றர் | | |
| 06 | வெள்ளை கட்டில் விரிப்புகள் 90''x72'' | 1000 | | |
| 07 | கட்டமிடப்பட்ட துணி 90''x72'' | 250 | | |
| 08 | நுளம்பு வலைகள் (சிங்கள்) | 50 | | |
| 09 | ரெக்ஸின் துணி 60'' | 250 மீற்றர் | | |

இந்த வகுதியை வழங்கக்கூடிய நிறுவனங்களிடமிருந்து இயைபுடைய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மீளளிக்கப்படாத 3500.00 ரூபா விண்ணப்பப் படிவக் கட்டணத்தை மாத்தறை பொது வைத்தியசாலை சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் குறித்த நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதியுடன் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. விலைமனுக்களை 2022 மார்ச் மாதம் 15ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 03ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2022 ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்குள் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பிக்கலாம். அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களை 041-2227820 அல்லது 041-2222261 (கிளை 134) எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மாத்தறை.**

## கம்பனி பெயர் மாற்றல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி தனது பெயரை (8ம் இல. சட்டத்தின் பிரகாரம்) 2023 பெப்ரவரி 20ம் திகதி முதல் மாற்றியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
சாக்ஸ் எனலிடிக்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனியின் இல : பீவீ 121383**

**முகவரி:**
5ம் மாடி, இல. 275, நாவல வீதி, நாவல.

**கம்பனியின் புதிய பெயர்:**
வெராசிட்டி டிஜிட்டல் (பிரைவட்) லிமிட்டட்

எஸ்ஜே கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டெட
கம்பனி செயலாளர்கள்
இல 20/A, வல்பொல வீதி, அக்கோனா, அங்கொடை.

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்

**PROJECT ID: P 163305**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம்

மேற்படி தலைப்பின் கீழ் 2023 மார்ச் 10ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் 20ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தின் 11ஆம் பந்தியில் உள்ள விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கான திகதி **2023-04-23** எனத் தவறாக பிரசுரமாகி விட்டது. எனவே அது **2023-03-24ஆம்** திகதி எனத் திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**கிழக்கு மாகாணம், திருகோணமலை.**

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**118**

**ஜீப்புகள், பிக்கப்புகள்**
விற்பனைக்கு

WP PE-0422 Toyota hilux cab, 2007, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958
016179

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

CP AAG-4985 Bajaj, 2012, SP QS-9998 Bajaj, 2008, NW ABM-15 1 7 Baja j, 2016 t h reewhee l கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810
016177

SG DAE- 9033 Tata ace, 2 016, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810
016178

**Repeat Your Ad For Better Offers**

---

**United Nations Development Programme**

UN DP

# CALL FOR PROPOSAL FROM CSOs/NGOs

## Expanded Support for Durable Resettlement and Reintegration (EDRR) in Sri Lanka under the Joint Programme for Peace

UNDP partners with people at all levels of society to help build nations that can withstand crisis, and drive and sustain the kind of growth that improves the quality of life for everyone. On the ground in 177 countries and territories, we offer global perspective and local insight to help empower lives and build resilient nations.

This Call for Proposal (CFP) is specifically related to Joint Programme for Peace (JPP). The Joint Programme for Peace (JPP) aims to contribute and sustain efforts and initiatives in building sustainable peace in Sri Lanka. This is achieved through harnessing support from multiple partners for strategic, coherent and sustainable support to fast-track the advancement of priority transitional justice and confidence building measures.

In this context the United Nations Development Programme in Sri Lanka invites eligible National and/or international Non-Government Organizations to submit their Information and proposals to partner with UNDP to implement project activities of "Expanded Support for Durable Resettlement and Reintegration (EDRR) in Sri Lanka" project.

| # | Reference ID | Description |
|---|---|---|
| 1 | CFP/JPP/2303/10 | Increased access to services, livelihood development, and social integration of resettled communities in Jaffna district |
| 2 | CFP/JPP/2303/11 | Increased access to services, livelihood development, and social integration of resettled communities in Kilinochchi and Mullaitivu districts |
| 3 | CFP/JPP/2303/12 | Increased access to services, livelihood development, and social integration of resettled communities in Batticaloa and Trincomalee districts |

**A virtual pre-proposal meeting will be conducted via zoom on 15th March 2023 from 11 AM – 12 PM via zoom. Bidder participation is highly recommended.**

This procurement process is being conducted through Online Tendering System of UNDP and detailed instructions and link to the procurement can be accessed from **www.lk.undp.org > procurement > procurement notices.**

NOTE: Bid Submission deadline appearing on Quantum portal will be FINAL and prevail on the ones appearing on all places.

**Head of Procurement**
**United Nations Development Programme**
**202-204, Bauddhaloka Mawatha**
**Colombo 07, Sri Lanka**

*UNDP reserves the right to accept or reject any offer.*
*The procurement process will be governed by the rules and regulations of the United Nations Development Programme (UNDP).*

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு – அரநாயக்க பிரதேச சபை

அரநாயக்க பிரதேச சபைக்குரித்தான புதிய நீர் சேமிப்புத் தாங்கிக்கு பிரவேசிக்கும் வீதியை மேம்படுத்துதல் தல்கஸ்பிட்டிய முதல் தரன வரையான வீதியை மேம்படுத்துவதற்காக ஹெம்மாத்தகம நீர் வழங்கல் திட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள மானியத்தின் கீழ் இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலை விடயங்களுக்காக அரநாயக்க பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரினால் திறமைவாய்ந்த தகுதிகளைக் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் ஒப்பந்தத்திற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | ஒப்பந்த இலக்கம் | வேலை விடயம் | வேலையின் சராசரி மதிப்பீட்டுப் பெறுமதி (ரூ. மில்) | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | ஒப்பந்தப் பதிவு (CIDA) |
|---|---|---|---|---|---|
| 01 | EE/KG/WS/17/2022 | புதிய நீர் சேமிப்புத் தாங்கிக்குப் பிரவேசிக்கும் வீதியை மேம்படுத்துதல் தல்கஸ்பிட்டிய முதல் தரன வரை (0+000 - 0+377 கி.மீ.) | 13.8 | 5000/- | C7/C6/C5 |

02. இந்த விலைக் கோரல் திறந்த போட்டி ரீதியிலான பெறுகை நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் வீதி அபிவிருத்தித் துறைக்காக நிர்மாண அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.
04. இந்தப் பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படுவதற்குள்ள வேலையின் மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்கு (வெட் மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) குறைவானதால் 2023-02-09ஆம் திகதிய 04/2016(iv)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை CIDA முன்னுரிமை ஏற்புடையதாகும் என்பதுடன் 2021-01-11ஆம் திகதிய 03/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபமும் ஏற்புடையதாகும்.
05. சகல விலைமனுதாரர்களும் வீதியைப் பரீட்சித்துப் பார்த்து விலைமனுக்களைச் சமர்ப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது என்பதுடன் 2023-03-14ஆம் திகதி முதல் 2023-04-04ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் வீதியைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. ஆர்வமுள்ள திறமைவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்கள் மற்றும் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத்தின் தொகுதியொன்றை 2023-03-14ஆம் திகதி முதல் 2023-04-04ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மேற்குறிப்பிட்ட வகையில் கட்டணங்களைச் செலுத்தி அரநாயக்க பிரதேச சபை அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யலாம்.
07. சகல விலைமனுதாரர்களும் இந்த பெறுகைக்காக மேற்குறிப்பிடப்பட்ட பிணை முறி பெறுமதிக்கு இயைபான விலைமனுப் பிணை முறியாக இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 2023-04-04ஆம் திகதி முதல் 2023-08-02ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் தலைவர், அரநாயக்க பிரதேச சபை பயன் பெறுநர் எனும் பெயரில் பெற்றுக்கொண்ட விலைமனுப் பிணை முறியொன்றின் மூலம் அல்லது இயைபுடைய பெறுகையின் பெயரில் செலுத்தப்பட்ட விலைனுப் பிணை முறித் தொகையாக அரநாயக்க பிரதேச சபைக்கு இயைபுடைய தொகையைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனு ஆவணங்களுடன் பிணை முறியைச் சமர்ப்பிக்கும் போது பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது விலைமனுப் பிணை முறியின் மூலப் பிரதியைக் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. இந்த வேலைகள் தொடர்பான விபரங்களை அரநாயக்க பிரதேச சபைக்கு வருகை தந்து அல்லது 035 2258075, 035 2258876 எனும் தொலைபேசி இலக்கங்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தேவையானவர்கள் வாரத்தின் வேலை நாட்களில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
09. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-04-06ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், பிரதேச சபை, அரநாயக்க எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அரநாயக்க பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான கடித உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
10. 2023-04-06ஆம் திகதி மு.ப. 11.15 மணிக்கு அரநாயக்க பிரதேச சபை அலுவலகத்தில விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
11. விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
12. சகல விலைமனுக்களும் 2023-07-05ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதேச சபை, அரநாயக்க.**

2023-03-14ஆம் திகதி

---

# முதியோர்களுக்கான தேசிய செயலகம்

## கேள்விக்கோரல்

### செவிப்புலன் உபகரணங்கள், கண்வில்லைகள் மற்றும் மூக்குக்கண்ணாடிகள் வழங்குதல் - 2023

**2023 வருடத்திற்காக கீழ்குறிப்பிட்டுள்ளவாறு செவிப்புலன் உபகரணம், கண்வில்லைகள் மற்றும் மூக்குக்கண்ணாடிகள்** கொள்வனவு செய்வதற்காக அத்துறையில் தகைமைப் பெற்ற வழங்குனர்களிடமிருந்து, 2ஆவது மாடி, D பிரிவு, செத்சிறிபாய 2ஆவது கட்டிடம், பத்தரமுல்லை என்ற முகவரியில் அமைந்துள்ள முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கொள்முதல் சபை தலைவரால் முத்திரையிடப்பட்ட கேள்விக்கோரல்கள் கோரப்படுகின்றன.

| வகை | அளவு | கேள்விப்பிணை (ரூ) |
|---|---|---|
| செவிப்புலன் உபகரணங்கள் | 1,000 | 550,000.00 |
| கண்வில்லைகள் | 5,000 | 400,000.00 |
| மூக்குக்கண்ணாடிகள் (குறும்பார்வை, நீள்பார்வை) | 2,500 | 175,000.00 |

**பொது நிபந்தனைகள்**

1. செவிப்புலன் உபகரணங்கள் மற்றும் மூக்குக்கண்ணாடிகளுக்கான வழங்கல் நிறுவனத்தின் கிளைகள் நாடளாவிய ரீதியில் அமைந்திருப்பது அத்தியாவசியமாகும்.
2. கேள்விப்பத்திரங்களை **2023.03.14ஆம் திகதி முதல் 2023.03.31 ஆம் திகதி** வரையிலான வார நாட்களில் **மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி** வரையில் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இல்லாவிடின் **www.srilankaeldercare.gov.lk** எனப்படும் இணையத்தளத்தில் **News எனும் இடத்திற்கு** பிரவேசித்து அக்கேள்விப்பத்திரங்களை பதிவிறக்கம் (Download) செய்துகொள்ளலாம்.
3. மேற்குறித்த அட்டவணையின்படி கேள்விப்பிணைக்காக கேள்விப்பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்திற்கேற்ப அரசால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கிப்பிணையொன்றை முன்வைக்க வேண்டும். அக்கேள்விப்பிணையானது **2023.06.30** வரை செல்லுபடியாக வேண்டும்.
4. முத்திரையிடப்பட்ட கேள்விகள், **2023.04.03 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்னர் **தலைவர், வழங்கல் சபை, முதியோர்களுக்கான தேசிய செயலகம், 2ஆவது மாடி, செத்சிறிபாய 2ஆவது கட்டிடம், பத்தரமுல்லை** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பவும் அல்லது முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கணக்குப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடவும். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்விக்கோரலை சமர்ப்பிக்கும் வகையை தெளிவாக குறிப்பிடவும். கேள்விக்கோரல்கள் திறக்கும் நடவடிக்கையானது அன்றைய தினம் **பி.ப 2.00** மணிக்கு நிறுவனத்தில் இடம்பெறும். இச்சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர்கள் மற்றும் அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ள முடியும். பிந்திக்கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

தலைவர்,
வழங்கல் சபை,
**முதியோர்களுக்கான தேசிய செயலகம்,**
2 ஆவது மாடி, D பிரிவு,
செத்சிறிபாய 2 ஆவது கட்டிடம்,
பத்தரமுல்லை.
2023.03.14

---

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### இலங்கை போக்குவரத்து சபைக்கு பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ், பட்டரிகள் தொடர்பான ஒயில் சீல்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை வழங்கல்

**Procurement No.: SMOT/04/11/SLTB/12**

1. 2023.04.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் 30 நாட்கள் கடன் அடிப்படையில் பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ், பட்டரிகள் தொடர்பான ஒயில் சீல்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். 2023.03.14 ஆம் திகதியிலிருந்து 2023.04.03 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 35,000 ரூபாவை செலுத்துவதன் மூலம், கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைப் பிரிவின் பிரதான பெறுகை முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
2.

| Description | Bid Security (Rs) |
|---|---|
| Supply of Oil Seals and Spares related to Brakes, Springs, Batteries till 31.12.2023 on 30 days credit basis | For bids offering<br>Spares for Brakes only 2,000,000.00<br>Spares for Springs only 200,000.00<br>Spares for Batteries only 200,000.00<br>Oil Seals only 600,000.00<br>All above items 3,000,000.00 |

3. பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ், பட்டரிகள் ஆகியவற்றிற்கான ஒயில் சீல்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் ஏக நியமிக்கப்பட்ட உள்ளூர் பிரதிநிதிகள்/ தரஅங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ், பட்டரிகள் ஆகியவற்றிற்கான பதிவு பெற்ற உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஆகியோர் மாத்திரமே இந்த விலைமனுவின் கீழ் பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ், பட்டரிகள் ஆகியவற்றிற்கான ஒயில் சீல்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கான விலைமனுக்களை முன்வைப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.
4. கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் 2023.03.24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
5. உரித்தான வெளிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக இறக்குமதி செய்வதற்கான உற்பத்தியாளர்களின் அதிகாரம் மற்றும் ஆதாரம் இல்லாத முன்வைப்புக்கள் அல்லது உள்ளூர் உற்பத்தியாளர்கள் எனின் முன்வைக்கப்பட்ட பிரேக்குகள், ஸ்பிரிங்ஸ், பட்டரிகள் உதிரிப்பாகங்கள் மற்றும் ஒயில் சீல்கள் இபோச இன் தொழில்நுட்பத்திற்கான பிரதி பொது முகாமையாளரினால் பரீட்சிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதிற்கான பதிவு அல்லது ஆவணச் சான்று இல்லாவிடில் அவைகள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.
6. (அ) எந்தவொரு விலைமனுதாரரின் முகவராக, உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவராகவிருப்பின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னராக 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்ட பொது ஒப்பந்தங்களுக்கமைவாக இலங்கை பொது ஒப்பந்தங்களின் பதிவாளருடன் அவ்வாறான நபர் பதிவு செய்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பிப்பதற்கு தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
   (ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு விலைமனுக்களை சமர்ப்பித்த பின்னரும் பெறுகையின் முன்னரும் உடனடியாக விலைமனுதாரர்கள் தம்மை பதிவு செய்தல் வேண்டும். அவ்வாறு உரித்தான பெறுகை குழுவிற்கு பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட மாட்டாது.
7. விலைமனுக்கள் 2023.07.04 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் முன்வைக்கப்பட்டுள்ள விலைகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளும் திகதியிலிருந்து மீதமாகவுள்ள மாதங்களுக்கு, 2023.12.31 ஆம் திகதி வரையும், நிலையாகவிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2023.08.04 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவுபெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதும் இபோச இன் முதல் எழுத்து மூலமான விண்ணப்பத்திலேயே திருப்பப்படாததும் நிபந்தனையற்றதுமான உத்தரவாத அடிப்படையில் அமைந்த விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தேவைப்படுத்தப்பட்டவாறு செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
9. விலைமனு ஆவணத்தின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பதிக்கப்படல் வேண்டும்.
10. விலைமனுக்கள் இரு பிரதிகளில் பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 7 ஆம் மாடியின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் இந்த நோக்கத்திற்காக பராமரிக்கப்படும் விலைமனுப் பெட்டியில் 2023.04.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில்/ தூதஞ்சல் சேவையில் மேலேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் "Supply of Oil Seals and Spares related to Brakes, Springs, Batteries for SLTB" என குறிப்பிடப்படல் வேண்டும்.
11. பத்தரமுல்ல, II ஆம் கட்டம், ''செத்சிரிபாய'', 07 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சுபெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**07 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

**விசாரணைகள்: பிரதான பெறுகை முகாமையாளர், இபோச பெறுகைப் பிரிவு.**
**தொலைபேசி: 011 7706110, 0771056204. தொலைபேசி/தொலைநகல்: 011 2588457**

# கிழக்கின் குரல்



## சேதனப்பசளை ஆய்வுகூட நிர்மாணம்; கிழக்கு ஆளுநருடன் கலந்துரையாடல்

தம்பலகாமம் குறூப் நிருபர்



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள முதலாவது சேதனப் பசளை உற்பத்தித்தர ஆய்வுகூடம் (ISO 17025 ) தொடர்பான கலந்துரையாடல், திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தின் ஆலோசனைக்கமைய, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் தலையீட்டுடன் இந்த ஆய்வுகூட நிர்மாணத்துக்கு சீனாவின் யுனான் மாகாணம் ஆதரவு வழங்குவதற்கு இணங்கியுள்ளது.

இந்நிலையில், யுனான் மாகாண வெளிவிவகார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகமும் ஆளுநருமான மசூ ஜின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றதுடன், சேதனப்பசளை உற்பத்தித்தர ஆய்வகத்தின் விதை ஆராய்ச்சிக்கு சர்வதேச நிலைச் சான்றிதழ் வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த சர்வதேச நிலைச் சான்றிதழ் வழங்கும் ஆய்வுகூடம் எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவது இதுவே முதல் முறையென்பதுடன், யுனான் மாகாண ஆளுநருக்கும் கிழக்கு மாகாண ஆளுநருக்குமிடையில் இது தொடர்பான உடன்படிக்கை மேற்கொள்ளப்படுவதாக கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் மே மாதம் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், ஆய்வுகூடப் பணிகளை இரு கட்டங்களாக மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

முதற்கட்டமாக மண், விதை, நீர், உரம் என்பன பரிசோதிக்கப்படுவதுடன், இரண்டாம் கட்டமாக சர்வதேச நிலைச் சான்றிதழ் பெறுவதற்கு மேற்கூறிய ஆய்வு செய்யப்படவுள்ளது.

இதன்போது, கிழக்கு மாகாணத்தின் அடுத்த ஐந்து வருடங்களுக்கான மூலோபாயத் திட்டத்தை யுனான் மாகாண ஆளுநரிடம் கிழக்கு மாகாண ஆளுநர் வழங்கினார்.

## அட்டப்பள்ளம் கடலரிப்பை கட்டுப்படுத்த நடவடிக்கை

நிந்தவூர் குறூப் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர், அட்டப்பள்ளம் பிரதேசத்தில் நிலவி வரும் கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் வகையில், அட்டப்பள்ளம் பிரதேசத்துக்கு கரையோரப் பாதுகாப்புக் குழுவினர் நாளை புதன்கிழமை (15) வருகை தரவுள்ளதாக, நிந்தவூர் பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் வை.எல்.சுலைமாலெவ்வை தெரிவித்தார்.

அட்டப்பள்ளம் பிரதேச கடலரிப்பை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு நிந்தவூர் பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் வை.எல்.சுலைமாலெவ்வையிடம் நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர் கே.எம்.எம்.ஜாரிஸ் வேண்டுகோளை விடுத்தார்.

இதைக் கவனத்தில் கொண்ட நிந்தவூர் பிரதேச சபையின் பிரதித் தவிசாளர், அப்பிரதேசத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டதுடன், இந்த விடயம் தொடர்பாக

கரையோரப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளின் கவனத்துக்கு அவர் கொண்டு வந்தார்.

இதனைத் தொடர்ந்து, அட்டப்பள்ளம் பிரதேசத்துக்கு கரையோரப் பாதுகாப்புக் குழுவினர் வருகை தந்து அங்குள்ள நிலைமையை ஆராயவுள்ளனர்.



## திருமலையில் கைகலப்பு; ஒருவர் காயம், இருவர் கைது

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு குடும்பங்களுக்கு இடையில் காணித்தகராறு காரணமாக ஏற்பட்ட கைகலப்பில் 28 வயதுடைய ஒருவர் காயமடைந்து கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், இக்கைகலப்புச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் இருவரை கடந்த சனிக்கிழமை (11) கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய், பேராறு பகுதியைச் சேர்ந்த 34, 48 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கைகலப்புச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (10) இடம்பெற்றதாகத் தெரிவித்த பொலிஸார், இது தொடர்பாக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டு. பொலிஸ் அத்தியட்சகருக்கு பிரியாவிடை வைபவம்



மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஆறு வருடங்களாக பொலிஸ் திணைக்களத்தின் உயர் பதவிகளை வகித்து கடைசியாக மாவட்ட பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் எல்.ஆர்.குமாரசிறிக்கு பிரியாவிடை அணிவகுப்பு மரியாதை நேற்று மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பொலிஸ் நிலையங்களினாலும் ஒழுங்கமைக்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையை பொலிஸ் அத்தியட்சகர் ஏற்றுக்கொண்டார்.

கொழும்பு, காலி, மட்டக்களப்பு உட்பட பல மாவட்டங்களில் உயர் பொலிஸ் அதிகாரியாகக் கடமை புரிந்த அவர், பொலிஸ் விசேட அதிரடிப்படையிலும் கடமையாற்றியிருந்தார்.

இந்நிகழ்வில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், உயர் பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## கல்முனை வடக்கில் சூழலை சுத்தமாக வைத்திருக்க பணிப்பு

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் இருப்பதால், பொதுமக்கள் தமது சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு, அப்பிராந்திய சுகாதாரப் பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கல்முனை பிரதேசத்தில் தற்போது இடையிடையே மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் இருப்பதாகவும், அப்பணிமனை தெரிவித்தது.

கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சேனைக்குடியிருப்பு, துறைவந்தியமேடு, நற்பிட்டிமுனை, மணல்சேனை ஆகிய பகுதிகளில் நுளம்புகள் பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், டெங்கொழிப்பு நடவடிக்கையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் டெங்கொழிப்பு கட்டுப்பாட்டுச் செயலணியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள், தனியார் கல்வி நிலையங்கள் உள்ளிட்ட பொது இடங்களையும் சுத்தமாக வைத்திருக்குமாறு, அப்பணிமனை கேட்டுக்கொண்டது.

இந்நிலையில், தமது சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்காதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்தது.



கிண்ணியா அல்ஜஸீரா மகளிர் அரபுக் கல்லூரியின் கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றதுடன், கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் மற்றும் பாரளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் இணைந்து இக் கட்டடத்தை திறந்து வைத்தனர். இத் திறப்பு விழாவில் கிண்ணியா அல்ஜஸீரா மகளிர் அரபுக் கல்லூரியின் தலைவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான நஸார் மௌலவி, மும்தாஸ் மௌலவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படம்: முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்)

## சாதனை மாணவர்களுக்கு ஒரே மேடையில் கௌரவம்



மட்டக்களப்பு கல்வி வலயத்தில் தரம்05 புலமைப்பரிசில் உட்பட கல்வியில் சாதனை படைத்த 381 மாணவர்களை ஒரே மேடையில் வைத்து கௌரவிக்கும் நிகழ்வு, மட்டக்களப்பு வின்சன்ட் தேசிய பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றது. இதில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறீகாந்த் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (படம்: மட்டக்களப்பு குறூப் நிருபர்)

## மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு

கல்லடி குறூப் நிருபர்

மல்யுத்தப் போட்டியில் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு தேசிய ரீதியில் வரலாற்றுச் சாதனையை முதல் தடவையாக பெற்றுக்கொடுத்த சிறைச்சாலை உத்தியோகத்தர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு, மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் ந.பிரபாகரன் தலைமையில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றது.

தேசிய ரீதியில் சாதனையை நிலைநாட்டிய இந்த வீரர்கள் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு, சான்றிதழ்கள் மற்றும் பணப்பரிசில்கள், நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அண்மையில் இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்ட மல்யுத்தப் போட்டியில் 9 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள், 4 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக 15 பதக்கங்களை மட்டக்களப்பு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பெற்று தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுச் சம்பியனாக தெரிவாகியுள்ளனர்.



அத்துடன், இம்முறை தேசிய ரீதியில் நடத்தப்பட்ட மல்யுத்தப் போட்டியில் மட்டக்களப்பு சிறைச்சாலை சார்பாக பங்குபற்றிய சிறைச்சாலை உத்தியோகத்தர் சிவபாலன் தேசிய ரீதியில் இலங்கை மல்யுத்த வீரர் குழாமில் இடம்பிடித்து இலங்கை சிறைச்சாலை திணைக்களத்துக்கும் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கும் பெருமை சேர்த்த நிலையில், அவரும் கௌரவிக்கப்பட்டார். இச்சாதனையை நிலைநாட்டுவதற்காக பயிற்சி வழங்கிய பயிற்றுவிப்பாளர் வே.திருச்செல்வம், சிறைச்சாலை அத்தியட்சகரினால் கௌரவிக்கப்பட்டதுடன், அவருக்கு பணப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.

## மாடு அறுக்கும் மடுவத்தின் பிரச்சினைகள் ஆராய்வு

மாளிகைக்காடு குறூப் நிருபர்

சம்மாந்துறை பிரதேச சபையினால் பராமரிக்கப்படும் மாடறுக்கும் மடுவத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம், அப்பிரதேச சபைத் தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் தலைமையில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (10) நடைபெற்றது.

இறைச்சிக்காக மாடுகளை அறுக்கப்படுகின்ற போது ஏற்படும் பிரச்சினைகள் உள்ளிட்டவை தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், அது தொடர்பான கருத்துகளும் முன்வைக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம்.எம். கபீர், கால்நடை வைத்திய அதிகாரி ஏ.எம்.ஜிப்ரி, சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்



மாளிகைக்காடு குறூப் நிருபர்

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயத்தினுடைய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் பாடசாலை அதிபர் எம்.சீ.நஸ்லின் றிப்காவின் தலைமையில் அப்பாடசாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (12) நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு அதிதிகளாக சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலீக், இப்பாடசாலையின் பழைய மாணவரும் பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.எல்.எம்சலீம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் பங்களிப்புச் செய்யப்படுமென, அதிபர் தெரிவித்தார்.

## காட்டுயானை தாக்கி ஒருவர் பலி

றொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் 10ஆம் கட்டை, கட்டுக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (12) காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெல்கம் விகாரைப் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய மாதர ஆராச்சிவிதானகே ஹரிச்சந்ர என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வெல்கம் விகாரைப் பகுதியிலிருந்து சைக்கிளில் வயலுக்குச் சென்ற போதே, இவர் இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கியதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்முனையில் ஜனாஸா பிரிவு அங்குரார்ப்பண நிகழ்வு

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

கல்முனை 'யங் பேர்ட்ஸ்' விளையாட்டுக்கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஜனாஸா பிரிவு அங்குரார்ப்பண நிகழ்வு, அக்கழகத்தின் தலைவர் எம்.முஹம்மது மர்சூக் தலைமையில் கடந்த சனிக்கிழமை (11) நடைபெற்றது.

கல்முனைக் கடற்கரை வீதி, மீனவர் சங்கக் காரியாலயத்துக்கு அருகில் இந்த நிகழ்வு நடைபெற்றதுடன், ஜனாஸா பிரிவுக்குரிய உதவிப் பொருட்களை ஜனாஸா பிரிவினரிடம் விளையாட்டுக் கழகத்தினர் வழங்கி வைத்தனர்.

ஜனாஸா நலன்புரிச் சேவைக்குத் தேவையான உதவிப் பொருட்களையும் விளையாட்டுக்கழகத்தின் உறுப்பினர்கள், பிரதேச அரசியல் பிரமுகர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் வழங்கி உதவியுள்ளனர்.





ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நட்புறவு கிரிக்கெட் போட்டி பெலவத்த புத்ததாச மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களின் அணி உட்பட ஆறு அணிகள் பங்கேற்றன. இந்தப் போட்டியில் வெற்றியீட்டிய அணி வெற்றிக் கிண்ணத்தை அந்தக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசமிடம் இருந்து பெற்றுக்கொண்டபோது பிடிக்கப்பட்ட படம்.

(படம்: விமல் கருணாதிலக்க)

# பரபரப்பான டெஸ்டில் நியூசிலாந்திடம் இலங்கை கடைசிப் பந்தில் தோல்வி

## உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதி வாய்ப்பையும் இழந்தது



கேன் வில்லியம்சனின் அபார சதத்தின் உதவியோடு இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி கடைசி பந்தில் 2 விக்கெட்டுகளால் பரபரப்பு வெற்றியை பெற்றது.

இந்தத் தோல்வியின் மூலம் இலங்கை அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை பறிகொடுத்தது. இந்த இறுதிப் போட்டிக்கு முன்னேற இலங்கை அணி நியூசிலாந்துக்கு எதிரான தொடரை முழுமையாகக் கைப்பற்ற வேண்டி இருந்தது.

கிறைசேர்ச்சில் நடைபெற்ற போட்டியின் இறுதி நாளான நேற்று (13) பெரும்பாலான நேரம் மழையால் தடைப்பட்டது. எனினும் 285 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாவது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு முன்னாள் தலைவர் கேன் வில்லியம்சன் கைகொடுத்தார்.

சூரியன் மறையும் தருணம் வரையில் நீடித்த போட்டியில் ஆட்ட நேரம் முடிவதற்கு கடைசி ஓவர் இருக்கும்போது நியூசிலாந்து அணி 2 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 7 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தது.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog

எனினும் தனது 27ஆவது சதத்தை பூர்த்தி செய்து களத்தில் இருந்த வில்லியம்சன் அசித்த பெர்னாண்டோ வீசிய நான்காவது பந்தில் பௌண்டரி விளாசியதால் கடைசி இரண்டு பந்துகளுக்கும் ஒரு ஓட்டத்தையே பெற வேண்டி ஏற்பட்டது. ஐந்தாவது பந்தில் வில்லியம்சன் ஓட்டம் பெறாத நிலையில் கடைசிப் பந்து துடுப்பில் படாமல் விக்கெட் காப்பாளரிடம் போனபோதும் அதற்கு ஓட்டத்தைப் பெற்று நியூசிலாந்தின் வெற்றியை உறுதி செய்தார்.

இதன்படி நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 285 ஓட்டங்களை எட்டியது. வில்லியம்சன் 194 பந்துகளுக்கு 11 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் ஆட்டமிழக்காது 121 ஓட்டங்களை பெற்றார். அவர் 33 ஓட்டங்களை பெற்றிருந்தபோது விக்கெட் காப்பளர் நிரோஷன் திக்வெல்ல கைக்குக் கிடைத்த பிடியெடுப்பை தவறவிட்டது இலங்கைக்கு பெரும் பின்னடைவாக மாறியது.

இதில் கடைசி நாள் ஆட்டத்தில் 53 ஓவர்கள் நிர்ணயிக்கப்பட்ட நிலையில் நியூசிலாந்து வெற்றிக்கு ஓவருக்கு 4.85 ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்டது. ஆரம்பத்தில் நியூசிலாந்து அணி விக்கெட்டை காத்து மந்தமாக ஆடியபோதும் டரில் மிட்சல் 4 சிக்சர்களுடன் 86 பந்துகளில் பெற்ற 81 ஓட்டங்களும் நியூசிலாந்து வெற்றியை நெருங்க உதவியது.

இதன்போது வில்லியம்சன் மற்றும் மிட்சல் இருவரும் 4 ஆவது விக்கெட்டுக்காக 26 ஓவர்களுக்குள் 142 ஓட்ட இணைப்பாட்டத்தை பகிர்ந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

கடைசி நாள் ஆட்டம் ஆரம்பித்தபோது பிரபாத் ஜயசூரி டொம் லதம் (25) மற்றும் ஹென்ரி நிகொலஸின் (20) விக்கெட்டுகளை வீழ்த்தியபோதும் அந்த உத்வேகத்தை தக்கவைத்துக் கொள்ள முடியாமல்போனது.

இலங்கை சார்பில் அசித்த பெர்னாண்டோ 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு பிரபாத் ஜயசூரிய 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்த டெஸ்டில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸுக்காக 355 ஓட்டங்களை பெற்று முதல் இரு நாட்களிலும் ஆதிக்கம் செலுத்தியபோதும் டரில் மிட்சலின் சதத்தின் உதவியோடு நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 373 ஓட்டங்களை பெற்றதால் ஆட்டம் திசைதிரும்பியது.

எனினும் அஞ்சலோ மத்தியூஸ் சதம் பெற்று இலங்கை இரண்டாவது இன்னிங்ஸில் 302 ஓட்டங்களை பெற்ற நிலையில் கடைசி நாளில் இலங்கை அணி வெற்றி எதிர்பார்ப்புடனேயே களமிறங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து அணி டெஸ்ட் போட்டிகளில் நான்காவது இன்னிங்ஸில் பெற்ற மூன்றாவது அதிகூடிய வெற்றி இலக்காக இது சாதனை படைத்துள்ளது.

இந்த டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணி 1–0 முன்னிலை பெற்றிருக்கும் நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மார்ச் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

### போட்டியின் சுருக்கம்

**இலங்கை (முதல் இன்னிங்ஸ்) – 355 (92.4)** குசல் மெண்டிஸ் 87, திமுத் கருணாரத்ன 50, அஞ்சலோ மத்தியூஸ் 47, டிம் சௌதி 5/64, மட் ஹென்ரி 4/80

**நியூசிலாந்து (முதல் இன்னிங்ஸ்) – 373 (107.3)** – டரில் மிட்சல் 102, மட் ஹென்ரி 72, டொம் லதம் 67, அசித்த பெர்னாண்டோ 4/85, லஹிரு குமார 3/76

**இலங்கை (இரண்டாவது இன்னிங்ஸ்) – 302 (105.3)** அஞ்சலோ மத்தியூஸ் 115, தனஞ்சய டி சில்வா 47★, பிளயர் டிக்னர் 4/100, மட் ஹென்ரி 3/71

**நியூசிலாந்து (இரண்டாவது இன்னிங்ஸ்) – 285/8 (70)** – கேன் வில்லியம்சன் 121★, டரில் மிட்சல் 81, அசித்த பெர்னாண்டோ 3/63, பிரபாத் ஜயசூரிய 2/92

# உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிக்கு இந்தியா தகுதி



நியூசிலாந்துக்கு எதிராக கிறைஸ்சேர்ச்சில் நேற்று நிறைவடைந்த முதலாவது டெஸ்டில் இலங்கை அணி தோல்வியை சந்தித்ததை அடுத்து வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவுடன் மோத இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டிக்கு முன்னேற இலங்கை அணி நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்ட வேண்டி இருந்தது.

இந்நிலையில் வரும் ஜூன் 7ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் ஆடவுள்ளன.

# உலக சாதனை கைதியின் வழக்கு மீள் விசாரணை



உலகில் நீண்ட காலம் மரண தண்டனை கைதியாக உள்ள ஜப்பானின் முன்னாள் குத்துச்சண்டை வீரரான 87 வயது இவாவோ ஹகமடா மீதான வழக்கை 55 ஆண்டுகளின் பின் மீண்டும் விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தனது முதலாளி மற்றும் அவரது குடும்பத்தை கொலை செய்ததாக 1968 ஆம் ஆண்டில் ஹகமடா குற்றங்காணப்பட்ட நிலையில் தாம் வற்புறுத்தப்பட்டு வாக்கு மூலம் பெற்றதாக பின்னர் குறிப்பிட்டிருந்தார்.

'இந்த நாளுக்காக 57 ஆண்டுகளாக நான் காத்திருந்தேன்' என்று ஹகமடாவுக்காக தொடர்ந்து பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த அவரது சகோதரி ஹிடேகோ தெரிவித்துள்ளார்.

உலகில் நீண்ட காலம் மரண தண்டனை கைதியாக இருப்பவர் என ஹகமடா 2014 ஆம் ஆண்டு கின்னஸ் சாதனை படைத்தார்.

1936 ஆம் ஆண்டு பிறந்த ஹகமடா தனது முதலாளி, அவரது மனைவி மற்றும் இரு பதினம் வயது குழந்தைகளை கொலை செய்தது மற்றும் கொள்ளையில் ஈடுபட்டதற்காகவே 1968 ஆம் ஆண்டு மரண தண்டனைக்கு முகம்கொடுத்தார்.

குற்றம் நிகழ்ந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் கிடைத்த இரத்தக் கறை படிந்த ஆடை ஒன்று மாத்திரமே அவருக்கு எதிரான ஆதாரமாக முன்வைக்கப்பட்டிருந்தது.

ஜப்பானில் ஒரு சில மணி நேர அறிவித்தலில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதோடு இதனால் அவர் தனிமைச் சிறையிலேயே அதிக காலத்தை செலவிட்டுள்ளார்.

# வியன்னாவில் ஆர்ப்பாட்டம்



ஆப்கானிஸ்தானின் ஆட்சியைப் பொறுப்பெடுத்த பின்னர் பெண்கள் மற்றும் சிறார்களுக்கு எதிராகத் தலிபான்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபனை தெரிவித்து வியன்னாவில் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

ஆப்கான் புலம்பெயர் அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டம் வியன்னாவிலுள்ள ஐ.நா கட்டிடத்தின் நுழைவாயிலுக்கு அருகில் நடைபெற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆப்கானிய பெண்கள் கலந்து கொண்டனர்.

## சர்வதேச செய்திகள்

# ஒஸ்காரில் ஆசிய நடிகைக்கு முதல்முறை 'சிறந்த' விருது

## தமிழ்நாட்டு ஆவணப்படம், ஆர்.ஆர்.ஆர் விருது







அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற 95ஆவது ஒஸ்கார் விருது விழாவில் முதல் ஆசிய பெண்ணாக சிறந்த நடிகைக்கான விருதை மிஷெல் இயோ வென்றார்.

'எவ்ரிதிங் எவ்ரிவெயார் ஓல் அட் வன்ஸ்' திரைப்படத்திற்காகவே அவர் இந்த விருதை வென்றார். இம்முறை ஒஸ்காரில் இந்தத் திரைப் படம் சிறந்த படம், இயக்குநர் மற்றும் திரைக்கதை என மொத்த ஏழு விருதுகளை வென்றது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஹொலிவுட் திரையுலகுக்கு திரும்பிய பிரண்டன் பிரேசர் சிறந்த நடிகர் விருதை தட்டிச் சென்றார். அவர் நடித்த 'தி வேல்' என்ற திரைப்படத்திற்காகவே விருது கிடைத்தது.

ஜோர்ஜ் ஒப் தி ஜங்கில் மற்றும் தி மம்மி போன்ற திரைப்படங்களில் நடித்து ஹொலிவுட் நட்சத்திரமாக வலம்வந்த பிரேசர், அண்மைக்காலத்தில் தனது நட்சத்திர அந்தஸ்த்தை தக்கவைக்க முடியாமல் சிறு சிறு வேடங்களிலேயே நடித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று இம்முறை ஒஸ்கார் விருதில் ஆசியாவுக்கு அதிக விருதுகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிறந்த பாடல் பிரிவில் இந்தியாவில் ராஜமவுலி இயக்கத்தில் வெளியான ஆர்.ஆர்.ஆர் திரைப்படத்தின் 'நாட்டு நாட்டு' பாடலுக்கு ஒஸ்கர் விருது கிடைத்துள்ளது. கீரவாணி இசையில் சந்திரபோஸ் வரிகளில் உருவான இந்தப் பாடல் ஏற்கனவே கோல்டன் குளோப் விருதை வென்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் படமாக்கப்பட்ட 'தி எலிபென்ட் விஸ்பர்ஸ்' என்ற ஆவணப் படம், சிறந்த சிறிய ஆவணப்படத்திற்கான விருதை வென்றது.

இந்தப் பிரிவில் வெற்றிபெற்ற முதல் இந்திய ஆவணப்படம் இதுவாகும்.

தமிழ்நாட்டின் முதுமலைப் புலிகள் பாதுகாப்புப் பகுதியில் ஆதரவற்ற 2 யானைக்குட்டிகளைத் தத்தெடுத்து வளர்க்கும் குடும்பத்தைப் பற்றியதாக இந்த ஆவணப் படம் இருந்தது.

சிறந்த துணை நடிகருக்கான விருதை, எவ்ரிதிங் எவ்ரிவெயார் ஓல் அட் வன்ஸ் திரைப்படத்தில் நடித்த வியட்நாமியர் கெ ஹுய் சுவான் தட்டிச் சென்றார். அதே திரைப்படத்தில் நடித்த ஜேமி லீ கர்ட்டிஸ் சிறந்த துணை நடிகைக்கான விருதைப் பெற்றார்.

# உக்ரைன், ரஷ்யாவுக்கு போரில் பாரிய இழப்பு



உக்ரைனின் பக்மூத் நகரில் உக்கிர மோதல் நீடித்து வரும் நிலையில் எதிர்த்தரப்பின் பெரும் இழப்புகள் பற்றி ரஷ்யா மற்றும் உக்ரைன் இரு தரப்பும் குறிப்பிட்டுள்ளன.

இந்த கிழக்கு உக்ரைனிய நகரை கைப்பற்ற ரஷ்யா முயன்று வரும் நிலையில் மோதல் தீவிரம் அடைந்துள்ளது.

கடந்த சில நாட்களில் ரஷ்யாவின் 1,100க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டு மேலும் பலர் கடுகாயம் அடைந்திருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

மறுபுறம் கடந்த 24 மணி நேரத்திற்குள் 220க்கும் அகதிமான உக்ரைனிய படையினரைக் கொன்றதாக ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்தக் கூற்றுகளை சுயாதீனமாக உறுதி செய்ய முடியவில்லை என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பக்மூத் நகரை கைப்பற்றும் பட்சத்தில் ஒட்டுமொத்த டொனட்ஸ்க் பிராந்தியத்தை கட்டுப்படுத்தும் ரஷ்யாவின் இலக்கு சாத்தியமாகும் வாய்ப்பு உள்ளது. கடந்த செப்டெம்பரில் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தனது ஆட்புலத்திற்குள் இணைத்த கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் நான்கு பிராந்தியங்களில் ஒன்றாக டொனட்ஸ்க் உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.